Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily






# 2/3 பெரும்பான்மையைப் பெற்று தமிழரின் பலத்தை நிரூபிப்போம்

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சூளுரை

யாழ்ப்பாணம், ஒக. 19

"வட மாகாணசபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி சர்வதேச சமூகத்துக்கு நல்லதொரு செய்தியை நாம் எடுத்துக் கூற வேண்டும். இது தான் எமது அடுத்த கட்ட நகர்வின் அடித் தளமாக இருக் கும்."

இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், சுரேஷ்பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டாக வலியுறுத்தினர்.

வடமராட்சியில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலிலேயே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

"வட மாகாணசபைத் தேர்தலை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் வேட்பாளர்களை ஆதரித்து தங்கள் வாக்குகளை அளிக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் தற்போது ஈ.பி.டி.பியின் அராஜகம் அதிகரித்துள்ளதால் அவர்களுக்கான மக்கள் செல்வாக்கு குறைவடைந்து செல்கின்றது. அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஈ.பி.டி.பிக்குமிடையில் பனிப்போர் மூண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் அணி திரண்டு தமிழ்த் தேசியக் கூட்ட

தொடர்ச்சி: பக்கம் 21

# வடக்கு மாகாணத்துக்கு தேசிய திட்டமிடல் குழு

## சபை அதிகாரங்களை பறிக்க முயற்சி



கொழும்பு, ஒக.19

வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், வடபகுதிக்கான தேசிய பௌதீக திட்டமிடல் குழுவொன்று அவசர அவசரமாக உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை பத்திர முல்லையில் உள்ள நகர அபிவிருத்தி அமைச்சின் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் 2030ஆம் ஆண்டில் 'ஆசியாவின் ஆச்சரியம்

தொடர்ச்சி: பக்கம் 21

# கூட்டமைப்பு உறுப்பினர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஆதரவாக பிரசாரம் செய்துவிட்டுத் திரும்பிய கூட் மைப்பு உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி வதிரிச் சந்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜெப்றிக்கோ என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவர் ஆவார். இவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான பா.கஜதீபனுக்கு ஆதரவாக

தொடர்ச்சி: பக்கம் 21

# வடக்குத் தேர்தலில் நம்பிக்கை இல்லை

## அரசைச் சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



சென்னை, ஒகஸ்ட். 19

"வட மாகாண சபைத் தேர்தல் நீதியாக நடைபெற போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றமளிக்கிறது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, டில்லிக்கு செல்லும் வழியில் நேற்று சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

"தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனரே" என சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு "இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் மாத்திரமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று ரணில் பதிலளித்தார்.

"வடமாகாண சபைத் தேர்தல் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதே எதிர்க்கட்சிகள் அனைத்தினதும் விருப்பமாகும். இருப்பினும், வட மாகாண சபைத் தேர்தல் நீதியாக நடைபெற போதுமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை. இது எமக்கு ஏமாற்றமளிக்கிறது.

இலங்கை அரசால் தமிழ், முஸ்லிம்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். 2014ஆம் ஆண்டில் இலங்கையில் பொதுத் தேர்தலொன்றை நடத்த வலியுறுத்தி பிரசாரம் மேற்கொள்ளப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-சி)

# தேர்தல் வன்முறை 129 ஆக உயர்வு

கொழும்பு,ஒக.19

தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது தொடக்கம் இதுவரை 129 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

இதில் குருநாகல் மாவட்டத்தின் நிக்கவரட்டிய மற்றும் பிங்கிரிய பகுதிகளிலேயே அதிக வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாகதாக்குதல், வானத்தை நோக்கி சுடுதல், அச்சுறுத்தல், கட்சி அலுவலகங்கள் தாக்கப்படல் போன்ற சம்பவங்கள் கடந்த வாரத்தில் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

ஒரே கட்சி ஆதரவாளர்கள் இடையே மோதல் அதிகரித்து வருகிறது.

யாழ். நெடுந்தீவு, மாத்தளை - நாவல, கண்டி - வத்தேகம ஆகிய பகுதிகளில் தாக்குதல்

தொடர்ச்சி; பக்கம் 21

# 22ஆயிரம் விண்ணப்பம் நிராகரிப்பு

கொழும்பு, ஒக.19

தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பித்தவர்களில், 22ஆயிரத்து 159 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல்கள் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் தேர்தல் திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் ஒரு லட்சத்து 33ஆயிரத்து 542 பேர் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருந்தனர். இதில் ஒரு லட்சத்து 11ஆயிரத்து 383 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 22 ஆயிரத்து 159 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்திலிருந்தே அதிகளவானோர்

தொடர்ச்சி: பக்கம் 21

# ஐ.நா. விசாரணையை வலியுறுத்தி யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்

## 27 ஆம் திகதி காணாமல்போனோரின் உறவுகள்

கொழும்பு, ஒக. 19

காணாமல்போனோர் தொடர்பில் ஐ.நாவின் விசாரணையை வலியுறுத்தி எதிர்வரும் 27 ஆம் திகதி யாழில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

காணாமல்போனோரைக் கண்டறியும் குழு, காணாமல் போனோரின் குடும்ப ஒன்றியம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு ஆகியன உட்பட மேலும் சில சிவில் அமைப்புகள் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையையொட்டி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு முன்பாக காலை 10 மணிக்கு இப்போராட்டம் நடைபெறும்.

இதன் பின்னர் காணாமல் போனோர் தொடர்பிலான 13 கோரிக்கைகள் அடங்கிய மனு நவநீதம்பிள்ளையிடம் கையளிக்கப்படும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் எஸ்.மகேந்திரன் நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

இதில் எழிலனின் மனைவியும், கூட்டமைப்பு வேட்பாளருமான ஆனந்தியும் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது.

★ காணாமல்போனோர் தொடர்பில் ஐ.நா. மட்டத்திலான விசாரணை அவசியம்.

★ இது விடயம் சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையை வலியுறுத்தவேண்டும் என்பது உட்பட முக்கிய சில கோரிக்கைகள் குறித்த மனுவின் ஊடாக முன்வைக்கப்படவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் சிவில் அமைப்புகளைச் சந்தித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பேச்சு நடத்தவுள்ளார் என்றும் இந்தக் கலந்துரையாடலில் காணாமல்போனோர் தொடர்பிலான அமைப்புகள் பங்குபற்றும் என்றும் மகேந்திரன் குறிப்பிட்டார்.

# போர்குற்றவிசாரணையை கோரினால் இலங்கை நிராகரிக்கும்

## நவிப்பிள்ளையிடம் கோத்தா தெளிவுபடுத்துவார்

கொழும்பு.ஒக.19

எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, போர் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு இணங்குமாறு இலங்கையைக் கோரினால் அதனை முற்றாக நிராகரிப்பது என அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்

தொடர்ச்சி: பக்கம் 21

# விமானப்படையினர் இருவரை சுட்டுக்கொன்றார் கோப்ரல்

## அவரும் தற்கொலை முயற்சி; திருமலையில் சம்பவம்

கொழும்பு, ஒக. 19

விமானப்படையினர் இருவரை சுட்டுக் கொலைசெய்த சக விமானப் படை அதிகாரி தானும் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் திருமலை சீனக்குடா மாபிள் உல்லாச விடுதியில் நேற்று இடம்பெற்

தொடர்ச்சி: பக்கம் 21

# தாக்கியது ஈ.பி.டி.பியே

## காயமடைந்த கூட்டமைப்பு ஆதரவாளர், உறவினர்கள் வாக்குமூலம்

நெடுந்தீவில் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபட்ட தம்மை, ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்களே தாக்கினர் என்று காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ரவி, அவரது மனைவி மற்றும் சம்பவத்தை நேரில்கண்ட அயலவர்கள் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவில்லை. விசாரணையும் செய்யவுமில்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் விந்தன் கனகரத்தினத்துக்கு ஆதரவாக நெடுந்தீவு ஒற்றைப்பனையடியில் ஆதரவாளர்கள் கடந்த வியாழன் பிரசாரத்தில் ஈடுபட்ட நிலையில், அன்றிரவு வீடு புகுந்து ரவி என்பவர் மீதும் அங்கிருந்த மற்றும் இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. கடுங்காயங்களுக்கு உள்ளான ரவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் விந்தன் கனகரத்தினம் உட்பட ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டனர். அதன்போதே ரவி, அவரது மனைவி மற்றும் அயலவர்கள் தாக்குதல் நடத்தியது ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் மற்றும் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று தெரிவித்தனர்.

"எதற்காகத் தாக்குகிறீர்கள்? எதுவாக இருந்தாலும் பொலிஸாருடன் வந்து கேளுங்கள்" என்று தாம் கூறிய போதும் அதனைப் பற்றி அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.

பொலிஸாருக்கு அறிவித்தோம். அவர்கள் வரவில்லை. கிராம அலுவலரும் வரவில்லை. அம்புலன்ஸுக்கும் அறிவித்தோம். அதுவும் வரவில்லை. அதனால் இரவு நேரம் அச்சத்துடனேயே காயமடைந்த ரவி என்று அழைக்கப்படும் ரணசிங்க ஆரிய சேனவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். பொலிஸாருக்கு நாம் சம்பவத்தைத் தெரிவித்தும் எதற்காக அவர்கள் முறைப்பாடு எடுக்கவில்லை என்று தெரியவில்லை என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவருக்குரிய வாகனம் மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள்களில் வந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். பலர் அவ்வாறு வந்திருந்தபோதும் அவர்களில் பிரதேச சபைத் தலைவர் ராஜீவ், சுதன், மோகனதாஸ், றஞ்சன், எட்வேட் ராஜா மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சாரதி அப்பன் ஆகியோரையே தாம் இனங்கண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நெடுந்தீவில் பல இடங்களுக்கும் சென்ற சிறிதரன் எம்.பி. மற்றும் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் மக்களைச் சந்தித்தோடு தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டனர். குடவிலி, முதலாம் வட்டாரம், ஒற்றைப் பனையடி, புதுக்கடை மேற்கு, சாராப்பிட்டி, யுவானியார் கோயிலடி, மத்திய சந்தை எனப் பல இடங்களிலும் கூட்டமைப்புக்கு ஆதரவாகவும், விந்தனுக்கு ஆதரவாகவும் பிரசாரம் இடம்பெற்றது.

மக்கள் மத்தியில் சிறிதரன் எம்.பி. உரையாற்றுகையில், நெடுந்தீவில் பல இடங்களில் அபிவிருத்திகளைச் செய்துள்ளோம் என்று கூறுகிறார்கள். ஆனால் இங்குவந்து பார்க்கும் போதுதான் தெரிகிறது. எந்த அபிவிருத்தியும் இடம்பெறவில்லை என்று. வீதிகள் திருத்தப்படாது மோசமாகவுள்ளன. நெடுந்தீவுக்கான படகுச் சேவை சீராகவில்லை. மழை நேரத்தில் படகின் உட்புற, ஒழுக்குகளுக்கு மத்தியில் நனைந்தவாறு படகில் பயணம் செய்ய வேண்டியநிலை காணப்படுகிறது. நெடுந்தீவு சேவைக்கு சிறப்பானதொரு படகாவது அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இங்குள்ள மூலிகைகளைக் கொண்டு ஏதாவது ஒரு தொழிற்சாலையாவது அமைத்திருக்கலாம். எதுவுமே நடக்கவில்லை. கூட்டமைப்புக்கு வாக்களித்து அதிக ஆசனங்களைப் பெற்று அதன் மூலமாக நாம் அபிவிருத்திகளை முன்னெடுக்க அனைவரும் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் - என்றார்.

## கொழும்பு மாநகர சபை ஆவணங்கள் பொரளை மயானத்தில் தீயிட்டு எரிப்பு



கொழும்பு, ஓக. 19

கொழும்பு மாநரக சபையின் முக்கிய ஆவணங்கள் பொரளை மயானத்தில் வைத்து நேற்று முன்தினம் எரியூட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தகவல் அறிந்த கொழும்பு மாநகர சபை எதிர்கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பொரளைக்குச் சென்று ஆவணங்களை மீட்டு அதனை மாநாகர முதல்வர் முஸம்மிலிடம் ஒப்படைத்துள்ளனர்.

2008 - 2013 வரையான முக்கிய ஆவணங்கள் இவ்வாறு எரியூட்டப்பட்டுள்ளன.

இது குறித்து கொழும்பு மாநாகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கருத்து தெரிவிக்கையில், சம்பவம் குறித்து உள்ளக விசாரணை நடத்துமாறு மாநகர சபை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும்,

நக்ர சபையின் அதிகாரிகள் சிலரே இந்த ஆவணங்க்ளை எரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

> குறிப்பிட்ட சில ஆவணங்களை அழிக்க மாநகர ஆணையாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ள போதும், நடைமுறைகளை மீறி தேவையான ஆவணங்களும் இதில் எரியூட்டப் பட்டுள்ளன

குறிப்பிட்ட சில ஆவணங்களை அழிக்க மாநகர ஆணையாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ள போதும், நடைமுறைகளை மீறி தேவையான ஆவணங்களும் இதில் எரியூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 30 வருடங்களின் பின் மல்வில் கிருஷ்ணருக்கு சமுத்திர தீர்த்தம்

தென்மராட்சி, ஓக.19

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலய அலங்காரத் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெறும்.

சமுத்திர தீர்த்தத் திருவிழா 30 வருடங்களின் பின்னர் நாளை ஆழியவளைக்கடலில் இடம் பெறவுள்ளது.

சமுத்திர தீர்த்தத்துக்கு ஆலயத்திலிருந்து புறப்பட்டு புளியடி கரந்தாய், புதுக்காடு, சோரன்பற்று, மாசார், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை ஊடாக ஆழியவளை சென்று அங்குள்ள கடலில் சமுத்திர தீர்த்தமாடி அங்கிருந்து புறப்பட்டு- கொடுக்கிளாய், கொற்றாண்டார், சின்னமண்டயாய், இயக்கச்சி ஊடாக ஆலயம் வந்தடையும் மறுநாள் கேணித் தீர்த்தம் இடம்பெறும். (ந-9)

## சீனக் குற்றவாளிகள் இலங்கையில் தஞ்சம்

கொழும்பு, ஓக.19

இலங்கையில் சீனாவைச் சேர்ந்த குற்றவாளிகள் நடமாடுவதாக பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக நிதி மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளதாகவும், அவர்கள் இங்கும் நிதி மோசடிகளில் ஈடுபட வாய்ப்பு இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளது.

இவ்வாறு இலங்கைக்குள் நுழைபவர்களில் பெரும்பாலானவர்கள் தாய்வான் மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் எனவும், 2010 ஜனவரி தொடக்கம், 2013 ஜூலை வரையான காலப் பகுதியில், இலங்கையில் நிதி தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 136 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட 136 பேரில் 105 பேர் சீனா மற்றும் தாய்வானைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

> 26,404 சீனர்களுக்கு இலங்கையில் வேலை செய்வதற்காக நுழைவு விசா வழங்கப்பட்டிருந்தது.

2005 தொடக்கம், 2011 வரையான காலப்பகுதியில் 26,404 சீனர்களுக்கு இலங்கையில் வேலை செய்வதற்காக நுழைவு விசா வழங்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு இலங்கை வந்த சீன அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து நடத்திய தேடுதல் ஒன்றில், 2 மில்லியன் டொலர் நிதியை மோசடி செய்த கும்பலை சேர்ந்த 17 சீனர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவுக்கான அழைப்பை பீரிஸ் இன்று கையளிக்கிறார்

சென்னை.ஓக.19

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பதற்கான அழைப்புக் கடிதத்தை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இன்று உத்தியோக பூர்வமாகச் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென பீரிஸ் நேற்று இந்தியாவுக்குப் பயணமானார்.

நேற்று மாலை புதுடில்லி சென்றடைந்த பீரிஸ் இன்று பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திப்பார் எனவும், இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவுகள் மற்றும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பிலான 13 ஆவது திருத்தம், வடமாகாண தேர்தல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தையும் பீரிஸ் சந்தித்துப் பேசவுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 முதல் 17ஆம் திகதி வரை பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்தியா மாநாட்டில் பங்கேற்காது என பிரதமர் அறிவிக்க வேண்டும் என்றும், இல்லை என்றால் தமிழகம் முழுவதும் இல்லங்களில் கறுப்புக்கொடி ஏற்றி, ரயில் மறியல் போராட்டம் நடத்துவோம் எனவும் தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிளிநொச்சி விபத்தில் இரு பொலிஸார் காயம்

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

இருவரும் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கிளிநொச்சி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு- முறிகண்டி வீதியில் களவாக தேக்கு மரங்களை ஏற்றி வந்த டிப்பர்ரக வாகனத்தை அவதானித்த மாங்குளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்த போதே இவ்விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தை அடுத்து வாகன சாரதி தப்பியோடிய நிலையில் டிப்பர் ரக வாகனம் தேக்கு மரக்குற்றிகளுடன் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இரு பொலிஸாரும் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (400)

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம்.ஓக.19

கோப்பாய் வடக்கு சக்கர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தப் பெரும் திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஓ-14)

உங்கள் முகம்,மேனி பளபளக்க வேண்டுமா? எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாற வேண்டுமா?
இன்றே பாவியுங்கள்.

'றோயல் ஒலிவ் ஒயில்'
(Product of Spain)

ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567




Re Packed By:
Royal Industries
No.221/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-12.
T.P.: 077 727 7670

அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

| புதியவரவு சல்வார் | கொட்டன் சாறி | ஆண்களுக்கான சேட் |
|---|---|---|
| 1200/= தொடக்கம், | 440/= தொடக்கம் | -390/= தொடக்கம், |

இந்தியன் ரொப்- 400/= தொடக்கம்.

இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள



(31281)
114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021-2219393

## நெடுந்தீவில் கூட்டமைப்பு பிரசாரம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வருடங்களின் பின்னர் நெடுந்தீவுக்கு நேற்றுச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டது. வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர் விந்தன் கனகரத்தினத்துக்கு ஆதரவான பிரசாரத்தினைக் காணலாம்.(4-21)

# வடக்கு மக்களின் மீது ஜனாதிபதி அதிக அக்கறை

### சாவகச்சேரி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

தென்மராட்சி, ஓக.19

வடக்கு மாகாண மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடிய கவனம் செலுத்தி வருகின்றார். இவ்வாறு அமைச்சர் சுசில் பிரமஜயந்த சாவகச்சேரியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்தார்.



குன்றும் குழியுமாகக் காணப்பட்ட ஏ-9 வீதி இன்று காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. இன்றைய இளம் சமுதாயத்தினர் காணாத ரயில் சேவை எதிர்வரும் செம்ரெம்பர் முதலாம் திகதி கிளிநொச்சிக்கு வரவுள்ளது. அடுத்த தமிழ்- சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் அது யாழ்ப்பாணம் வரை வரவுள்ளது. அதன்பின்னர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை போன்ற இடங்களில் வாழும் உங்கள் உறவுகளை புகையிரதத்தில் சென்று பார்வையிட முடியும்.

> இன்றைய இளம் சமுதாயத்தினர் காணாத ரயில் சேவை எதிர் வரும் செம்ரெம்பர் முதலாம் திகதி கிளிநொச்சிக்கு வரவுள்ளது.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்:

போர் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தலில் எந்தவித அச்சுறுத்தலுமின்றி சுதந்திரமாக வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மக்களும் சுதந்திரமாக வாக்களித்தனர். அவ்வாறே மாகாண சபைத் தேர்தலிலும் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கலாம்.

உங்கள் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மக்களின் நலனிலும் அக்கறையுள்ள வேட்பாளர்களை மாகாண சபைக்குத் தெரிவு செய்து உங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி பெறச் செய்வது தமிழ் மக்களின் பொறுப்பாகும் என்றார்.(க-9)

## நிலையான ஆட்சிக்கு மிகப்பெரிய பெரும்பான்மை தேவை

### கூட்டமைப்பு வேட்பாளர் கலாநிதி சர்வேஸ்வரன் தெரிவிப்பு

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலானது வெறுமனே ஒரு மாகாணத்தின் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கானது மட்டுமன்றி, போர் முடிந்து நான்காண்டுகளின் பின்னர் வட பகுதித் தமிழ் மக்கள் இலங்கை அரசின் மீது எத்தகைய நம்பிக்கையை வைத்துள்ளனர் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் அமையப் போகின்றது. வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று யாழ் வடமராட்சிப் பிரதேசத்தின் திக்கம் கிராமத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

வடமாகாணத்தில் நிலையான ஆட்சியை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற வேண்டியது அவசியமாகும். எமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அதுவொன்றே தற்போது எமக்கிருக்கின்ற தலையாய வழி. வாக்களிக்கத் தகுதியுடைய மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

மாகாணசபை உருவாகி சுமார் 25 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் கூட, இப்பொழுது தான் வடமாகாண மக்களாகிய நாம் முதன் முதலாக மாகாண சபைத் தேர்தல் ஒன்றிற்கு முகம் கொடுக்கின்றோம். ஆகவே மாகாணசபை குறித்து நாம் தெளிவு பெற வேண்டும். தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இன்று இனப்பெரும் பான்மையான சிங்கள ஆட்சி யாளர்



களால் தமது விருப்பப்படி வளைத்தெடுக்கப்படுகின் றது. அதற்கான அதிகாரங்களும் குறைக்கப்பட்டு வெறும் எலும்புக் கூடாக மாற்றுவதற்கான முயற் சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மாகாணசபையின் சட்டங்கள் ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிப்பதாக இருந்தாலும் கூட அதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்ற வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே மாகாண சபையின் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி எமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு வழி பிறக்கும். நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலானது வெறுமனே ஒரு மாகாணத்தின் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கானது மட்டுமன்றி, போர் முடிந்து நான்காண்டுகளின் பின்னர் வடபகுதித் தமிழ் மக்கள் இலங்கை அரசின் மீது எத்தகைய நம்பிக்கையை வைத்துள்ளனர் என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் அமையப் போகின்றது. வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

இதன் மூலம் மட்டுமே தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருக்கின்றனர் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி அனைவருக்கும் தெரியப்படுத்த முடியும். ஆகவே, நாம் அனைவரும் எத்தகைய தடுமாற்றமுமின்றி, பந்தபாசங்களுக்கு இடமின்றி, முகம் பார்க்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரத்தினை வலுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (க)

# மாகாண சபைக்கு உயிரூட்டிவிட்டு அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ள வேண்டும்

### சித்தார்த்தன் தமது துண்டுப் பிரசுரத்தில் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, ஓக.19

ஆயுதப் போராட்டம் வலுவடைந்து காணப்பட்ட காலங்களில் சமஷ்டி, 13 க்கு மேல் (13+) என சர்வதேச நிர்ப்பந்தங்களின் பெயரில் உறுதிகள் வழங்கி வந்த சிங்கள அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் பின்பு பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தையே துடைத்தெறிந்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

எனவே அபிவிருத்தி என்கின்ற பசப்பு வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டு சேடமிழுத்துக் கொண்டிருக்கின்ற மாகாண சபை முறைமைக்கு இயன்ற வரை உயிரூட்டுவதுடன் அதைக் காப்பாற்றி வைத்துக் கொண்டு அடுத்த கட்ட நகர் வாக எமக்கென்று ஒரு நிரந் தரமான அரசியல் தீர்வை நோக்கி நாம் முன்னேற வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் த.தே.கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் த.சித்தார்த்தன் தாம் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் நலனுக்காகவும், உரிமைகளுக்காகவும் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்துச் செயற்பட்டு வரும் தமிழ் அரசியல் அமைப்புக்களால் இணைந்து உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வயது, பால் வேறுபாடின்றி முழுமையாக ஆதரிக்க வேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மாகாண சபை முறைமைக்கு அப்பாற்பட்ட புதிய ஒழுங்கமைப்புடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றே தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லாவிடினும் கூட மாகாண சபைகளை இல்லாமல் செய்யத் துடிக்கும் ஓர் அரசின் செல்வாக்கினுள் வடக்கு மாகாண சபையும் சென்று விடக்கூடாது என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாடுபட்டு வருகின்றது.

வடக்கில் பரந்தளவில் நிலை கொண்டுள்ள மிக அதிகளவிலான படை வீரர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது எனும் மறைமுகமான நோக்கங்களின் அடிப்படையிலேயே அரசின் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, தரம் குறைந்த கட்டுமானப் பணிகள் மூலம் அரச ஆதரவு கட்டுமான ஒப்பந்த முதலைகளும் அமைச்சர்களின் கையாட்களும் மேம்பாடடைந்ததே இதுவரை நாம் கண்ட அனுபவமாக உள்ளது.

எனவே அபிவிருத்தி என்கின்ற பசப்பு வார்த்தைகளுக்கும் அப்பால் சேடமிழுத்துக்கொண்டிருக்கின்ற மாகாண சபை முறைக்கு இயன்ற வரை உயிரூட்டி அதைக் காப்பாற்றி வைத்துக் கொண்டு, அடுத்த கட்ட நகர்வாக எமக் கென்று ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கி முன்னேற வேண்டும்.

அதன் அடிப்படையில், தமிழர்களின் நலன்களுக்காகவும், உரிமைகளுக்காகவும், உடைமைகளுக்காகவும் தொடர்ந்தும் ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்து செயற்பட்டு வரும் தமிழ் அரசியல் அமைப் புக்களால் இணைந்து உரு வாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முழுமையாக ஆதரிக்க வேண்டியது வயது, பால் வேறுபாடின்றி தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதே எமது கருத்தாகும் எனத் தம்மால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## இது எமது இருப்பை நிர்ணயிக்கப் போகின்ற தேர்தலாகும்

### த.தே.கூ. வேட்பாளர் கஜதீபன் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, ஓக.19

இத்தேர்தல் எமது இருப்பை நிர்ணயிக்கின்ற தேர்தலாக விளங்குவதால் தமிழர்களாகிய நாம் இத் தேர்தலை சரியான முறையில் பயன்படுத்தவேண்டும்



இவ்வாறு வட மாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் த.தே.கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பா.கஜதீபன் கைதடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கூறினார். சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கிஷோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கஜதீபன் தொடர்ந்தும் பேசும் போது கூறியதாவது:-




இணக்கப்பாடு என்றால் என்ன? என்பது பற்றித் தெரியாதவர்கள், புரியாதவர்கள் இணக்கப்பாடு அரசியல் பேசுகின்றார்கள். நாம் எமது உரிமைகளைக் கோருவதை எதிர்ப்பு அரசியல் என்கின்றார்கள். ஆரம்பத்தில் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, என்றைக்குமே பிரிக்கமுடியாத வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம் என்றார்கள். இன்று மத்தியில் கூட்டாட்சியும் இல்லை. மாநிலத்தில் சுயாட்சியும் இல்லை. இறுதியில் வடக்கு- கிழக்கும் பிரிக்கப்பட்டு, வடக்கு மாகாணத்துக்கு மட்டுமே போட்டி யிடுகின்றார்கள். இன்று தமது அரசியல் சுயலாபத்துக் காக அடி மைத்தனத்தை ஏற்று இவர்கள் புரிவது அடிமை அரசியல் ஆகும்.

எம்மைப் பார்த்து எதிர்ப்பு அரசியல் நடத்துகின்றார்கள் என்கிறர்கள். ஆமாம், நாம் எதிர்ப்பு அரசியல் நடத்துகின்றோம். எதற்காக எதிர்ப்பு அரசியல் நடத்துகின்றோம்? எமது மக்களுக்காக, எமது மக்கள் தன்மானத்துடன்வாழ வேண்டும்என்பதற்காக, எமது மக்கள் சுயநிர்ணயத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக, எமது மக்களைஅடிமைத்தனத் திலிருந்து விடு விப்பதற்காகஎன்றுஅவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)




X 6
பொருளாதாரத்தை மேம்படுத்த
வாழ்வாதாரத்தை வளப்படுத்த
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# அன்பான வாக்காளப் பெருமக்களே!



**தியாகராஜா மகேஸ்வரன்**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும். இந்துசமய கலாச்சார அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி)



**நடராஜா ரவிராஜ்**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

01. நாம் தேர்தல் காலத்தில் வாக்களிக்கப் போகின்ற பிரதிநிதிகள் கௌரவமானவர்களா? என்று பாருங்கள்.
02. இந்த மாகாணத்தில் மக்களால் விரும்பப்பட்டவர்களா? இவர்களுக்கு எத்தனை முகங்கள் தெரியும்.
03. வளம் நிறைந்த வடமாகாணத்தில் இவர்கள் வாழ்ந்த இடம் , வாழ்ந்த நிலைமை இவர்கள் செய்த துரோகம், என்ன? என்பதனையும் யார் என்பதனையும் தேடிப் பார்க்கவும்.
04. தேர்தல் காலத்தில் ஒரு தமிழனின் ஒரு துளி இரத்தத்தைக் காயப் படுத்தியோ மன உளைச்சல் படுத்தியோ வாக்கு கேட்கின்ற கட்சியை இனங்கண்டு கொள்ளுங்கள்.
05. தேர்தல் காலத்தில் அடாவடித்தனம் ஆயுதம் காட்டிப் பயமுறுத்தல் மது போதை வழங்குதல் எந்தக்கட்சி என்று இனங்கண்டு கொள்ளுங்கள்.
06. உங்களிடம் வாக்குக் கேட்பவர்கள் தாடியோடு இருக்கின்றார்களா? எத்தனை முறை தேர்தல் கேட்டவர்கள், எத்தனை முறை தோற்றவர்கள், எத்தனை மாவட்டத்தில் வாக்குக் கேட்டவர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.
07. எத்தனை ஒய்வூதியக்காரர் எத்தனை வேதனைப்பட்ட எம் மக்களிற்கு 5000 நாள்கள் 120000 மணித்தியாலங்கள் வாழத் தகுதியில்லாத ஊன் உடம்பை வைத்து மீண்டும் ஒரு மகேஸ்வரன் மீண்டுமொரு ரவிராஜ் அவர்களை இவர்களிற்கு வாக்களித்தால் எவ்வாறு உருவாவார்கள்.
08. வாக்குக்கேட்பவர்கள் அனைவரும் வாக்குப் பெற்றபின் நிறைகுடம் வைத்து கன்னிப் பெண்கள் பூமாலை அணிவித்து கலாச்சாரத்துக்குப் பயன்படுத்தும் கலைஞர் களை பயன்படுத்தினால்தான் சேவை செய்வோம் எனக் கூறியவர்களையும் சிந்தித்து கொள்ளுங்கள்.
09. ஏலவே வாக்குப்பெற்று ஏதோ ஒரு காரணத்தினால் அந்த கிராம சேவகர் பிரிவில் அல்லது அந்த தொகுதியில் அல்லது அந்த மாவட்டத்தில் கிடைக்க வேண்டிய அரச சலுகை, அரச சார்பற்ற சலுகை, அந்நிய நாட்டு சலுகை கிடைத்ததை அந்த மக்களிற்கு பயன்பட விடாமல் திருப்பி அனுப்பியதும் எந்த அரசியல் கட்சி என்று சிந்தித்துப் பாருங்கள்.
10. வெல்ல முடியாதவர்கள், நிராகரிக்கப்பட வேண்டிய வர்கள் ஏலவே பல தேர்தல்களில் நிராகரிக்கப் பட்டவர்கள் கைக்கூலிகளாக கைதேர்ந்தவர்கள் கைப்பணம் பெற்று சுயேச்சைக் குழுவாக வந்தவர்களையும் சிந்தித்துப்பாருங்கள்.





**மீண்டுமொரு மகேஸ்வரன், மீண்டுமொரு ரவிராஜ் போன்ற 36 ஜனநாயக அரசியல் வாதிகளை ஜனநாயகமாக பிறக்கப்போகும் வடமாகாண சபைத் தேர்தலில் தெரிவு செய்து கடந்த 50 ஆண்டு காலமாக விட்ட தவறுகள் அனைத்துக்கும் நிவர்த்தியாக சிந்தித்து வாக்களியுங்கள்.**









**வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்**

# தியாகராஜா துவாரகேஸ்வரன்


**ஐக்கிய தேசியக் கட்சி**

**எமது வெற்றியின் இரகசியம் தியாகராஜா மகேஸ்வரன் நடராஜா ரவிராஜ் போன்றோரை தெரிவுசெய்வது.**

# வேலைக்காக வெயிலில் காயும் சிறுவர்கள்



இங்கே மூடைகளாக பறிக்கப்படுபவை உணவுப் பொருள்கள் அல்ல. படகு மூலம் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லப்படும் கட்டப்பணிகளுக்காக பயன்படுத்தப்படும் மணல். கடுமையாக எறிக்கும் வெயிலின் மத்தியில் நெடுந்தீவு இறங்கு துறையில் சிறுவர்கள் இருவர் மணல் மூடைகளை படகில் இருந்து இறக்குகின்றனர். (வ-21)



# சந்நிதி வாகனத் தரிப்பிடங்களில் நிர்ணயித்த கட்டணங்களே அறவீடு

## மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்

வடமராட்சி, ஓக.19

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடல்களில் நிறுவப்பட்டுள்ள சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணமே அறவிடப்படுவதாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

சந்நிதி சுற்றாடலில் நிறுவப்பட்டுள்ள தரிப்பிடங்களில் சைக்கிளுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும், ஓட்டோ, லாண்ட் மாஸ்ரர் போன்வற்றுக்கு 20 ரூபாவும், ஹையஸ் வான் அதற்கு மேற்பட்ட பெரிய வாகனங்களுக்கு 50 ரூபாவும் கட்டணமாக அறவிடப்பட்டு வருகின்றது.

இந்தக் கட்டணங்களை மீறி கட்டணங்களை அறவிட்டால் வாகனத் தரிப்பிடங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்ததுடன் ஹெல்மட் பாதுகாப்புத் தொடர்பாக மோட்டார் சைக்கிளோட்டிகளே தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ஓ-8)

## நல்லூரின் நாயகன்

ஞான குருவாகி தந்தைக்கு உபதேசம் செய்தான்
நல்லூரில் கோயில் கொண்டு அடியவரைக் காக்கின்றான்
கானக் குறவள்ளியை காதலித்துக் கரம் பிடித்தான்
காலமெல்லாம் எமைக் காத்திட உலா வருகின்றான்
வானளாவ உயர்ந்த மணிக் கோபுரங்கள் கொண்ட
வளமான நல்லூரின் நாயகனாய் விளங்குகின்றான்
தேனும் தினைமாவும் விருப்பமுடன் ஏற்றிடுவான்
தேடிவந்து வழிபட்டால் தீமையெல்லாம் போக்கிடுவான்

**ஏழாலை எம்.இந்திராணி**

## நலமளிக்கும் நல்லூரானே

ஆடிவரும் மயிலும் அழகுமிகு சேவல் கொடியும்
அசைந்தாட வீதியுலா வரும் அலங்காரக் கந்தனே
தேடிவரும் பக்தருக்கும் சித்தருக்கும்
அருள்பாலித்து அபயமளிக்கும் தேவாதிதேவனே

கோடிமுறை பிறப்பினும் எம் உள்ளக்கமலமதில்
உன்னருள் வேண்டும் கோமகனே
பாடித்துதித்துன் கழல்பற்றியே
பக்குவமும் பரவசமும் கொண்டோம் பாலகனே

ஓடிவந்து வினைதீர்த்து எமைக்காத்து
நற்தீர்வொன்றை தருவாய் ஓங்காரத்தின் மெய்ப்பொருளே
நாடிவந்துன் பாதம் தொழுவோர்க்கு
நற்கதியளிக்கும் நல்லூரானே

**க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.**

## உரும்பிராயில் நேற்று மருத்துவ முகாம்

வலி.வடக்கு, ஓக.19

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நேற்று ஞாயிறு காலை 9.30 மணியளவில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் அனுசரணையுடன் படையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

மங்கல விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து மருத்துவ முகாமின் தேவைகள் பற்றிய கருத்துப்படம் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவ முகாம் இடம்பெற்றது. தொடர்ந்து கண், காது, மூக்கு, பல் உட்பட நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பொது நோய்களுக்கான மருத்துவ பரிசோதனைகளும் இடம்பெற்றன. மருத்துவ முகாமில் பல இடங்களில் இருந்தும் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். (ஓ-86)

## நிலாவரைக் கிணற்றின் ஆழம்



**160 அடி**

யாழ்ப்பாணம், ஓக.19

புராதன கதைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் புத்தூர் நிலாவரைக் கிணற்றின் ஆழம் 160 அடி என கடல் ஆய்வுக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ள கடற்கரைப் பிரதேசங்களில் கடல் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள கடல் ஆய்வு குழுவினர் தற்போது குடாக்கடல் எல்லைகளில் ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ள நிலையில் புராதன கதைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நிலாவரைக் கிணற்றை ஆராய்ச்சி செய்துள்ளனர். இதன் அடிப்படையில் புத்தூர் நிலாவரைக் கிணறு 160 ஆழத்துடனும் 50 மீற்றர் அகலத்துடனும் இருப்பதாக ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணிகளை மிகக் கவர்ந்த குறித்த நிலாவரைக் கிணற்றை பார்வையிடுவதற்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். நிலாவரைக் கிணற்றின் தோற்றம் தொடர்பாக பல்வேறு புராணக் கதைகள் கூறப்படுகின்ற நிலையில் இதனுடைய ஆழம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் தென்னிலங்கைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள கடல் ஆய்வுக் குழுவினர் இதன் ஆழத்தை ஆய்வு செய்துள்ளனர். (வ-14)

## மாதகல் கிறிஸ்தவ ஆலயத்தில் உண்டியல்கள் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.19

மாதகல் சென்.செபஸ்ரியன் ஆலய உண்டியல்கள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பணம் களவாடப்பட்டுள்ளதுடன் ஆலயத்தின் உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. ஆலயத்தில் உள்நுழைந்த விசமிகள் ஆலயத்தில் வெளியேயும்- உள் மண்டபத்திலும் வைக்கப்பட்டிருந்த உண்டியல்களை உடைத்து அதிலிருந்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் ஆலயத்தின் கதவுகளையும் அலுமாரி மற்றும் ஏனைய தளபாடங்களையும் உடைத்து நாசம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஓ-14)



## காவடிக் கந்தனுக்குச் சிறப்பு

ஊர்வீதி யாலே உடம்பால் உண்டுதலஞ்
சேர்கின்ற பக்தர் செயலுக்குத் தீர்வாகப்
பேறருளி நல்லூர்ப் பெருமான் அவர்க்குற்ற
ஊறகற்று வாரென் றுணர்

நல்லை நகர்பதியே நாடியே நாள்தோறும்
எல்லையிலாக் காவடிகள் ஏந்திவரும் நல்லடியார்
காவடிக் கந்தனெனுங் காரணப்பேர் சூட்டினார்
சேவடிக்கே சேருஞ் சிறப்பு

தூங்குதுலாக் காவடியைக் கண்டு பரவசத்தால்
ஓங்கியெழும் ஓசை உணர்வலைகள்- ஆங்கடியார்
பக்திப் பெருக்கை மிகக் கூட்டுதே நல்லூரின்
சக்திக் கிவைகளே சான்று

**வேலணை அமரர் சி.இராசரத்தினம்**

# சுண்ணக்கல் வீடு, பானை கண்டெடுப்பு

## காங்கேசன்துறை கடற்பகுதியில்

யாழ்ப்பாணம், ஓக.19

காங்கேசன்துறை கடற்பகுதியில் சுண்ணக்கல் பாறையால் கட்டப்பட்ட சிறிய வீடு ஒன்றும், பழைய பானை ஒன்றும் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என வடமாகாணத்துக்கான கடல் ஆய்வுக் குழுத் தலைவர் மகிந்த கருணரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருட காலத்துக்குப் பின்னர் வட மாகாணத்தில் கடல் ஆய்வு நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளோம். இந்த ஆய்வில் 12 பேர் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.

30 வருட காலத்துக்குப் பின்னர் வட மாகாணத்தில் கடல் ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். இந்த ஆய்வில் 12 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். காங்கேசன்துறைக் கடற்பகுதியில் ஆய்வை மேற்கொண்ட போது புராதன காலத்தில் மனிதனால் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் பானை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பழைய பானை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதனைவிட மனிதனால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் சுண்ணக்கல் பாறைகளாலான வீடும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது காங்கேசன்துறை கடல் பகுதியில் நீரில் தெளிவுத்தன்மை இல்லாத காரணத்தால் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாது இருப்பதால் சாதகமான காலப்பகுதியில் மீண்டும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (வ-14)



## நிலக்கரி ஊழல்: ஆவணங்கள் மாயம்

நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கியதில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில், 1993-2004ஆம் ஆண்டு வரையில், நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கியமை மற்றும் ஒதுக்கீடு கோரி விண்ணப்பித்திருந்தமை தொடர்பான 768 ஆவணங்கள் மாயமாகி விட்டன என்று நிலக்கரி சுரங்கத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது விசாரணையில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.(ற)

# நல்ல முடிவையே எடுப்பார் பிரதமர் மன்மோகன் சிங்

## பொதுநலவாய மாநாடு குறித்து மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி

சென்னை, ஓக.18

இலங்கையில் நடைபெறவிருக்கும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து தமிழக கட்சிகளின் கோரிக்கையைப் பிரதமர் பரிசீலித்து நல்ல முடிவையே எடுப்பார் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வது தொடர்பாகச் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே நாராயணசாமி இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார். அதே கருத்தையே தி.மு.க. தலைவர் கருணாநிதியும் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தமிழக தலைவர் ஞானதேசிகனும் பிரதமரை நேரில் சந்தித்து இது தொடர்பாக வலியுறுத்தியுள்ளார்.



இது வெளியுறவுத்துறை முடிவெடுக்க வேண்டிய ஒன்று. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணவே விரும்புகிறது. அவர்கள் தவறு செய்யும்போது அதைச் சுட்டிக்காட்டுவதையும் இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆகவே, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக தமிழக கட்சிகளின் கோரிக்கையை பிரதமர் பரிசீலித்து நல்ல முடிவு எடுப்பார் என நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பாக்.பயங்கரவாதிகளின் ஊடுருவல் முறியடிப்பு

### இந்திய இராணுவம் தெரிவிப்பு



ஸ்ரீநகர், ஓக.19

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தில் இந்தியப் பகுதிக்குள் ஊடுருவ பயங்கரவாதிகள் மேற்கொண்ட முயற்சியை எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் இராணுவத்தினர் முறியடித்துள்ளனர் என்று இந்திய இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

குப்வாரா மாவட்டத்தில் கேரான் பகுதியில் எல்லைக்குள் ஊடுருவுவதற்குத் தயராக பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் தயாராக உள்ளனர் என்று இந்திய இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அதிகாலை 3 மணியளவில் ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது. சுமார் 3 மணி நேரம் இடம்பெற்ற துப்பாக்கி மோதல்களின் பின்னர் பயங்கரவாதிகள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்த மோதல்களில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் இராணுவத் தரப்புகள் மேலும் தெரிவித்துள்ளன. (ற)

## பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது


### வலியுறுத்துகின்றார் டி.ராஜா

விருதுநகர், ஓக.19

இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்க கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

விருதுநகர் தொலைத் தொடர்பு ஊழியர்கள் சங்க பொதுக் குழுவுக்கு வந்த அக்கட்சியின் தேசிய செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான டி.ராஜா, செய்தியாளர்களிடம் பேசியபோது இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளக்கூடாது என்று தெரிவித்த அவர், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை ஏழை மக்களுக்கு எதிரானது என்றும் தெரிவித்தார்.



இந்திய அரசின் கொள்கைகள் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக உள்ளன என குற்றம்சாட்டியதுடன், காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய கட்சிகளுக்கு மாற்றான அரசை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ராஜா கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கச்சதீவு, உணவு பிரேரணை குறித்த தமிழக அரசின் நிலைக்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். (ற)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
26★11★1950

உதிர்வு
20★07★2013

அமரர் கந்தையா சுந்தரலிங்கம்

(ஸ்தாபகர் - வெஸ்ரா இன்டஸ்ரீஸ்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும்
குடும்பத் தலைவராகவும் இருந்து எமக்கு
வழிகாட்டி எமக்கு ஒரு குறைவும் நிறைவும்
விடாமல் வளர்த்தெடுத்து தலைநிமிர்ந்து
வாழவைத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
முப்பத்தியொரு நாள்களாகியும்
உங்களை நினைத்து, நினைத்து
கண்ணீர் சிந்துகிறோம்
எத்தனை வருடங்களானாலும்
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்களை மறக்காமல்
நீங்கள் விட்டுச்சென்ற பணிகளைச்
சிறப்பாகத்தொடருவோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள்
17.08.2013 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.
இன்று (19.08.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறும்.
இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவைக் கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

"வெஸ்ரா"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(31478) (7.3)

கண்ணீர்ப் பூக்கள்



அமரர் ஆசீர்வாதம் ஜோண்பிறிற்டோ

(பிரபல ஆங்கில ஆசிரியர்)

கல்விதனில் கண்ணியனாய் பழகுவதில் நற்பண்பினனாய்
என்னுடனே சேர்ந்து - என்னை ஊக்குவித்த உத்தமனே - உமக்கு
கடுகதியில் வந்த காலன் எமைக் கலக்கமுறச் செய்தானே!
உறங்குகின்றீர் நீர் இன்று கலங்குகின்றேன் நான் இங்கு.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்களை மறவாத
அன்பு மாணவன்: த. பிரசன்னா
கண்டி வீதி, அரியாலை.

(31482) (45.3)

கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், பாசிக் நிறுவனத்தின்
பிராந்திய திட்டப் பணிப்பாளரின்
தந்தையான
ஆசீர்வாதம் ஜோன் பிறிற்டோ
கடந்த (17.08.2013) அன்று காலமானார்.
இவரது இறப்பால் துயரடைந்திருக்கும்
அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசிக் நிறுவனப் பணியாளர்கள்,
யாழ்ப்பாணம்.

(C/11417) (3.11)

விளம்பரத் தொடர்புக்கு: 0215671111

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ - து

கேள்விப்பத்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிலையத்தில் கனப்பி (CANOPY) அமைத்தல்

01. மேற்படி கட்டட வேலைக்கான உறையிலிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 05.09.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப்பத்திர உறைகள் 07.09.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கேள்வி கேட்பவர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| திட்டம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா | தேவையான கேள்விப்பத்திரப் பிணை ரூபா | பிணை பெறுமதியான காலம் |
|---|---|---|---|
| புலோலி எரிபொருள் நிலைய (CANOPY) கனப்பி அமைத்தல் | 2000/- | 25000/- | 90 நாள்கள் |

02. கேள்வி கோரல் (NATIONAL COMPETITIVE) கேள்வி கோரல் நடைமுறைக்கிணங்க முறைப்படி நடைபெறும்
03. இத்துறை சார்ந்த முன் அனுபவம் கொண்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
04. கேள்விக்கான ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.
05. கேள்விப்பத்திரத்துக்கான ஆவணங்களை புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளரிடம் 04.09.2013 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒப்பந்தகாரர்கள் பதிவேடு, பதிவு அத்தாட்சிப்பத்திரம் ஆகியவற்றுடன் அவர்களது கடிதத்தலைப்பில் தயாரிக்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு உறையிலிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், எரிபொருள் நிரப்பு நிலைய கனப்பி (CANOPY) அமைத்தல்'' எனக்குறிப்பிட்டு 05.09.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொதுமுகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப்பத்திரத்தை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு தேவையான கேள்விப்பத்திர பிணைப்பணத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.
07. மேலதிக விவரங்களை புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளரிடமிருந்து 04.09.2013 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், புலோலி.

(சி/1401) (45.6.)

# உருமாறும் போராட்டம்

## எகிப்தில் 52 கிறிஸ்தவ தேவாலங்கள் தீக்கிரை

கெய்ரோ, ஒக.19
எகிப்து தலைநகர் கெய்ரோவில் அரசுப் படைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடைபெறும் மோதல்கள், கடந்த இரு நாள்களாக மெல்ல, மெல்ல மதக்கலவரமாக உருமாறி வருகிறது.
பிரசித்தி பெற்ற கன்னி மரியாள் தேவாலயம் உள்பட தெற்கு எகிப்தில் உள்ள அசியுட், மினியா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை போராட்டக்காரர்கள் தீயிட்டு எரித்துள்ளனர். தேவாலயங்களை ஒட்டியுள்ள கிறிஸ்தவ நூல்கள் விற்பனை மையங்களும் தீக்கிரையாகியுள்ளன.
இதுவரை 52 தேவாலங்களின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால், எகிப்தில் வாழும் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் மூளும் அபாயம் நிலவுகிறது.



### இராணுவம் அதிரடி

இதேவேளை, கெய்ரோவில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி ஆதரவாளர்கள் தங்கியிருந்த அல் புட்டா பள்ளிவாசலுக்குள்ளே இராணுவத்தினர் அதிரடியாக நுழைந்து அனைவரையும் வெளியேற்றியுள்ளதுடன், பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவு பள்ளிவாசல் வளாகத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் வெளியேறிய சிலர் கைதுசெய்யப்பட்டதை அடுத்து, மற்றவர்கள் வெளியேற மறுத்தனர். அதையடுத்து பள்ளிவாசலுக்குள் நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

### அல்குவைதா

பள்ளிவாசலில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டவர்களும் அடங்கியிருந்தனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். அவர்களில் அல்குவைதா இயக்கத்தின் தலைவர் அய்மான் அல் சவாஹிரியின் சகோதரரும் கைதாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### பலர் சாவு

எகிப்தில் கடந்த இரு நாள்களின் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் 173 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## கைதிகளை விடுவிக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஒக.19
பாகிஸ்தானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியக் கைதிகள் 367 கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.
பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் 171 மீனவர்கள் உட்பட 491இந்தியர்கள்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 367 இந்திய கைதிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி விடுதலை செய்யப்படுவர் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜம்மு - காஷ்மீர் மாநில எல்லைப் பகுதியில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, அண்மைக்காலமாக தாக்குதல் இடம்பெற்று வரும் நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## சோமாலியாவில் அதிகரிக்கும் போலியோ

ஜெனிவா, ஒக.19
சோமாலியாவில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று ஐ.நா சுட்டிக்காட்டியுள்ளது.
சோமாலியாவில் இடம்பெறும் தாக்குதல்கள் காரணமாக மருத்துவ தொண்டு நிறுவனம் தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்ட சில தினங்களில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
இந்த வருடத்தில் மாத்திரம் 105 போலியோ நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம், இது அதிகரித்த ஒரு தொகை எனவும் தெரிவித்துள்ளது. (ற)

## பத்திரிகை ஆசிரியர் மீது தாக்குதல்

நன்தாபுரி, ஒக.19
தாய்லாந்தின் பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.
நன்தாபுரிமாகாணத்தில்அமைந்துள்ள குறித்த பத்திரிகை ஆசிரியரின் குடியிருப்புத் தொடர் மீதே நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்துடன் குறித்த குடியிருப்பு தொகுதிக்கு அண்மித்த பகுதியில் குண்டொன்றும் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் தாய்லாந்து அரசின் நடவடிக்கையாக இருக்கக் கூடும் என்று உள்ளூர் ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. (ற)

## முர்சியின் கட்சியை தடைசெய்ய ஆலோசனை

கெய்ரோ, ஒக.19
எகிப்தில் அண்மைக்காலமாக அதிக அளவிலான உயிர்களை காவு கொண்ட சம்பவங்கள் தொடர்பாக எகிப்திய அமைச்சரவை விவாதிக்கவுள்ளது.
பதவியில் இருந்து அகற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சியினை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு தொடர்ச்சியாக போராடி வருகின்றது.
இந்த நிலையில் அதனை சட்ட ரீதியாக் தடைசெய்ய வேண்டும் என்ற பிரேரணை ஒன்றை இடைக்கால பிரதமர் சமர்ப்பித்துள்ளார்.
எகிப்தில் தற்போது ஏற்பட்டு வரும் நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்களுக்கு இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பே காரணம் என இடைக்கால அரசும் அதன் ஆதரவாளர்களும் தெரிவித்து வருகின்றனர்.
சட்ட ரீதியாக ஜனாதிபதி முர்சியினை பதவி விலக்கியது முற்றிலும் தவறு என முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
மீண்டும் முர்சியை ஜனாதிபதியாக ஆக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு கூறியுள்ளது. (ற)

## பிலிப்பைன்ஸில் கப்பல் விபத்து

### 34 பேர் சாவு: நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை




சிபு, ஒக.19
பிலிப்பைன்ஸில் சரக்கு கப்பலுடன் பயணிகள் கப்பல் மோதி விபத்துக்குள்ளானதில் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.
பிலிப்பைன்ஸின் சிபு துறைமுகம் அருகே செயிண்ட் தோமஸ் அக்வினாஸ் என்ற பயணிகள் கப்பல், சரக்கு கப்பல் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இதில் 870 பயணிகளுடன் பயணித்த பயணிகள் கப்பல் பலத்த சேதமடைந்ததுடன், மூழ்கத் தொடங்கியது.
உடனடியாக மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 629 பேர் மீட்கப்பட்டனர். எனினும் 170க்கும் மேற்பட்டவர்களின் கதி குறித்து இதுவரை தெரியவராத நிலையில் 34 பேரின் உடல்களைக் கண்டுபிடித்துள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.
விபத்து இடம்பெற்ற பகுதியில் கடும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காணப்படுவதால் மீட்புப் பணிகளில் பெரும் தொய்வு ஏற்பட்டுள்ளது என்று பிலிப் பைன்ஸ் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கிரிகோரி பாபிக் தெரிவித்துள்ளார். (ற)

## தினமும் 10 சிகரெட்கள் ஊதித் தள்ளும் ஆமை

### கொடுக்காவிட்டால் ஆர்ப்பாட்டம் வேறாம்!

பீஜிங், ஒக.19
சீனாவில் வீட்டில் வளர்க்கப்படும் ஆமை ஒன்று ஒரே நாளில் 10 சிகரெட்டுகளை ஊதித் தள்ளுகிறது. அது போதாதென்று சிகரெட் கொடுக்க மறுத்தால் விநோத ஒலியை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் வேறு ஈடுபடுகிறது.
சீனாவின் சேங்சுன் நகரைச் சேர்ந்த ஒருவர் ஆமைகளை வளர்க்கிறார். சில தினங்களுக்கு முன் ஓர் ஆமையின் கழுத்துப் பகுதியில், ஏதோ சிக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஆமையின் வாயை பெரிதுபடுத்தி பார்த்த போது உணவின் சிறு பகுதி, தொண்டையில் சிக்கியிருப்பது தெரிந்தது. அதனால் தொண்டையில் புண் ஏற்பட்டு ஆமை உணவு உண்பதில் சிரமப்பட்டது.
அதையடுத்து ஆமையின் தொண்டையில் சிக்கிய உணவை அகற்ற முயன்ற போது வலி தாங்க முடியாமல் உரிமையாளரின் கையைக் கடித்துவிட்டது. அதிர்ச்சி அடைந்த உரிமையாளர் ஆமையை திசை திருப்பி அதன் வாயிலிருந்து தன் கை விரல்களைக் காப்பாற்றிக் கொள்ள, தன் கையில் இருந்த சிகரெட்டை, ஆமையின் வாயில் வைத்தார். சிகரெட்டை வாயில் பிடித்த ஆமை உரிமையாளரின் கையை தன் பிடியிலிருந்து விட்டு விட்டது. சிகரெட்டின் போதையில் ஆமை இருந்த போது அதன் தொண்டையில் சிக்கிய உணவையும் உரிமையாளர் அகற்றிவிட்டார்.
அன்று இரவு உரிமையாளரின் கையில் சிகரெட்டை பார்த்த ஆமை விநோதமான குரல் எழுப்பியது. திடீரென ஒலியை அதிகரித்தது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த உரிமையாளர், அதன் வாயில் மீண்டும் சிகரெட்டை வைத்தார். ஆமையும் தன் சத்தத்தை நிறுத்திக் கொண்டது. இதை தொடர்ந்து ஆமையின் கண் முன்னால் சிகரெட் பிடிப்பதை நிறுத்திக் கொண்டாலும் தினமும் சிகரெட் கேட்டு ஆமை தொந்தரவு செய்யத் தொடங்கியது.
சிகரெட் கேட்டு விநோத ஒலி எழுப்பும் ஆமை சிகரெட் கிடைக்காத வரை உணவு சாப்பிடவும் மறுக்கிறது. இவ்வாறு தினமும் 10 சிகரெட்டுகளை சர்வ சாதாரணமாக ஊதித் தள்ளுகிறது. அதனால் அதிர்ச்சி அடைந்துள்ள ஆமையின் உரிமையாளர் ஆமை சாப்பிட வேண்டும் என்பதற்காகவே தினமும் சிகரெட் கொடுத்து வருகின்றாராம். (ற)



## பட்டினியால் வாடும் வடகொரிய மக்கள்

### ஆயிரத்து 200 கோடி ரூபா தேவை என்கிறது ஐ.நா.

நியூயோர்க், ஒக.19
வடகொரியாவில் பட்டினியால் வாடும் மக்களுக்கு ரூபா ஆயிரத்து 200 கோடி நிதியுதவி தேவைப்படுகின்றது என்று ஐ.நா. அறிவித்துள்ளது.
இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் விடுத்துள்ள அறிக்கையில்,
"வடகொரியாவில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக ஏராளமான மக்கள் உணவு மற்றும் போதிய மருத்துவ வசதியின்றி வாடுகின்றனர்.
கிட்டத்தட்ட 2 கோடியே 40 லட்சம் பேர் போதிய உணவின்றி தவிக்கின்றனர், இவற்றில் 20 சதவிகிதம் பேர் 5 வயதுக்கும் குறைவான குழந்தைகள். போதிய ஊட்டச்சத்து இல்லாததால், ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.


**வடகொரியாவில் 2 கோடியே 40 லட்சம் பேர் போதிய உண வின்றி தவிக்கின்றனர், இவற்றில் 20 சதவீதம் பேர் 5 வயதுக்கும் குறைவான குழந்தைகள்.**

தற்போதைய சூழலில் அங்குள்ள மக்களுக்கு ரூபா ஆயிரத்து 200 கோடி நிதியுதவி தேவைப்படுகிறது. ஐ.நா. சார்பில் பல்வேறு மனிதாபிமான முயற்சிகள் காரணமாக 10 ஆண்டுகளாக அங்கு உணவு பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்தி வருகிறோம்.
எனவே ஐநா உறுப்பு நாடுகள் பசியால் வாடும் மக்களுக்கு உதவிகள் செய்ய முன்வர வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# வடலியடைப்பு - புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர் - 19.08.2013





சிறப்புமலர் வடிவமைப்பு:
**வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தொண்டர் சபை**

"பக்தர் புடை சூழ இரதத்தினிலே பவனி வரும் விநாயகப்பெருமானுக்கு அரோஹரா......." தேர் ஏறும் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானே சகல மக்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் எல்லா சௌபாக்கியங்களும் அருளட்டும்.

**சிதறா வாழ்வருள்வாய் புதறானை சித்தி விநாயகனே!**

வடலியடைப்பினிலே வாகாய் வந்து
இடரொன்றும் வராமல் வரம் தந்து
வடம் பிடித்திழுக்கும் தேரினிலேறி
திட சித்தி விநாயகனே வருக வருக!

அழிவொன்றும் நேராமல் காத்திட்டு
மொழிந்திடும் அருளினை வழங்கிடும்
விழிநீர் சிந்தும் விக்கிரக அற்புதத்தால்
பழி பாவம் போக்கிடுக விநாயகனே!

மதம் கொண்ட மானுடமனதுக்கு
இதமது தந்து இன்னல்கள் தீர்த்து
சிதறா சிந்தனையும் வாழ்வும்
புதறானை பதியோனே தந்திடு!

## ஆசியுரை



அமரர் கலாநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ சிவ நித்தியானந்த சிவாச்சாரியார்
அவர்களின் நல்லாசியுடன்

அடியார்கள் யாவர்க்கும் சித்தி விநாயகரின் திருவருள் கிட்டட்டும்

எல்லாம் வல்ல ஆனைமுகத்தானின் திருவருள் துணைகொண்டு எவ்வித விக்கினங்களுமின்றி நடைபெற்று வரும் மஹோற்சவத்தின் 11 ஆம் திருவிழாவிலே இரதோற்சவம் இன்றைய நன்னாளிலே மிகவும் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெறவேண்டியும் பஞ்சமுக விநாயகர், வள்ளி, தேவசேனா சகித முருகப் பெருமானுடன் சிற்ப இரதங்களில் ஆரோகணித்து வீதியுலாவரும் காட்சியை காண்பவர்களும்,வடம் பிடித்து இழுப்பவர்களும், இளைஞர் மன்றம் மற்றும் சகல அடியார்களுக்கும் எல்லாம் வல்ல புதறானை ஸ்ரீ சித்தி விநாயகரின் திருவருளும் சிவப்பிரம்மஸ்ரீ. சிவா. நித்தியானந்த சிவாச்சாரியாரின் குருவரு ளாசியும் கிடைக்கப்பிரார்த்திக்கின்றோம்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சிவப்பிரம்மஸ்ரீ.நித்திய.சிவதாண்டவ சிவாச்சார்யார் (பிரதம குரு)



## கிராம சேவையாளரின் வாழ்த்துச்செய்தி



இலங்கைத்தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆலயங்களுள் வடலியடைப்பு பதியினில் அமைந்துள்ள புதறானை ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் ஆலயமும் ஒன்றாகும்.இவ்வாலயத்தின் இரதோற்சவம் என்ற பெருந்திருவிழா நிகழ்வு இடம் பெறுவதனையிட்டு இவ்வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.
உலகை இயக்கத்தின் சக்தியாய் நின்று அடியவர் தம் உள்ளத்தில் ஒளியேற்றி அனைவரையும் வழிப்படுத்தும் புதறானைப்பெருமானே தேரேறி வரும் திருநாள் பெருமை மிக்கது. ஆலயத்தில் இருந்து அருள் பாலிக்கும் விநாயகப்பெருமான் எம்மை நோக்கி வரும் இப்பெருநாள் எம்மைச் சூழ்ந்துள்ள துயர் விலகும் நாளாக வேண்டுகின்றேன்.
புதறானை விநாயகப்பெருமானின் அருட்பார்வை பட்டால் தூய்மையும் நல்ல சிந்தனைகளும் நல்ல எண்ணங்களும் தோன்றி எம் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். எல்லா வளங்களும் கிட்டும் மனச்சஞ்சலங்கள் நீங்கி எம் வாழ்வில் சாந்தி நிலவட்டும்.

க.சுதர்சன்,
கிராமசேவையாளர் J / 145, வடலியடைப்பு.

## பரிபாலன சபைத்தலைவரின் வாழ்த்துச்செய்தி

### தேரேறி வரும் நாயகா!



"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று நம் முன்னோர் நினைத்ததால் வடலியடைப்பு புதறானைப்பதிதனில் இறைவன் உய்யும் இடமும் ஆன்மாக்கள் ஒருமுகப்படும் தலமுமாகிய ஆலயங்கள் நிறைந்திருக்கின்றன. நாவலர் வழிவந்த அருணாசலசாஸ்திரிகள் பூசகராகவும் இறை பணி செய்தும் வழிபட்ட கஜமுகாசூரனை சங்காரம் செய்து கஜமுகனாக மூளிகத்தில் அமர்ந்து சித்திகள் பல தந்து அருள்புரிகிறார்.

இப்பூவுலகில் பணி செய்கிறோம், அந்தப்பணிகளில் இறைபணி மகத்தானது. இறைபணி செய்யும் பாக்கியம் பெற்ற நாம் அண்டங்கள் அனைத்திற்கும் நாயகனாக விளங்கும் விநாயகப்பெருமான் பெருவாழ்வு வாழ அருள் புரிவார்.இன்று தேரேறி பக்தர்களின் துயரங்களை துடைக்கும் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் பாதம் பணிந்துநிற்போம்.

ச.நவரட்ணராசா,
தலைவர்(பரிபாலன சபை),
வடலியடைப்பு - புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

## தொண்டர் சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



திருத்தேரேறி அருளாட்சி செய்யும் புதறானைப்பெருமானே

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"

சிவபூமி என அழைக்கப்படும் ஈழத்தேசத்திலே மிக ஆதியானதும் வரலாற்றுச் சிறப்பும் சைவ விழுமியங்களும் மேலோங்கி நிற்கின்ற யாழ்ப்பாணப் புண்ணிய பூமியில் வடலியூர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அழகிய கிராமத்தில் "புதறானை" எனும் திருநாமம் பூண்டு தம்மை நாடியவர், நாடாதவர் என்ற பேதம் நீக்கி வேண்டுவோர்க்கு வேண்டியதை வாரி வழங்கி எல்லோர்க்கும் அருள் ஆட்சி புரிந்துவரும் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் இரதோற்சவம் இன்று.

"கண்டு களிக்க வாரீர் வடம் பிடிக்க வாரீர்"

திருத்தேரினிலே பஞ்சமுக தரிசனத்தோடு பவனி வரும் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானின் தரிசனத்தை கண்குளிரப் பெற்று அவன் அருளால் கல்வியும் அறிவும் செல்வமும் நீண்ட நல்வாழ்வையும் பெற்று எல்லோரும் வாழ்க என்று விநாயகப்பெருமானின் மலர்பாதங்களை வணங்குகின்றேன்.

க. பிரசன்னா
தலைவர்,
வடலியடைப்பு - புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தொண்டர் சபை.
www.thondarsabai.com

## விளம்பர அனுசரணை

ஸ்ரீ முருகன் புத்தகசாலை
SRI MURUGAN BOOK CENTER
அன்பளிப்புப் பொருள்கள்,
பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர்
New Agro Center
Sithankerny Road,Pandaththarippu.

King of Wedding Sarees & Salwar
RASI COLLECTIONS
No. 199, Power House Road,
Jaffna.
Tel: 077 696 0346, 021 222 5571

பேள் நியூ பசன் ஹவுஸ்
Pearl New Fashion House
Main Street,
Chankanai.
பிரதான வீதி, சங்கானை.

Pakiyaratnam
Hardware Stores
General Hardware Merchants
163, 165, Main Street,
Chankanai.
Tel: 021 225 0105

நிலா ஒளி அழகு மாடம்
அழகு சாதனப் பொருள்கள்,
அன்பளிப்புப் பொருள்கள்
எனபவற்றைப் பெற்றுக்
கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

தனிஸ் ரெக்ஸ் - பந்தல் சேவை
Thanis Tex & Tent Service
மூத்தநயினார் கோவிலடி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
Moothanainar Kovilady,
Navaly Road, Anaicoddai.
Tel: 021 225 5645

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்
பலசரக்கு மாளிகை.
பிரதான வீதி,
சங்கானை.

சிவாஸ்
பான்ஸி ஹவுஸ்
இல. 02, பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.
Tel: 077 958 2656

கலைமகள் விலாஸ்
சைவ உணவகம்
பொன்னாலை வீதி,
சங்கானை.

## பவளப்பாறைகள் ஆய்வுக்கு தென்பகுதி மீனவருக்கு தடை

யாழ்ப்பாணம், ஓக.19
நெடுந்தீவு கடற்கரைப் பகுதியில் பவளப் பாறைகள் இருக்கலாம் என ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகக் கூறி கடற்கரைப் பகுதிகளில் அது தொடர்பாக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தென்பகுதி மீனவர்களை நெடுந் தீவு மீனவர்கள் தடுத்துத் திருப்பி அனுப்பியுள்ளனர்.
பவளப் பாறை ஆராய்ச்சி போர்வையில் அவர்கள் இந்துக் கடற்பகுதியில் சிங்கி இறால், நண்டு, கடல் அட்டை போன்றவற்றைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததை அறிந்த நெடுந்தீவு மீனவர்கள் நெடுந்தீவு கடற் பகுதியில் அவர் கள் தொழில் மேற்கொள்ள முடியாதவாறு தடுத்து அனுப்பியுள்ளனர். (வ-7)

## பயன்படுத்த முடியாதுள்ள எரியூட்டிக் கட்டடம்



தென்மராட்சி, ஓக.19
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கழிவுகள் எரிப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட எரியூட்டிக் கட்டடம் பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.
வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு, விடுதிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் ஊசிகள் மற்றும் பஞ்சு வகைகள் போன்றவை எரியூட்டியில் எரிக்கப்பட்டு வருகின்றன.
அருகில் உள்ள குடியிருப்புகளின் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில் இருப்பதற்கு புதிய எரியூட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் உரிய தரப்பினரைக் கோரியுள்ளனர். (ஓ-9)

வடமராட்சி கடற்பரப்பில்
## வலைகளை அறுத்துச் சென்ற இந்திய மீனவரின் படகுகள்

வடமராட்சி, ஓக.19
வடமராட்சி கடற்பரப்பில் பருத்தித்துறைமுனை தொடக்கம் மணல்காடு வரையான பகுதியில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் ஊடுருவி உள்ளூர் மீனவர்களின் 10 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை அறுத்துச் சென்றுள்ளன.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் 10 மீனவர்களின் மீன்பிடி வலைகள் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் நாசமாக்கப்பட்டுள்ளன.
மீன்பிடிப்பதற்காக கடலில் வலைகளை வீசிவிட்டு மீன்களைப் பிடிப்பதற்காக காத்திருந்த உள்ளூர் மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டதால் அவர்கள் வெறும் கையுடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட உள்ளூர் மீனவர்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் முறையிட்டுள்ளனர்.
இந்திய மீனவர்களின் ஊடுருவல், அதனால் உள்ளூர் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மீண்டும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பில்
# கல்வி அமைச்சின் இடமாற்ற கொள்கைகளை பின்பற்றுக
### இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.19
அடுத்த வருடம் (2014) நடைபெறவுள்ள ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தும் கல்வி அமைச்சின் தேசிய இடமாற்றக்கொள்கைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் வலியுறுத்தியுள்ளது.
இது தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
வடமாகாணக் கல்வித் திணைக்களமும், வடமாகாண கல்வி வலயங்களும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிரிய இடமாற்றங்களை கல்வி அமைச்சின் தேசிய இடமாற்றக் கொள்கைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
வடமாகாண கல்வித்திணைக்களத்தின் நிபந்தனையில் ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 6 வருடங்கள் பூர்த்தி செய்தால் இடமாற்றம் செய்யப்படலாம் எனக் கூறப்பட் டுள்ளது. இந்த நிபந்தனை தேசிய இடமாற்றக் கொள்கைக்கு முரணானது. இதனை விட ஆசிரியர்களின் நியமனக் கடிதத்தில் குறிப் பிடப்பட்ட கால எல்லைகளை விட மேலதி கமான கால எல்லைகளை வகுக்க முடியாது. ஏனெனில் ஆசிரியரின் நியமனக் கடிதத்தின் படியே அவரது சேவை, நிலை யம் என்பன கணிக்கப்படுகின்றன.
இந்த நிலையில் மாகாணக் கல்வித் திணைக்களம் அனுப்பி வைத்துள்ள நிபந்தனைகளில் ஆசிரியர்களின் முதல் நியமனம் தொடக்கம் சேவையாற்றும் சேவைக்காலம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இடமாற்றச் சபையுடன் கலந்துரையாடல் வடமாகாணக் கல்வித் திணைக்களம் தன்னிச்சையான நிபந்தனைகளை வகுத்துள்ளது. இந்த நிபந்தனைகளை தேசிய இடமாற்றக் கொள்கைக்கு முரணானவை இதனை வடமாகாண கல்வித் திணைக்களம் பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (வ-14)

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் நிபந்தனையில் ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 6 வருடங்கள் பூர்த்தி செய்தால் இடமாற்றம் செய்யப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

## நாவற்குழி பாலம் அருகே விபத்து



மன்னார் நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த கடலுணவு ஏற்றும் வாகனம் ஒன்று நாவற்குழி பாலத்தில் விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மேற்படி வாகனம் கடலுணவை யாழ்.நகரில் விநியோகித்துவிட்டு மீண்டும் மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை நாவற்குழிப் பாலத்தில் சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து சேற்றுப் பகுதிக்குள் பாய்ந்தது. வாகனத்தில் இருந்த இருவரும் தெய்வாதீன மாகத் தப்பினர். ஆனால் வாகனம் மட்டும் கடும் சேதத்துக்கு உள்ளானது. (ஓ-288)

## நெடுந்தீவில் நடமாடும் சேவை 21 ஆம் திகதியே

யாழ்ப்பாணம், ஓக.19
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெறும் என பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.
குறிப்பிட்ட நடமாடும் சேவை எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் நடமாடும் சேவை ஒருநாள் முன்பாக 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## கோட்ட மட்ட கலாசார விழா

யாழ்ப்பாணம், ஓக.19
வடமராட்சிக் கல்வி வலயத்தில் கோட்டமட்ட கலாசார விழா அந்தந்தக் கோட்டங்களில் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் பல்லின கலாசார நடனம், வில்லிசை, நாட்டிய நாடகம், கூத்து, கிராமிய நிகழ்ச்சி உட்பட கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
கரவெட்டிக் கோட்ட விழா இன்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், மருதங்கேணி கோட்ட விழா எதிர்வரும் 27 ஆம் திகதி தாளையடி றோ.க.த.க. வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (வ-14-35)

## நல்லைக் குமரன் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.19
யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரனின் 21 ஆவது மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகமும் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்த அரசரட்ணமும் கலந்துகொள்வர். (ந)

# வெங்காய விதையை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்
### வெளிநாட்டில் தங்கியிருக்கக் கூடாது என்கிறார் விவசாயப் பணிப்பாளர்

அச்சுவேலி, ஓக.19
யாழ்.மாவட்ட வெங்காயப் பயிர்ச்செய்கை தொடர்பான நீண்டகால பாரம்பரியத்தில் "உண்மை விதை நாற்று மூலமான" வெங்காயப் பயிர்ச் செய்கை பாதிப்பை ஏற்படுத்தாது. விதைக்காக வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லை. உள்ளூரிலேயே வெங்காய விதையை உற்பத்தி செய்து தமது சுய தேவைக்கு பயன்படுத்தலாம். இதற்கான முன்னாயத்தத் திட்டங்களை விவசாயத் திணைக்களம் முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம்.
யாழ்.மாவட்ட வெங்காயப் பயிர்ச் செய்கையில் "பல்தேசிய நிறுவனங்களில்" யாழ். விவசாயிகள் தங்கி இருக்க வேண்டியதுடன் மில்லியன் கணக்கில் வெங்காய விதைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என சமூக ஆர்வலர்கள் மற்றும் மூத்த விவசாயிகள் கவலை தெரிவித்திருப்பது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளரிடம் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து கருத்து கூறுகையில்;
புதிய நடைமுறைகள் அறிமுகமாகும் போது பொதுவாக ஏற்படும் சந்தேகமும் கவலையும் வெங்காய விடயத்தில் ஏற்பட்டி ருப்பது நியாயமானது. இது தொடர்பாக விவசாயத் திணைக் களம் கவனம் செலுத்தாமல் இல்லை. உலகியல் நடைமுறை மாற்றங்களுக்கு அமைவாக யாழ். மாவட்ட விவசாயிகளும் தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் மாற்றத்தை உள்வாங்க வேண்டியது அவசியமாகும்.
இந்த வகையிலும் காலச் சூழல் மற்றும் கள நிலைக்கு ஏற்பவும் வேதாள வெங்காய 'உண்மை விதை' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். நல்ல விளைச்சலையும் பெற்று வருகின்றனர்.



கடந்த வருடம் விவசாயத்திணைக்களத்தால் விதை உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பரீட்சார்த்த அடிப்படையில் செய்கை பண்ணப்பட்டது. அந்த விதையில் முளைதிறன் விகிதம் குறைவாக இருந்தது. இதற்குக் காரணம் எமது பிரதேசத்தின் கூடிய வெப்பநிலையே என்பது பின்னர் கண்டறியப்பட்டிருப்பதால் விதை உற்பத்திக்கான பயிர்களுக்குமிதமான வெப்பநிலையே அவசியம் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.
விவசாயிகள் உரியமுறையில் ஒத்துழைத்து வெங்காய விதை உற்பத்தியில் ஈடுபடும் போது இரண்டு வருட காலத்தில் எமது விவசாயிகளுக்கான வெங்காய விதையை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்து பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (ஐ-11)

# மகாவலி கிளை ஆற்றில் நீராடிய மாணவர்கள்சடலமாக மீட்பு

திருமலை, ஒக.19
திருகோணமலை கிண்ணியா சுரங்கல் மகாவலி கிளை ஆற்றில் நேற்றுமுன் தினம் நண்பகல் நீராடச் சென்று காணாமற்போன மூன்று மாணவர்களின் சடலங்கள் மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

ஏழு மாணவர்கள் ஆற்றில் நீராடச் சென்றுள்ளதுடன் அவர்களில் 5 பேர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ள னர்.

அவர்களில் 2 பேர் உயிர்தப்பி யுள்ளதுடன் ஏனைய மூன்று பேர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணா மற்போயினர்.



காணாமற்போன மாணவர்கள் 4 மணி நேரத்துக்குப் பின்னர் சட லமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிண்ணியா மஹ்ருப் நகரை சேர்ந்த ஜீனைதீன் முகமது ஹிஜாஸ், முகமது ரவூப் நியாஸ், அப்துல் மனாப் பரியதுல்லா இம்ரான் ஆகிய மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் 16 வயதான மாண வர்கள் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## கல்முனையில் வாகனத் தரிப்பிடம் அமைக்க பிரேரணை கையளிப்பு



கல்முனை, ஒக.19
ஆசிய மன்றத்தின் அனுசர ணையில் கொய்க்கா நிறுவ னத்தால் கல்முனை மாநக ருக்கான வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கான பிரேர ணைத் திட்டம் கையளிக்கும் நிகழ்வு மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் வெள்ளிக் கிழமை இடம் பெற்றது.

ஆசிய மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ. எம்.வலிதீனின் நெறிப்படுத் தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொரிய நாட்டின் சிஙாக்கொல் பல்கலைக்கழ கத்தின் பேராசிரியரும் கொரிய நகர அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவ னத்தின் ஆலோசகருமான சூ லிமால் மாநகர முதல்வரிடம் பிரேரணை கையளிக் கப்பட்டது.

கல்முனை வர்த்தக சமூகத் தினர் முதல்வரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் குறித்த வாகனத் தரிப்பிடம் கல்முனை மாநகர மத் தியில் அமைக்கப்படவுள் ளது.

மேற்படி வாகனத் தரிப்பிடத் திற்கான முதல் கட்ட நிதியாக கொய்க்கா செயற்றிட்டத்தால் 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது கல் முனை மாநகரால் முன்னெ டுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் முதல்வரால் விளக் கமளிக்கப்பட்டது. கல்முனை மாநகரில் தனியார் முதலீட் டாளர்களின் பங்களிப்பு மற் றும் ஆர்வம் தொடர்பிலும் கலந் துரையாடப்பட்டன.

> **"வாகனத் தரிப் பிடத்திற் கான முதல் கட்ட நிதியாக கொய்க்கா செயற்றிட் டத்தால் 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.**

இந்நிகழ்வில் ஆசிய மன்றத் தின் அதிகாரி மின்கிம், கல் முனை மாநகர ஆணையா ளர் ஜே.லியாகத் அலி, பொறி யியலாளர் ஹலீம் ஜௌசி, ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ)

# இயங்காத நிலையில் ஆயுள்வேத வைத்தியசாலை

## உறுகாமம் மக்கள் விசனம்

மட்டக்களப்பு, ஒக.19
மட்டக்களப்பு, செங்கலடி பதுளை வீதியின் உறுகாமம் பிரதேசத்தில் அமைக்கப்பட் டுள்ள ஆயுள்வேத வைத்திய சாலை இதுவரை இயங்காத தால் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபை முன் னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரின் நிதி ஒதுக் கீட்டு மூலம் உறுகாமம் மீள் குடியேற்ற கிராமத்தில் புதிதாக ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டு 5 மாதங்க ளுக்கு மேலாக சுகாதார அமைச்சிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

எனினும் இவ் வைத்திய சாலை இதுவரையில் இயங் காமல் இருப்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின் றனர்.

செங்கலடி பதுளை வீதியி லுள்ள கோப்பாவெளி, உறுகா மம், கித்துள், கரடியனாறு, வேப்பவட்டுவான், மரப்பாலம், உன்னிச்சை, இலுப்படிச் சேனை போன்ற 15 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி இவ் ஆயுள் வேத வைத்தியசாலைக் கட் டடம் கட்டப்பட்டு சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட் டுள்ளது.

ஆனால் தற்போது கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் இது தொடர்பில் எந்தவித கவனமும் செலுத் தாததனால் இக் கட்டடம் மூடப்பட்ட நிலையில் பல மாத காலமாக இருந்து வருவதால் நோயாளிகள் நாளாந்தம் சுமார் 35 கிலோ மீற்றர் தூரம் ஏறாவூர் பிரதேசத்துக்குச் சென்று சிகிச்சை பெறவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி இந்நோயாளர்களின் நன்மை கருதி இவ்வைத் தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிப்பதோடு மருந்து வகைகளையும் அனுப்பி இவ் வைத்திய சாலையை செயற்பட வைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



கிழக்கின் மறுமலர்ச்சி எனும் தொனிப்பொருளிலான விவசாய கைத்தொழில் கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டிலான இந்த கண்காட்சி ஏறாவூர் றஹ்மானியா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரிவதி கலபதி, மாகாண அமைச்சர்களான ஹாபீஸ் நசீர் அஹமட், எம்.எஸ்.உதுமாலெவ்வை, எம.ஐ.மன்சூர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் எஸ்.அபேகோன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கொன்ஸ்டபிள் விபத்தில் சாவு

மட்டக்களப்பு, ஒக.19
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாவடி ஓடையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயி ரிழந்தார்.

கல்குடா பொலிஸ் நிலை யத்தில் கடமையாற்றி வந்த மகேஸ்வரராஜா சிவமோகன் (வயது 29) என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதாக கல்குடா பொலிஸார் தெரி வித்தனர்.

சித்தாண்டி முருகன் ஆல யத்தில் தற்போது உற்சவம் நடைபெறுவதால், அதற்கான இரவு நேர காவல் கடமையில் ஈடுபட்டுவிட்டு குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் மோட்டார் சைக் கிளில் வீடு திரும்பிக் கொண் டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ)



## சட்டவிரோதமாக ஆள்களை ஆஸிக்கு அனுப்பியவர் கைது

மட்டக்களப்பு, ஒக.19
சட்டவிரோதமாக ஆஸ்திரே லியாவுக்கு படகில் ஆள்களை அனுப்பி வந்ததாகக் கூறப் படும் முகவர் ஒருவரை சந் தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு கைதுசெய் துள்ளதாக வாகரை பொலி ஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, வாழைச்சேனை போன்ற இடங்களிலிருந்து சட்ட விரோதமாக படகில் ஆள்களை ஆஸ்திரேலியா வுக்கு அனுப்பி வந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையி லேயே இவரை கைது செய்துள்ளதாகவும் பொலி ஸார் கூறினர்.



குறித்த சந்தேக நபரை வாகரை, கதிரவெளியில் கைது செய்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

## கேரளாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படும் கஞ்சா

### கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக.19
கேரளாவிலிருந்து தலை மன்னார் ஊடாக இலங்கைக்கு கஞ்சா கொண்டுவரப்பட்டு கிழக்கு மாகாணத்தின் மட் டக்களப்பு மாவட்டம் உட்பட பல இடங்களிலும் விற்பணை செய்யப்படுகின்றது என்று கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

இவ்வாறு கஞ்சாவை மொத் தமாக விற்பனை செய்கின்ற வர்கள் மற்றும் அதை குளி ரூட்டப்பட்ட வாகனங்களில் கடத்துகின்றவர்களை கைது செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரமுகர்களுடனான செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுமக்களுக்காகவே பொலி ஸார் உள்ளனர். மாறாக பொலிஸாருக்காக பொதுமக் கள் இல்லை.

பொலிஸார் மக்களுக்கு உதவி செய்யும்போது பொது மக்க ளும் பொலிஸாருக்கு ஒத்து ழைப்பாக இருக்க வேண் டும்.

கேரளாவிலிருந்து தலை மன்னார் ஊடாக இலங்கைக்கு கஞ்சா கொண்டுவரப்பட்டு கிழக்கு மாகாணத்தின் மட்டக் களப்பு மாவட்டம் உட்பட பல இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு விற்பனை செய்யும் பெரிய புள்ளிகள் கைதுசெய்யப் படுவதில்லை. இதில் சிறிய கஞ்சா கட்டுக்களை வைத்திருப் பவர்கள்தான் பிடிபடுகின் றனர்.

இவ்வாறு கஞ்சாவை மொத் தமாக விற்பனை செய்கின்ற வர்கள் மற்றும் அதை குளிரூட்டப்பட்ட வாகனங் களில் கடத்துகின்றவர்களை கைது செய்ய வேண்டும்.- என்றார். (வ)

# அரசின் பிழைகளை மூடி மறைக்க எதிர்க்கட்சி மீது சேறு பூசப்படுகிறது

## திஸ்ஸ அத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு,ஒக.19
அரசின் பிழைகளை மூடி மறைத்துக் கொள்ளும் நோக்கிலேயே எதிர்க்கட்சி மீது சேறு பூசப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி பலவீனமடைந்துள்ளது என குற்றம் சுமத்துவதனை விடவும், ஆளும் கட்சி மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். வடக்கு தேர்தல் குறித்து அரசு அச்சமடைந்துள்ளது.

வடக்கில் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதனை அரசு புரிந்து கொண்டுள்ளது. வடக்கு தேர்தலை குழப்புவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சி மீது பல்வேறு குற்றச் சாட்டுக்களை சுமத்திய போதிலும், உண்மையில் அரச் சொத்து துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விதி மீறல்களில் ஆளும் கட்சி ஈடுபட்டுள்ளது. அரசின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக பெரியளவில் போராட்டங்கள் நடத்தப்பட உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



அரசு எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக பெரியளவில் போராட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

## தேசிய உற்பத்திகளை ஊக்குவிக்க நடவடிக்கை



கொழும்பு, ஒக.19
தேசிய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், தேசிய உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் கொள்கை அடிப்படை யிலே சகலவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட தயாரிப்புக்கான தனியார் உற்பத்தியாளர்களிடம் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடலில் பங்கு கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய, மிருகவள, தேங்காய் சிரட்டையை அண்மித்த பொருள்கள், அழகுசாதன மற்றும் மாணிக்கக்கல் உள்ளிட்ட துறை சார்ந்த பல்வேறுபட்ட பிரதிநிதிகளிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தங்களாலான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக தனியார் பிரிவு உற்பத்தியாளர்கள் இதன் போது தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பெருந்தெருக்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் விஸ்தரிக்கப்பட்டதன் காரணமாக தமது தொழில் துறையை உரிய வகையில் முன்னெடுக்க முடிவதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (எ)

## ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை

கொழும்பு,ஒக.19
76 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.


சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்கப்பள்ளி எனும் பிரதேசத்திலேயே இச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற பொலிசார் கொலை செய்யப்பட்டவர் வசித்து வந்த வீட்டிலிருந்து அவரது சடலத்தை கைப்பற்றியுள்ளனர்.

ஓய்வுபெற்ற அதிபர் தனது வீட்டில் தனியாகவே வசித்து வந்துள்ளார்.


இந்தக்கொலைக்கான காரணம் என்ன என்பது தொடர்பிலோ கொலையாளி தொடர்பான விவரங்களோ இதுவரைக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் கொல்லை செய்யப்பட்டவரின் மூத்த மகன் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தற்சமயம் பிரதேசத்தை விட்டு தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவித்தனர். (எ)

## அம்பாந்தோட்டையில் மண்டையோடு விற்பனை



கொழும்பு,ஒக.19
ஹம்பாந்தோட்டை சிரிபோபுர பகுதியில் உள்ள மயானமொன்றில் மனித மண்டையோடுகளை விற்பனை செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருவது தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

கொழும்பு மற்றும் சில பகுதிகளில் நடைபெற்று வருவதாகக் கூறப்படும் மாந்திரீகத்துடன் தொடர்புபட்ட சில வேலைகளுக்காக இவை பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)



கடற்படையின் 85 அதிகாரிகள் தமது பயிற்சியினை முடித்துக்கொண்டு வெளியேறினர். இந்நிகழ்வு திருகோணமலை கடற்படைத் தளத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயா ரத்நாயக்க கலந்துகொண்டார்.

## வன்புணர்வு கொலை சந்தேகநபர் கைது

கொழும்பு,ஒக.19
பெண்ணொருவரைக் கொலைசெய்த குற்றத்தின் பேரில் நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த நபரொருவரை களுத்துறை தெற்கு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் 27 வயதானவர் அவர் தனது நண்பனின் 58 வயதான தாயாரையே வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்துள்ளார்.

இக்கொலையானது கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் குடி போதையில் தனது நண்பனின் தாயாரை வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார். பின்னர் அவருடன் ஏற்பட்ட வாக்குவாதமொன்றையடுத்து அப்பெண்ணைக் கொலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது. மிக நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த இவரே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## வருமான வரி செலுத்தாதோர் மீது நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,ஒக.19
வருமான வரிகளைச் செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை ஆரம்பம் என்று தேசிய இறை வரி ஆணையாளர் நாயகம் திருமதி மல்லிகா சுமரசேகர தெரிவித்தார்.

வரி செலுத்தாதவர்களின் தகவல்களைச் சேகரிக்க சுதேச இறைவரி ஆணையாளரொருவரின் கீழ் இந்த விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த வருமானங்களைப் பெறும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் மற்றும் 'ரியுசன்' வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் போன்ற தரப்பினர் அவர்களது வருமானத்துக்கு அமைய வரிகளைச் செலுத்துகிறார்களா என்பது சம்பந்தமாக இக்குழு விசேட கவனத்தைச் செலுத்தவுள்ளது.

தற்போது வரிசெலுத்துவோரின் கோவைகளின் எண்ணிக்கை 918,000 ஐத் தாண்டியிருப்பதாகவும் இவ்வாண்டுக்குள் அந்த எண்ணிக்கையை 10 லட்சமாக அதிகரிப்பதே அதன் இலக்காகவுமுள்ளது.

பாரிய அளவில் வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள வர்த்தகர்கள் மூலமாகவே இந்தநாட்டின் ஒட்டு மொத்த வரி வருவாயின் நூற்றுக்கு 65 வீதமான 2500 கோடி ரூபாய்கள் வரையில் செலுத்தப்படுவதாகவும் இத்தரப்பினருள் இரண்டாயிரம் பேர் வரை உள்ளடங்குகின்றனர்.

மேலும், கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆறு மாதகாலத்துள் தமது திணைக்களம் 15,000 கோடி ரூபாய்களைத் தாண்டி வரியைச் சேகரித்துக்கொண்டுள்ளது. ஆண்டின் வருமான வரி இலக்கு 41,200 கோடி ரூபாய்கள் எனவும் தெரிவித்துள்ளார். (எ-22)

வரி செலுத்துவோரின் கோவைகளின் எண்ணிக்கை 918,000 ஐத் தாண்டியிருப்பதாகவும் இவ்வாண்டுக்குள் அந்த எண்ணிக்கையை 10 லட்சமாக அதிகரிப்பதே அதன் இலக்காகவுமுள்ளது.



## புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இன்றிலிருந்து வகுப்பு நடத்தத் தடை



கொழும்பு,ஒக.19
இன்று தொடக்கம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் ஒகஸ்ட் 25ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை 5 ஆம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு, தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த காலத்தில் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள் விநியோகமும் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைக்கு முன்னர் பிள்ளைகளுக்கு சிறிது ஓய்வு வழங்க கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

பிள்ளைகளுக்கு சுதந்திரமாக செயற்பட நேரமும் இருக்க வேண்டும். 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில், ஜீ.சீ.ஈ சாதாரண/ உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் தினத்திலிருந்து 05 தினங்களுக்கு முன் இருந்து பரீட்சைகள் முடியும் வரையிலான காலப்பகுதியில் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு துணை வகுப்புக்களை அமைத்தல், விரிவுரை கருத்தரங்கு செயலமர்வு, மாதிரி வினாப்பத்திரம் அச்சிட்டு விநியோகித்தல் போன்றவை வர்த்தகமானி மூலம் தடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு முன்னர் பிள்ளைகளுக்கு சிறிது ஓய்வு வழங்க கல்வி அமைச்சு எடுத்த தீர்மானம் காலத்துக்குப் பொருத்தமானதென சிறுவர் நரம்பியல் மருத்துவ நிபுணர் வைத்தியர் அநுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போரினால் பாதிப்புற்றவர்களை முந்தைய நிலைக்கு இட்டுச் செல்ல..

உலக மனிதாபிமான நாள் இன்று. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இதே திகதியில், நாளில் ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், இருபத்திரண்டு பேர் பலியாகினர், காவு கொள்ளப்பட்டனர். அவர்களை நினைவு கூரும் நாளாக ஒகஸ்ட் பத்தொன்பது கொள்ளப்படுகிறது.

மனிதாபிமான உதவிப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளைகளில் உயிர் துறந்தவர்களின், மிக ஆபத்தான பணிகளில் உயிர் நீத்தவர்களின், அர்ப்பணிப்பை மதிக்கும் வகையில் உலக மனிதாபிமான நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஏனையோர் செல்லத் தயங்கும் இடங்களிலும், அபாயகரமான நிலைகளிலும் துணிவுடன் பணியாற்றுவோர், மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க இந்த நாள் உதவுகிறது.

அது மட்டுமன்றி, மக்கள் நலன் நாடிய ஆபத்தான பணிகளில் ஏனையோரும் ஈடுபடுவதற்கு இந்நாள் உந்து சக்தியாக விளங்குகிறது எனலாம். அனைத்துலகின் மனிதாபிமானத் தேவைகள் குறித்து சிந்தித்துப் பல்வேறு திட்டங்களை ஆரம்பிக்கும் அல்லது நிறைவேற்றும் நாளாகவும் இது கொள்ளப்படுகிறது. மனிதாபிமான உதவி என்பது எப்போதும் பாகுபாடின்மை, நடுவு நிலைமை,சுதந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்த நாளில் மனிதாபிமான உதவியாளர்கள் கௌரவிக்கப்படுவதுடன் அவர்களது உதவி தேவைப்படும் எந்த இடத்துக்கும் சென்று, பணியாற்ற வழியமைத்துக் கொடுப்பதும் அவசியமானதாகும்.

மனிதாபிமானப் பணியாளர்கள் அனைத்துலகத்தவர் என்ற கணிப்பைப் பெற்றிருப்பினும், பெரும்பாலும் அந்தந்த நாட்டைச் சேர்ந்தவர்களே மனிதாபிமானப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அனர்த்தம் ஒன்று நிகழ்ந்த இடத்து, வெளி உதவிகள் வரும் வரை, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மனிதாபிமானப் பணியாளர்கள் வாழாதிருப்பதில்லை.

தப்பிப் பிழைத்தவர்களும், இயலுமை உள்ளவர்களும், அந்த அனர்த்தத்தின் போது- துணிந்து அவசர உதவி தேவைப்படுவோருக்குத் தம்மாலான உதவிகளை மேற்கொள்ள கங்கணம் கட்டி செயற்படுகின்றனர். எனினும் ஒவ்வொரு நாடும், தன்னலமற்ற, மனிதாபிமான உதவி புரிபவர்களை உருவாக்கவும், அதற்கான உந்து சக்தியை வழங்குவதாகவும் அமையத்தக்கவாறும் இந்நாள் வடிவமைக்கப்பட வேண்டும். ஐ.நா.பிரகடனத்தின் எதிர்பார்ப்பும் அதுவே.

மனிதாபிமானப் பணியாளர்களின் சேவை மகத்தானதாகும். பாதிக்கப்பட்டவர்கள், எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கத் தக்கதாக அவர்களைத் தயார் நிலைக்கு ஆளாக்குவது இத்தகைய சேவையாளர்களின் பணிகளில் பிரதானமானது.

பாதிக்கப்பட்டவர்களின் குரலை உலகறியச் செய்வதும் மனிதாபிமானப் பணியாளர்களின் தட்டிக் கழிக்க முடியாத ஒரு கடமையாக உள்ளது.

சமூகங்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகளைக் களைந்து நிலையான சமாதானம் நிலவக் கூடியவாறு சமூகத்திற்கு வழிகாட்டுபவர்களாக இந்தப் பணியாளர்கள் திகழ்கின்றனர். அதற்கான பூரண ஒத்துழைப்புகளை, அந்தந்த நாடுகள் வழங்குமிடத்து அவர்களது பணி சிறக்கும் என்பதுடன் ,அவை மேலோங்கவும் வழி செய்யும்.

அனர்த்தத்துக்குள்ளானோரின் வாழ்க்கை நிலையைக் கட்டியெழுப்புவது சாதாரணமான பணியன்று. மனிதாபிமான பணியாளர்களும் அவர்களோடு இணைந்தவர்களும் முழு மூச்சுடனும், முழு வீச்சுடனும் இதற்காகத் தம்மை அர்ப்பணிக்காதுவிடின் அதனாற் பயனில்லை.

எங்கள் நாட்டை ஆழிப்பேரலை அனர்த்தம் தாக்கி இன்னும் ஓர் ஆண்டில் ஒரு தசாப்தம் முடிவுறப்போகிறது.

எனினும், பாதிப்புற்றோரின் வீடு மற்றும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது, எங்கள் அரசும், நாடும் எந்த வகையில் சேர்க்கப்படவேண்டும் என்ற வினாவையே எழுப்புகிறது.வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் , ஆழிப் பேரலை என்ற இயற்கை அனர்த்தத்தால் மட்டுமன்றி, போர் என்ற செயற்கை அனர்த்தத்தாலும் மிக அதிக அளவில் பாதிப்புற்றவர்கள். ஆனால் அவர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையினர், அதிக வீதத்தினர் , தமது முந்தைய வாழ்க்கை நிலைக்குத் திரும்ப முடியாத அவலத்திலேயே இன்னும் அல்லாடுகின்றனர்.

அனைத்துலக நாடுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவை, அவர்களை முந்தைய நிலைக்கு மீள்விக்க உதவுகின்றன. எனினும் பாதிப்புற்றவர்களில் மிகப் பெரும்பாலானோர், போருக்கு முந்தைய வாழ்க்கை நிலையில் காற்பங்கைத் தானும் எட்டிப் பிடிக்க வசதிகள் அற்றவர்களாக, வக்கற்றவர்களாக நாள்களைப் போக்கும் நிலையே மிஞ்சி நிற்கிறது.

அது குறித்துப் பரந்தளவிலான கனதியான செயற்பாடுகள் எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டே அவர்கள் நாள்களை நகர்த்த வேண்டியது தானா..?

# சம்மட்டியால் கொசுவை அடித்தவன் நிலையில் அரசு

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

கோகுலன்

### நவிப்பிள்ளையின் வருகை; கொமன்வெல்த் மகாநாடு, எதிர்நோக்கப்படும் இருவித தலையிடிகள்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தற்போதைய அரசிலுள்ள சில அமைச்சர்களைச் சந்தித்துப் பேசியிருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.'

மிகச் சௌகரியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் கொண்டிருப்பது மட்டுமல்ல நவீனத்துவமான ஆயுதப் படைகள், முழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களம் இவை அனைத்துமே கூப்பிட்டவுடன் செயலில் இறங்கக்கூடிய தன்மை பெற்றுள்ள அரசானது கடந்த வாரம் ஒருவித பயபீதிக்குள்ளாகியிருந்தமை வெளிப்படையாயிற்று.

இந்த நிலைமைக்கு கடந்த வாரம் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் பலவற்றில் இரண்டு முக்கியத்துவம் பெறுகின்றன. இவைகளில் ஒன்று கொழும்பு கோட்டையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் தலைமையில் நடைபெறவிருந்த அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம். இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான கட்டளையொன்றை பெறுவதற்கு உயர் பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்கள். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106 ஆவது பிரிவினை இவர்கள் தமக்குச் சாதகமாக மேற்கோள் காட்டியிருந்தார்கள். நிச்சயமாக இவர்கள் அரச தரப்புத் தலைவர்கள் ஆலோசனையின் பேரிலேயே இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆர்ப்பாட்டங்களோ , ஊர்வலங்களோ இடம்பெறுவதை அரசு விரும்பவில்லை.

இந்தச் செயற்பாட்டின் முக்கியத்துவம் மனுவைத் தாக்கல் செய்த பொலிஸ் அதிகாரிகளின் தரங்களைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

கொழும்பு பொலிஸ் பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.ஏ.டி.எஸ்.குணவர்தன, கொழும்பு மத்தி சுப்பிரின்டன்ட், பாலித சிறி வர்தன கொழும்பு மத்தி (II) உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் எம்.வி.ஆர். வி.என். ஆரியரட்ண, கோட்டை பொலிஸ் நிலைய அலுவலக பொறுப்பாளர் பிரதம இன்ஸ்பெக்டர் சமீரா ரட்னாயக்க, கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஏ.விஜேதுங்க ஆகியவர்களே அந்த உயர்நிலை பொலிஸ் அதிகாரிகள்.

நீதிவான் சகாப்தீன் தமது தீர்ப்பில் ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்ய முடியாது என்று கூறியதுடன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் மட்டுமே ஆர்ப்பாட்டம் நடப்பது வரையறுக்கப்பட்டுள்ளது என்றார். அவர்கள் பாதைகளை தடை செய்வார்களானால் பொலிஸார் அவர்களை அகற்றுவதற்கு குறைந்த பட்ச பலவந்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்றும் தெரிவித்தார். நீதிவான் கட்டளை இவ்வாறு இல்லாவிட்டாலும் கூட பொலிஸாருக்கு இந்த வகையில் சட்ட ரீதியான பொறுப்பு உண்டு.

**நவிப்பிள்ளையின் இலங்கை வருகை**

ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகிறார். ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள இரு தீர்மானங்களின் பின்னணியில் அவரது இலங்கை விஜயம் அமைகின்றது. இந்தப் பயணத்தின் இறுதியில் வரும் 31 ஆம் திகதி ஜெனிவா திரும்புவதற்கு முன்னர் அவர் பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரைநிகழ்த்துவார். இலங்கையில் இருக்கும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ , அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்துவதுடன் உயர் மட்ட நீதித்துறை பிரமுகர்கள், தேசிய மனித உரிமை சபையின் உறுப்பினர்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான செயற்றிட்ட குழு உறுப்பினர் ஆகியவர்களையும் சந்திப்பார். சிவில் சமூகத் தலைவர்களுடனும் அவர் ஆலோசனைகள் நிகழ்த்துவதுடன் வடக்கு கிழக்குக்குச் சென்று களநிலைமைகளையும் ஆராய்வார்.

வரும் 30 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நவிப்பிள்ளையை சந்திக்கவிருக்கிறார்கள். அதன் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியவர்கள் தற்போது கனடாவிலுள்ளார்கள். அங்கு புலம்பெயர் சமூகத்தினர் நிதி சேகரிப்பு வைபவங்களுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். த.தே.கூட்டமைப்புத் தலைவர்கள் வடக்குத் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கு போதுமான அளவு நிதியுடன் வந்துசேர்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். நவநீதம்பிள்ளை வெலிவேரியாவில் ராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டுச் சம்ப வம் மற்றும் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் சம்பவம் குறித்தும் ஆராயக்கூடும் என்று தெரிகின்றது.

**பொதுநலவாய மாநாட்டுக்கான ஏற்பாடுகள்**

இவைகளுக்கிடையில் நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அழைப்பதற்கான செய்தியுடன் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்கு நேற்று புறப்பட்டு செல்லவிருந்தார். பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் பீரிஸ் ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்தியிருந்தார்.

மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ அவசரமாக புதுடில்லி பயணம் ஒன்றை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்படியும் பீரிஸ் கோரப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. மன்மோகன் சிங்குடனான உறவுகளை மீளவும் நெருக்கமாக்கிக் கொள்ளும்படியாக பீரிஸ் கோரப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இந்திய அரசு கொள்கைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளவரான இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்தியாவில் வெளியுறவு துறை அதிகாரிகள் மற்றும் பிரதமரின் அலுவலக அதிகாரிகளோடும் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள முயல்வார் என்று தெரிகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் சமீப காலமாக சீர்குலைந்திருப்பதற்கு இலங்கை தலைவர்கள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பது மற்றும் அதிலுள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கி விடுவது குறித்து பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட்டுவந்திருப்பது காரணமாக அமைந்தது.


பொலிஸ் அதிகாரங்களை இல்லாதழிப்பதற்கான அவசர சட்ட வரவொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவிருந்த அரசாங்கம், அவ்வாறு செய்வதால் இந்தியா அதற்கு எதிர் நடவடிக்கை எதனையும் எடுக்காமல் இருக்கச் செய்வதற்காக அந்த முயற்சி இப்போது தாமதிக்கச் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் 13 ஆவது திருத்தத்தை மாற்றி அமைப்பது அல்லது திருத்தம் செய்வது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்று இப்பொழுது தன் அமர்வுகளை நடத்தி வருகின்றது. இந்திய முதலமைச்சர் பல விடயங்களில் இப்போது கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் அவருக்கு இருக்காது என்று இந்திய வட்டாரங்கள் கருதுகின்றன. அது மட்டுமன்றி இந்தியாவில் அடுத்த ஏப்ரலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாடு மாநில அரசை அல்லது எதிர்த் தரப்புகளை காங்கிரஸ் மத்திய அரசு பகைத்துக் கொள்ளவும் விரும்பவில்லையென்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியத் தேர்தல் ஒன்று நடக்குமானால் அதன் பின்னர் தமிழ்நாட்டின் கட்சிகள் அல்லது அரசின் ஆதரவு மத்திய காங்கிரஸ் அரசுக்குத் தேவைப்படலாம். இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டுக்கு வருவது சந்தேகமே.

2011 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் பேர்த் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டிலும் மன்மோகன் கலந்து கொள்ளவில்லை. இதை முன்மாதிரியாக இந்திய அதிகாரிகள் எடுத்துக் காட்டி விவாதிப்பார்கள் என்று கருதலாம்.

இதில் இன்னும் ஒரு விடயம் யாதெனில் வடக்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபை தேர்தலாகும். வடக்கு தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்படாத விடத்து இந்திய பிரதமர் மாநாட்டுக்கு வருவது முற்றிலும் சாத்தியமாக இருக்காது என்றே ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன. வடக்கில் தேர்தல் பரப்புரைகள் பெரிதாக சம்பவங்கள் எதுவுமின்றி நடைபெற்று வருகின்றன என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வாக்காளர்கள் மத்தியில் பலத்த ஆர்வம் காணப்படுகின்றது. அநேகர் தமது பெயர்கள் வாக்காளர் பதிவேடுகளில் இருக்கின்றனவா என்று பரிசீலித்து வருகிறார்கள். இன்னும் பலர் தமது தேசிய அடையாள அட்டைகளை அவசரமாகப் பெற்றுக் கொள்வதில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கபே (சுயாதீன மற்றும் நீதியான தேர்தலுக்கான அமைப்பு) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாம் காணாத ஓர் அம்சம் இதுவாகும் என்றார் தென்னக்கூன் இந்த அமைப்பின் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கென ஜப்பானிய அரசு 10 மில்லியன் ரூபாவை அண்மையில் நன்கொடையாக வழங்கி இருக்கிறது. தாங்கள் நடத்தியுள்ள தேசிய அடையாள அட்டை வழங்கும் 32 நாள் நடமாடும் சேவைகளில் இதுவரை 27 ஆயிரம் பேர் அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.


வரும் நாள்களில் அரசின் நிகழ்ச்சி நிரல்களில் நவிப் பிள்ளையின் வருகை முக்கிய இடம்பெற்றிருக்கும் என்பது திண்ணம். கடந்து போன விவகாரங்களில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அவர்கள் நவிப்பிள்ளைக்கு எடுத்து விளக்குவார்கள். இப்பொழுது மீண்டும் தலைதூக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து அரசுத் தலைவர்கள் விளக்கப்படுத்த வேண்டியிருக்கும். இலங்கையானது ஒரு செயல்படும் ஜனநாயகம். அங்கே மனித உரிமைகளும் சுதந்திரங்களும் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். பொது நலவாய உச்சி மகாநாட்டில் வலியுறுத்த வேண்டிய முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்றாகும். ஜனநாயக ரீதியிலான எதிர்க்கட்சிகளின் மாறுபட்ட கருத்துக்களை நசுக்குவது தொடர்பான விடயத்தில் கவனம் செலுத்தப்படுவது என்பது இயற்கையே. இதனால் தான், ஒரு சிறு கொசுவை பெரிய சம்மட்டி கொண்டு தாக்கினால் அதற்குரிய எதிர் விளைவுகள் ஏற்பட்டே தீரும் என்று கூறுகிறார்கள்.



முதல் ஒளிப்படக் கருவி. இதில் படம் எடுக்க ஐவர் தேவை

சர்வதேச ஒளிப்பட தினம் இன்று

# நிஜங்களாய் வாழும் நிழல்கள்



ஒளிப்படம் என்பது வெறும் படம் அல்ல. அது ஒரு கலை. வரலாற்று பதிவுகள், சமூக பிரச்சினைகள், நிகழ்ச்சிகள், மாநாடு, பொதுக்கூட்டம் என வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளை யும் உடனடியாக மட்டுமன்றி சந்ததி சந்ததியாக நம் கண் முன் கொண்டு வருவது ஒளிப்படம்தான்.

தொகுப்பு
தட்சா . ஜோ

வரலாற்றை அடுத்த சந்திக்கு எடுத்துச் செல்வதில் ஒளிப் படங்கள் அரிய பங்காற்று கின்றன. ஆயிரம் வார்த்தைகளில் கூறப்படும் ஒரு விடயத்தை ஒரு ஒளிப்படம் எளிதில் கூறிவிடும்.

ஒளிப்படங்களின் சிறப்பையும், ஒளிப் படக்காரரகளின் திறமையும் கொண் டாடும் வகையில் உலக ஒளிப்பட தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

20 ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் உலக வரலாற்றை மாற்றியுள்ளன. உதாரணமாக, சீன வீரரகளின் ராணுவ பீரங்கியை எதிர்த்து நின்ற டேங்க் மேன், வியட் நாம் போரை நிறுத்த காரணமாக இருந்த சிறுமியின் ஒளிப்படம், 1994ம் ஆண்டு. சுடானில் நிலவிய உணவுப் பஞ்சத்தை எடுத்துரைத்த குழந்தை யின் ஒளிப்படம் போன்றவற்றைக் கூறலாம்.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் லூயிஸ் டாகுரே என்பவர், டாகுரியோ டைப் எனப்படும் ஒளிப்படத்தின் செயல் பாட்டு முறையை வடிவமைத்தார். 1839 ஆம் ஆண்டு ஜனவரி 9ம் தேதி பிரான்ஸ் அக்கடமி ஆப் சயன்ஸ், இம்முறைக்கு ஒப்புதல் அளித்தது. ஓகஸ்ட் 19 ஆம் திகதி , பிரான்ஸ் நாட்டு அரசு டாகுரியோடைப் செயல்பாடு களை ப்ர டு தி வேரல்ட் என உலகம் முழுவதும் அறிவித்தது. இவற்றைப் பறைசாற்றும் வகையிலேயே இன்று இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

1826 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டை சேரந்த ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர் முதல் நிலையான நவீன ஒளிப்படத்தை முதலில் எடுத்தார. இதன் பின், 1839ம் ஆண்டு லூயிஸ் டாகுரே, பரிஸில் உள்ள ஒரு தெருவை ஒளிப்படமாக எடுத்தார். தனிநபர எடுத்த முதல் ஒளிப்படமாக இன்று வரை இவ் ஒளிப்படமே பேசப்படுகின்றது.

சிறந்த ஒளிப்படங்களுக்கு ஆண்டு தோறும் பல்வேறு அமைப்புகளால் விருதுகள் வழங்கப்படுகின்றன. பத்தி ரிகை துறையில் சிறந்த ஒளிப் படங்களுக்கு வேரல்ட் பிரஸ் போட்டோ விருது மற்றும்இதழ் மற்றும் புலிட்சர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

பெரிய பெட்டி வடிவில் கண்டுபிடிக் கப்பட்ட கமரா இன்று கையடக்க டிஜிட்டல் கமராவாக உருமாறியிருக் கிறது. இன்றைய காலகட்டத்தில் குழந் தைகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை கமராவும் கையுமாக உலா வருவதை காணமுடிகின்றது.

படச் சுருள்களை பிலிம் ரோல்கள் வாங்கி ஒளிப்படம் எடுத்த காலம் கப்பலேறிப் போய் கையில் உள்ள கைபேசிகளில் எளிதாக படம் எடுக்கும் வகையில்வந்துவிட்டது தொழில்நுட்பம்.


ஒளிப்படம் என்பது வெறும் படம் அல்ல. அது ஒரு கலை. வரலாற்று பதிவுகள், சமூக பிரச்சினைகள், நிகழ்ச் சிகள், மாநாடு, பொதுக்கூட்டம் என வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளை யும் உடனடியாக மட்டுமன்றி சந்ததி சந்ததியாக நம் கண் முன் கொண்டு வருவது ஒளிப்படம்தான்.

பக்கம், பக்கமா எழுதினாலும் ஏற் படுத்தாத தாக்கத்தை ஒரு ஒளிப்படம் அழுத்தமாக மனதில் பதிக்கும்.

நிகழ்காலத்தின் ஒரு நொடிப் பொழுதை அபூர்வ நிகழ்வை காட்சியாக உறைய வைக்கும் ஒளிப்பட கலைக்கும் ஒரு தினம்..

சர்வதேச ஒளிப்பட தினமான இன்று ஒளிப்பட ஆர்வலர்களை வாழ்த்துவது டன் ஒளிப்பட ஊடகவியலாளரகளுக் கும் வாழ்த்துக்கள்.

## பேசும் படங்கள்



வியட்நாம் போரின்போது பாதிக்கப்பட்ட சிறுமியின் உடை எரிந்த பின் அவர் ஆடையின்றி ஓடிவரும் காட்சி.



சீனர்களின் பீரங்கியை எதிர்த்து நின்ற டேங்க் மேன் என்பவரின் புகைப்படம். சீன அரசுக்கு எதிராக நிகழ்ந்த தியனன்மென் சதுக்க எதிர்ப்புப் போராட்டத்தில் போராட்டக்காரர்களை ஒடுக்க வந்த சீனப் பீரங்கியை தனியொருவராக நின்று வழி மறித்த அபூர்வக் காட்சி.



சூடானில் நிலவிய உணவுப் பஞ்சத்தை எடுத்துரைத்த படம். அந்த குழந்தை இறந்தவுடன் அதை உண்ணக் காத் திருக்கும் பிணந்தின்னிக் கழுகு.



இத்தலிப் என்ற ஊரில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட தன் தந்தையில் இறுதிச் சடங்கில் கதறி அழும் மகன் (சிரியா)

# வெற்றிக்கு வழி மன அமைதி

அருவி

நாம் வெற்றி அடைவதற்கு பல காரணங்கள் உள் ளன. அதேபோல்தோல்வி அடைவதற்கும் பல காரணங்கள் கூறலாம். அவைகளில் முக்கியமான காரணம் நமக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சல் ஆகும். இந்த மன உளைச் சல் காரணமாக இன்று பலர் தமது வெற்றியை இழந்திருப்பதை நாம் நடைமுறை வாழ்க்கையில் காணலாம். இந்த 20ஆம் நூற்றாண்டை மன உளைச்சல் ஆண்டு என்று கூறுகிறார் கள். இன்றைய மனிதர்கள் எதற்கெடுத் தாலும் கோபம், எரிச்சல், சிடுசிடுப்பு, வெறுப்பு இவைகளை அடைவதால் அவர்களுடைய சக்திகள் அனைத்தை யும் இழந்துவிடுகிறார்கள். வெண் ணெய் திரண்டு வரும் நேரத்தில் பானை உடைந்து விடுவதுபோல வெற்றிக் கனியை பறிக்கும் தறுவா யில் அதை நழுவ விட்டு விடுவதை நாம் பார்க்கின்றோம்.

இந்தப் பதற்றம் மன உளைச்சல் என்பவற்றின் உடன் விளைவான கோபம், நம்முடைய இயல்பும் அல்ல, இயற்கையான குணமும் அல்ல. நாம் ஏன் பதற்றப்படுகின்றோம் மன உளைச் சல் அடைகின்றோம் என்று தெரியுமா? இந்தப் பதற்றம் மன உளைச்சசல் என்பன கொஞ்சம் கொஞ்ச மாக நம் மையே அழித்து விடுகின்றன. பதற் றம், கவலை, பயம் போன்ற உணர் வுகள் மனதில் தோன்றினாலும் அதன் பாதிப்புகள் உடலில் தான் ஏற்படுகின்றன.

நம்முடைய மனதுக்கும், உடலுக்கு இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது என மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள், பதற்றம் பயம் என்பவை மனதில் ஏற்பட்டாலும் அதன் பாதிப்பு கள் உடனடியாக நம்முடைய உடலில் தான் தெரிகின்றன.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்வார்கள் அதைப் போல் தான் இதுவும். அடிக்கடி பதற்றம் அடைவதால் நமக்கு தலைவலி, இதயத் துடிப்பு அதிகமாகுதல், அல்சர், வயிற்றுப் போக்கு, இரத்த அழுத்தத்தில் மாறுதல்கள், நடுக்கம், வாய் உலர்ந்து போதல், நீரிழிவு நோய் போன்ற உடல் ரீதியான நோய்களும் ஏற்படுகின்றன.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடு கிறது. அவ்வாறு நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போது யாருக்கும் எந்த நோய் வேண்டுமானாலும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பதற்றம் ஏற் படும்பொழுது மனமானது தனது சமநிலையை இழந்து விடுகிறது.

இதனால் சிடுசிடுப்பு, எரிச்சல், ஒருமுகப் படுத்தும் சக்தி குறைந்து, ஞாபக மறதி போன்ற கோளாறுகள் ஏற்படுகின்றன. இது போன்ற மன நிலை ஏற்பட்டால் எப்படி ஒரு மனிதன் தனது காரியத்தை திறம்படச் செய்ய முடியும்? பொதுவாக கோபம் வரும்பொழுது என்ன செய்கி றீர்கள்? சிலர் அதை வெளியே காட்டி விடுகிறார்கள்.

சிலர் தங்களுக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்கிறார்கள். இதில் எது நல்லது? அடக்கிக் கொள்வதா? அல் லது வெளியில் காட்டிவிடுவதா? அடக் கிக் கொள்வதால் உள நோய்களும், வெளியில் காட்டிவிடுவதால், உறவின் சுவர்களில் விரிசல்களும் ஏற்பட்டு விடுகின்றன. அதற்காக கோபத்தை அடக்கிக் கொள்ளவும் கூடாது.

அதை வெளிக்காட்டுதலும் கூடாது அதை நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கோப உணர்வில் அன்பு மற்றும் இனிமை யின் குணங்களைப் பதிக்க வேண்டும். எனவே நம்முடைய பதற்றம் மன உளைச்சலுக்குக் கார ணம் மற்ற வர்கள் தான் என்பதை விடுத்து, நாமும் காரணம் தான் என் பதைப் புரிந்து கொள்ளும் போதுதான், அதற்கான சரி யான தீர்வைக் கண்டு பிடிக்க முடியும்.



உதயன்
19/08/2013




பெண்ணியம்என்பது எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகின்றது?.
ஆணுக்கு பெண் சமம். ஆணுக்கு இருக்கும் சுதந்திரம். உரிமை பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும் என்று வேண்டுமானால் சுருக்கமாகச் சொல்லலாம். பெண்ணை. ஆண் அடிமைப் படுத்துவது ஒரு பக்கம் இருக்கட்டும். பெண்ணே பெண்ணை அடிமைப்படுத்தலும் நடக்கத்தானே செய்கிறது. பெண்களே பெண்கள் முன்னேற்றத்திற்கு தடைக் கற்களாக இருப்பதை எத்தனை இடங்களில் பார்த்திருக்கிறோம்.
எங்கிருந்து பெண்ணியம் தலை தூக்க முடியும்?
பெண் என்பவள் திருமணத்துக்கு முன் தந்தை. உடன் பிறந்த சகோதரர்களைச் சார்ந்து வாழ்கிறாள். திருமணத்துக்குப் பின் கணவரைச் சார்ந்து வாழ்கிறாள். தன்னிச்சையாக இயங்கும் எல்லாப் பெண்களையும் இன்னும் இச்சமுதாயம் ஏளனமாகத்தான் பார்க்கின்றது. இது தான் உண்மை. அவள் ஆணைச் சார்ந்தே வாழும் சூழ்நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறாள். தள்ளப்படுகிறாள்.
அந்தக் காலத்தில் கணவன். மனைவி. குழந்தைகள் என்ற பிணைப்புடன் கூடிய அமைப்பு இருந்தது. பெண்ணின் தியாகத்தால், அயராத உழைப்பால் வெற்றியடைந்த ஆண்கள் அதிகம். ஆணுக்கு பின்பலமாக பெண் இருந்து வந்தாள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அது போல சில வெற்றியடைந்த பெண்கள் பின்னால் ஆண்களும் இருக்கிறார்கள்.
ஆண் உதவி இல்லாமல். தானே போராடி வெற்றி பெற்ற பெண்களைத்தான் சாதனைப் பெண்கள் என்கின்றோம். சாதனை ஆண்கள் என்று எங்காவது கேள்விப் பட்டு இருக்கிறீர்களா?
ஆணாதிக்கத்தில் இருந்து தப்பித்து தன்னிச்சையாக போராடும் குணம் கொண்ட பெண்களைத் தான் ஒரு சிலர் பெண்ணியவாதிகள் என்கிறார்கள். வாழ்வின் முக்கிய மாற்றங்களில் முடிவு எடுக்கும் பொழுது. பெண்களைப் பொதுவாக ஆண்கள் கலந்து ஆலோசிப்பதில்லை. திருமணத்தின் போது வேண்டுமானால் துணி. நகை. சமையல் பாத்திரங்கள் வாங்குவதில் மட்டும் பெண்களை கலந்தாலோசிக்கலாம். மணமகனை தேர்ந்தெடுக்கும் உரிமை எத்தனை பெண்களுக்கு அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்டது ?
இந்த நூற்றாண்டில் காலம் கொஞ்சம் மாறி பெண்களையும் கலந்து அவர்கள் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. ஆனால் காதல் திருமணம் என்ற பெயரில் சில பெண்கள் விழிப்புணர்வுயின்றி ஓடிப் போவது. தன்னிச்சையாக திருமணம் செய்து போராட்டமான வாழ்க்கையை எதிர் கொள்ள துணிவில்லாமல் தோல்வியுற்று. ஆணின் உண்மையான சுயரூபம் தெரிய வரும் பொழுது நிலைகுலைந்து போகும் பெண்களின் வாழ்க்கையை நாம் கண்டிருக்கிறோம்.
எங்கள் ஊரில் வேடிக்கையாய் இப்படி சொல்வதுண்டு. ஒரு சில பெண்களுக்கு அவளுடைய கணவன் தான் தலை மாட்டுப் பாம்பு என்று. பெண்மை காலம் காலமாய் ஏமாற்றப்பட்டு வருகிறது. அப்படிபட்ட ஏமாற்றத்தை தாங்க முடியாத பெண்கள்தான் பெண்ணியவாதிகளாக உருவாகிறார்கள். பெண்ணியத்தை பற்றிப் பெண்கள் பேசுவதை விட ஆணாதிக்க வாதிகள் அதிகம் பேசுகிறார்கள்.
ஒரு சிலர். ஆண்களுக்கு மாற்று கருத்து சொல்வது தான் பெண்ணியவாதிகளின் செயல் என்று மேலோட்டமாக புரிந்து கொள்வதுண்டு. அதுவல்ல. அதிகாரவர்க்கத்துக்கு அடங்கிப் போகாமல் எதிர்க் கேள்வி கேட்பது கூட பெண்ணியமாகக் கொள்ளலாம்.
அந்தக் காலத்தில் ஆண்கள் வெளியில் சென்று உத்தியோகம் பார்த்தல். வியாபாரம் செய்தல் என்றும். பெண்கள் வீட்டில் இருந்து குழந்தை வளர்ப்பு. வீட்டு நிர்வாகம் அனைத்தையும் செய்து வந்ததால் வெளியே செல்ல முடியாத நிலை. தற்காலத்தில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால். வீட்டில் சமையல். மற்ற வீட்டு வேலைகள். குழந்தைகளைப் பார்த்து கொள்ளும் பொறுப்பு போன்றவற்றை பெண் மட்டும் ஏற்று செய்யாமல் ஆண். பெண் இருவரும் சரி சமமாக வீட்டு வேலைகள். குழந்தை வளர்ப்பில் பங்கு கொள்வது சர்வ சாதாரணமாகிவிட்டது. பெண் வேலைக்குப் போனால் ஆண் விடுமுறையில் இருந்து குழந்தைகளைக் கவனிப்பது. சமையல் செய்வது கூட நடைமுறைக்கு வந்து விட்டது. இது பெண்ணியத்துக்குக் கிடைத்த சிறு வெற்றியாகக் கூட கொள்ளலாம். சில நாடுகளில் அரசே பெண்ணின் பேறுகால நேரத்தில் ஆண்களுக்கு விடுமுறையளித்து உதவியாக இருக்கப் பணிக்கிறது.
ஆண் குழந்தை பிறந்தால் கொண்டாட்டம். பெண் குழந்தை பிறந்தால் ஏளனம். இது இந்தக் காலத்திலும் ஒரு சில இடங்களில் தொடரத்தான் செய்கிறது. பெண்ணே பெண் குழந்தையை வெறுத்தால். அழித்தால் என்ன தான் செய்ய முடியும். பெண்ணிக்கு எதிரி பெண் தான். . இந்த நிலையில் பெண்ணியம் எப்படி தலை தூக்க முடியும்?
அந்தக்காலம் தொட்டு இந்தக்காலம் வரை பெண்ணை ஒரு போதைப் பொருளாய்த் தான் சமுதாயம் பார்க்கிறது. விளம்பரப் படங்களைப் பார்த்தாலே தெரியும். ஒரு புள்ளி விவரம். ஆறு பெண்களில் ஒரு பெண் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறாள். வீட்டில் அடைபட்டு சித்திர வதை அனுபவிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் இன்னும் குறைந்த பாடில்லை. பெண்ணுக்கு ஒரு நீதி ஆணுக்கு ஒரு நீதி. பெண்களுக்கு சமபங்கு சொத்துரிமை என்பது பண்டைய காலத்தில் இல்லை.
பண்டைக்காலத்தில். பெண் வெளியே சென்று கல்வி கற்க முடியாத நிலைமை. சிறுவயது திருமணம். ஆண்களச் சார்ந்தே வாழ்ந்ததால். முடிவு எடுக்கத் தெரியாத நிலை இருந்தது.
கடந்த ஐம்பது ஆண்டுகளாக வேண்டுமானால் பெண் கல்வியின் முக்கியத்துவம். பெண்கள் வேலைக்கு சென்று ஆணுக்கு சமமாய் சம்பாதிப்பது. ஆணுக்கு கூட மேல் அதிகாரியாய்ப் பெண்கள் செயலாற்றுவது என்று இருந்து வந்தாலும் பெண்களை அடிமை படுத்துவது. அடக்கி வைப்பது. பாலியல் கொடுமை என்பது பரவலாக நடக்கத்தான் செய்கிறது. இதை தடுக்க பல அமைப்புக்கள் இருப்பது. போராட்டங்கள் நடத்துவது ஒன்று தான் இப்போதைய விழிப்புணர்வு. என்னதான் பெண்ணியம் பற்றி பரவலாக கருத்துக்கள் தோன்றினாலும் அது தோன்றிய நேரத்திலேயே வேரோடு அழிக்க திட்டமிடப் படுகிறது.
ஒரு சில இடங்களில் பல ஆண்கள் பெண் முன்னேற்றதிற்கு துணை போவதால் தான் பெண்கள் இன்று அவர்கள் நினைக்கும் நிலையை எட்ட முடிகிறது என்பதையும் கூறத்தான் வேண்டும்.
பெண்ணியம் என்பது ஒரு தனிப்பட்ட பெண்ணின் விருப்பம்.
எல்லாப் பெண்களும் பெண்ணியக் கொள்கைகளுக்கு ஒத்துப் போவதில்லை. நேர் கொண்ட பார்வை . நிமிர்ந்த நடையில் ஒரு பெண் நடந்து சென்றாலே வித்தியாசமாய் பார்க்கும் உலகம் இது. எல்லாப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் ஆணுக்கு நிகராய் செயல் பட முயற்சி எடுக்க வேண்டும். முயற்சி செய்து வெற்றி பெறும் பெண்களை நாம் போற்றத் தான் வேண்டும்.
முடிவில் சொல்ல வேண்டுமென்றால் ஆண் ஆணாகவும். பெண் பெண்ணாகவும் இருக்க வேண்டும். ஒருவரை விட ஒருவர் பெரியவர் என்றோ. இருவரும் சமம் என்றும் கொள்ளாமல் ஒருவரை ஒருவர் அடக்கி ஆள்வது. அடிமைப்படுத்துவது என்றில்லாமல் அவரவர் இயல்புடன் இருக்கும் காலம் வரும் பொழுது இந்தப் பெண்ணியம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போய்விடும் என்பதே உண்மை.

# மனித இனச் சமன்பாடு அவசியம்

பெண்ணியம் என்ற கோட்பாட்டின் ஆணிவேராக அமைந்திருப்பவை . பல ஆழமான சமூக. பொருளாதார. வரலாற்றுக் காரணங்கள்.
அவற்றை அடிமுடி கண்டு ஆய்ந்து தெளியாமல் மேலோட்டமாக அதிகம் பேசிவிட்டதனாலேயே பெண்ணியத்தின் எல்லாப் பரிமாணங்களையும் விவாதித்து முடித்து விட்ட உணர்வும்.இனிமேல் அது பற்றி விவாதிக்க எதுவுமில்லை என்ற மன நிலையும் மெத்தப்படித்த மனிதர்களையும் கூட இன்று பீடித்திருக்கிறது. பெண்ணின் புறத் தோற்றம்.புற உலக நடவடிக்கைகள் ஆகியவற்றில் இன்று சில மாற்றங்கள் நேர்ந்திருப்பது உண்மைதான். பெண்ணின் வாழ்க்கைத் தரம் - கல்வி. வேலை வாய்ப்பு ஆகிய பலதுறைகளிலும் சென்ற நூற்றாண்டுகளை விடவும் இன்று பலமடங்கு மேம்பட்டே இருக்கிறது.பெண் குறித்த சமூகக் கண்ணோட்டங்களிலும் சில வரவேற்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.


ச.சாரங்கி

ஆனாலும் ஆணுக்கு நிகரான கல்வி,பொருளாதாரத் தற்சார்பு ஆகியவற்றைப் பெற்ற பின்னும் கூட பெண்ணை இரண்டாம் நிலையில் மட்டுமே வைத்துப் பார்க்கும் போக்கு ,மரபுகள் ஆழமாக வேரூன்றிப் போன சமூக அமைப்பில் இன்றும் கூடக் கடுமையாக நிலவி வருகிறது. ஒரு பெண் வெறும் தாயாகவும். மனைவியாகவும் இருந்தால் மட்டும் போதாது ; வேறு வகையிலும் அவள் தன்னை நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது எளிது.
ஆனால் தொன்றுதொட்டு வரும் சமூக மரபுகளும். உடற்கூறுகளும் மாற்றம் காணாத நிலையில் அவள் தன்னை எந்த வகையில் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வரையறுத்தலும். அதை நிறைவேற்றலும் அரிது என்கிறார் கார்ல் பியர்'சன் என்னும் சமூக இயலாளர் பெண்ணாக இருப்பதனாலேயே உணரும் மனத் தடைகள். இறுக்கங்கள் , மரபுவழிக் கட மைகள் ,அவளைத் தளைப்படுத்தும் சமூகக் கட்டுக்கள் - இவற்றையெல்லாம் குறித்துப் பொறுப்புணர்வோடு சிந்தித்துப் பெண்ணின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதே பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.தனிப்பட்ட ஓர் ஆணை எதிர்ப்பதோ [illegible]ணினத்தின் மீதே வெறுப்புக் கொண்டு கசப்பை [illegible]ழ்வதோ பெண்ணியததின் நோக்கம் [illegible]லை.

### கடந்த 12 ஆம் திகதி தொடக்கம்

## கிளிநொச்சி நகரிலிருந்து முழங்காவிலுக்கு பஸ் சேவை



அக்கராயன், ஒக.19
கிளிநொச்சி நகரிலிருந்து முழங்காவில் வரையான அரச பஸ் சேவை கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றது.
கிளிநொச்சி நகரின் மேற்குப் பகுதியில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் முழங்காவில் கிராமம் அமைந்துள்ளது. இங்கு மக்கள் மீள்குடியமர்ந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னர் அரச பஸ் சேவை தற்போது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
போர் ஓய்ந்த பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் முதலாவது மீள்குடியமர்வு முழங்காவில் கிராமத்திலே இடம்பெற்றது.
வாழை, புகையிலை, மிளகாய், கத்தரி, பீற்றூட், வெற்றிலை ஆகிய பயிர்ச் செய்கைகள் முழங்காவில் கிராமத்தில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.
மக்களின் நீண்டகால கோரிக்கையை அடுத்து அரச பஸ் சேவை அக்கராயன் ஜெயபுரம், பல்லவராயன்கட்டு ஊடாக முழங்காவில் வரை இடம்பெற்று வருகின்றது. (க-18)

# அபிவிருத்தியைக் காணாத முரசுமோட்டைக் கிராமம்

கண்டாவளை, ஒக.19
கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டைக் கிராமம் எந்தவித மான அபிவிருத்தியும் இடம்பெறாமல் பின்தங்கிய நிலையிலுள்ளதாக இங்கு வசிக்கும் மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.
கண்டாவளைப் பிரதேசத்தில் 16 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. முரசுமோட்டைக் கிராமத்தில் 285 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. போரினால் பாதிக்கப்பட்டு சீரழிந்த நிலையிலுள்ள இந்தக் கிராமத்தில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் எதுவும் இடம்பெறாத நிலையே காணப்படுகின்றது.
இந்தக் கிராமத்தில் சுமார் 15 வீதிகள் உள்ள போதிலும் ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள ஒரே ஒரு வீதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய வீதிகள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் காட்சியளிக்கின்றன. மின்சார விநியோகமும் இங்கு இடம்பெறவில்லை. இதனால் இருளில் மூழ்கியிருக்கும் இந்தக் கிராம மக்கள் மின்சாரம் கிடைக்கும் நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பதைக் காண முடிகின்றது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்ந்த கிராமங்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்த போதிலும் இவ் விடயத்தில் தமது கிராமம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.
இங்குள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் இயங்காமலிருப்பதால் 12 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் மக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

## புதிய சைக்கிளை வாங்குவது போன்று பாசாங்கு செய்து திருடிச் சென்ற நபர்

### சற்று நேரத்தில் மடக்கிப் பிடிப்பு

கிளிநொச்சி, ஒக.19
சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து விற்பனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிச் சென்றவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நகரத்திலுள்ள சைக்கிள் விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-
குறித்த வர்த்தக நிலையத்துக்குச் சென்ற திருட்டு ஆசாமி ஒருவர் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை வாங்குவது போல் அதன் விலையை விசாரித்துள்ளார். பின்னர் வர்த்தக நிலையத்தில் உள்ளோர் தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு புதிய சைக்கிள் ஒன்றைத் திருடிச் சென்றுள்ளார்.
நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள்களில் ஒன்றைக் காணாத வர்த்தக நிலையத்தினர், உசார் அடைந்து தேடுதல் நடத்தியபோது, வியாபார நிலையத்திலிருந்து 750 மீற்றர் தூரத்தில் வைத்து அந்த நபரை மடக்கிப் பிடித்ததுடன் சைக்கிளை பறிமுதல் செய்த பின்னர் அவனை கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஓ-426.400)



பூநகரியிலுள்ள வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்குச் செல்வதற்கென பல்லவராயன்கட்டுச் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மக்கள். (க-18)

## துணுக்காய் மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை

துணுக்காய், ஒக.19
துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் ஐந்தில் கல்வி கற்கும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி ஹற்றன் நஷனல் வங்கி மல்லாவி வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் ஒரு நாள் பயிற்சிப்பட்டறை மல்லாவி அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயத்தில் வங்கி முகாமையாளர் எஸ்.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.
இந்தப் பயிற்சிப்பட்டறையில் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 18 பாடசாலைகளைச் சேர்ந்த 168 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
இதில் பிரதம விருந்தினராக இலங்கை ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.இந்திரவாசன், துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.
பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு புகழ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட வினாக்கள் அடங்கிய அச்சிட்ட குறிப்புக்களும் வழங்கப்பட்டன. (க-86-415)

## பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்

கிளிநொச்சி, ஒக. 19
கிளிநொச்சி தருமபுரம் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 71 குடும்பங்கள் பெண்களைத் தலைமை தாங்கும் குடும்பங்களாகக் காணப்படுகின்றன.
மேற்படி கிராமத்தில் சுமார் 501 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இவற்றுள் 71 குடும்பங்கள் பெண்களைத் தலைமை தாங்கும் குடும்பங்களாகக் காணப்படுகின்றன.
இந்தப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.
சில நிறுவனங்கள் இந்தக் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் அவை தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லையெனவும் இந்தக் குடும்பங்கள் தெரிவித்தன. (க-6)

### முல்லை–புதுமாத்தளன் கடலில் சம்பவம்

## ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன

முல்லைத்தீவு, ஒக.19
முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவர் தொழிலின் நிமித்தம் தனது ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 8 வலைகளைக் கடலில் போட்டிருந்தார். அவை அறுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.
குறித்த கடற்றொழிலாளி இறுதிப் போரின்போது தமது உறவுகளையும், உடைமைகளையும் இழந்த நிலையில், கடந்த ஆண்டு இங்கு குடியமர்ந்துள்ளார். அவர் கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுத் தொழிலைச் செய்துவரும் நிலையில் பெறுமதிக்க வலைகள் குறித்த விசமிகளால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.
இது தொடர்பாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றில் முறைப்பாடு தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது. (க-6)





**" வலைகளை இழந்தவர் தமது உறவு களையும், உடைமைகளை யும் இழந்த நிலை யில், கடந்த ஆண்டு இங்கு குடியமர்ந் துள்ளார்.**

## வாய்க்காலினால் விவசாயிகளுக்கு நன்மைகள்

அக்கராயன், ஒக.19
பூநகரி நெற்புலவு கிராமத்தில் உள்ள குஞ்சுசுட்டிக்குளத்தின் ஆரம்பத்தில் இருந்து பூநகரிக் கடலை நீர் சென்றடையக் கூடிய வகையில் வாய்க்கால் உருவாக்கப்பட்டுள்ளதால் பூநகரி விவசாயிகள் நன்மைகளைப் பெறவுள்ளனர்.
இந்த வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளதால் வயல்களில் தேங்கி நிற்கும் நீர் இதனூடாகக் கடலைச் சென்றடையக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. சுமார் 5 கிலோமீற்றர் நீளத்துக்கு இந்த வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## விதை நெல்லைப் பெறுவதில் விவசாயிகளுக்கு சிரமங்கள்

அக்கராயன், ஒக.19
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தாம் விதை நெல்லைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.
சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தவிர்ந்த ஏனைய விவசாயிகள் விதை நெல்லைப் பெறுவதில் தற்போது சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரியவருகின்றது.
இதேவேளை பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அநேகமான விவசாயிகள் இவ்வாறு நெல்லைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.
பூநகரி விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் மட்டுமே அதிகளவில் ஈடுபட்டு வருகின்றமை வழக்கமாகும். இவர்கள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வம் காட்டுவதில்லை. இவர்களின் காலபோக நெற்செய்கை அழிவடைந்ததால் விதை நெல்லைப் பெறுவதில் ஏனைய பிரதேசங்களிலுள்ள விவசாயிகளைவிட இவர்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
பூநகரி கமநல சேவை நிலையத்தில் இந்த விவசாயிகள் விதை நெல்லைப் பெறுவதற்கு பதிவுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## சனசமூக நிலையத்துக்கு புதிய நிர்வாகிகள்

துணுக்காய், ஒக.19
போருக்குப் பின்னர் இயங்காத நிலையிலுள்ள ஒட்டறுத்தகுளம் சனசமூக நிலையத்தை மீளவும் இயங்கச் செய்யும் பொருட்டு புதிய நிர்வாக சபையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ளது ஒட்டறுத்தகுளம் கிராமம். இங்கு போருக்கு முந்திய காலப் பகுதியில் ஸ்ரீ ஏரம்ப விநாயகர் சனசமூக நிலையம் தற்காலிகமானதொரு இடத்தில் இயங்கி வந்ததாகவும், போருக்குப் பின்னர் இயங்கவில்லையெனவும் தற்போது இதனை மீளவும் இயங்கச் செய்யும் பொருட்டு புதிய நிர்வாக சபையொன்று கடந்த 16 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளதாவும் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள செல்வி ந.தமயந்தி தெரிவித்துள்ளார்.
மேலும் புதிய நிர்வாக சபையில் தலைவராக செ.பத்மநாதனும், செயலாளராக செல்வி ந.தமயந்தியும், பொருளாளராக செல்வி க.தனுஷாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
மேலும் உபதலைவர், உபசெயலாளர் மற்றும் ஆறு போர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தெரிவுகள் ஒட்டறுத்த குளம், கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-415)

## ஒழுங்கில்லாத பூசை வழிபாடு

அக்கராயன், ஒக. 19
அக்கராயன்குளம் பிள்ளையார் ஆலயம் பூசை வழிபாடுகள் ஒழுங்காக இடம்பெறாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக இந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
முன்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த ஆலயத்தின் பூசை வழிபாடுகள் ஒழுங்காக இடம்பெற்று வந்தன. ஆனால் கடந்த ஒரு வருடமாக பூசை, வழிபாடுகள் ஒழுங்காக இடம்பெறுவதில்லையெனக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-18)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**இடபம்**: எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து நீங்கும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட முக்கியம்பெற வாய்ப்பிருக்கிறது. உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மிதுனம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்**: உடன்பிறந்தவர் களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**: முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

ஆவணி-04 செவ்வாய்க்கிழமை 20.08.2013
திதி: சதுர்த்தசி மு.ப.10.22 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப.02.32 வரை
சுபநேரம்: 10.35 - 12.05 வரை
இராகுகாலம்: 03.05 - 04.35 வரை

**துலாம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவிர்கள்.

**விருச்சிகம்**: மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**தனுசு**: பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். மற்றவர்களுக்காக நியாயம் பேசப்போய் நீங்கள் சிக்கிக்கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை ஏற்படும்.

**மகரம்**: குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துப் போகும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கும்பம்**: பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

**மீனம்**: நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 6 | | 9 | | | |
| | 7 | | 4 | | 1 | | 9 | |
| | 9 | 6 | | 5 | | | | 1 |
| 6 | | | 5 | 9 | | 4 | | 8 |
| 8 | | 9 | | | | 3 | | 7 |
| 5 | | 3 | | 1 | 7 | | | 9 |
| 9 | | | | 8 | | 1 | 4 | |
| | 3 | | 1 | | 6 | | 8 | |
| | | | 9 | | 5 | 7 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 9 | 1 | 8 | 6 | 4 | 2 | 7 |
| 4 | 7 | 6 | 2 | 9 | 5 | 1 | 8 | 3 |
| 2 | 1 | 8 | 3 | 4 | 7 | 9 | 5 | 6 |
| 5 | 2 | 3 | 4 | 7 | 1 | 6 | 9 | 8 |
| 9 | 8 | 1 | 6 | 2 | 3 | 7 | 4 | 5 |
| 7 | 6 | 4 | 8 | 5 | 9 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 7 | 5 | 3 | 2 | 8 | 6 | 9 |
| 8 | 3 | 5 | 9 | 6 | 4 | 2 | 7 | 1 |
| 6 | 9 | 2 | 7 | 1 | 8 | 5 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

எந்தப் பாதைக்கும் ஏற்ற வாகனம்

பஜாஜ்

முச்சக்கர வண்டி



கார்ப்பெட் வீதியா, தார் வீதியா, கிறவல் வீதியா, களிமண் வீதியா, குச்சொழுங்கையா நீங்கள் பயணம் செய்யும் பாதைகள் எதுவாகவும் இருக்கட்டும். அனைத்துக்கும் ஈடுகொடுக்கும் பஜாஜ் முச்சக்கர வண்டி

அதுமட்டுமன்றி...

- கைக்கடக்கமான விலை
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- போதியளவு அசல் உதிரிப்பாகங்கள்
- நாடெங்கும் சேவை நிலையங்கள்
- சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை



udianka

விலை: ரு.470,960/-

நிதி, காப்புறுதி சேவையுடன் மற்றைய வசதிகள் மற்றும் ஆலோசனைகளுடன் விற்பனைக்கு பின்னரான சேவைகளுக்கு எங்களை நாடவும்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

(c/11329)(3)

பஜாஜ் முச்சக்கர வண்டி
வாழ்வை வளமாக்கும்
வகையான
குடும்ப வாகனம்.

# டிராக்டர் புரண்டு இளைஞர் காயம்



மேசன் வேலைக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த டிராக்டர் வீதியின் வளைவில் திரும்பிய வேளை தடம் புரண்டத னால் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரி மைதானத் துக்கு அருகில் இடம்பெற்றது.

டிராக்டர் பெட்டியில் பொருள்களை ஏற்றியவாறு இளைஞர் ஒருவர் பெட்டியின் மீதமர்ந்து வந்து கொண்டிருந்தார். இவ்வேளை இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் சாரதி டிராக்டரை மிக வேகமாக திருப்பிய போதே இவ்விபத்து நேர்ந்தது. பெட்டியில் அமர்ந்து வந்த இளைஞர் பொருள்களுக்கிடையே அகப்பட்டு தலை மதிலோடு உராய்ந்த நிலையிலேயே மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ஓ-288)

**தர்மசாஸ்தா குருகுலம்**

20.08.2013 செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு உபாகர்மம் நடைபெறும்

சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் (31475) (7.3)

**வீடு வாடகைக்குண்டு**

மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 360 5502 (31481)(11.3)

## கூறு விலைகோரல்

TSEP செயற்றிட்டத்தின் கீழ் யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் தேவைக்காகப் பின்வரும் பொருள்களை வழங்க முன்வருவோரிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1. Desktop Computer
2. Duplo Machine
3. Digital Camera
4. Office Table, Office Chair, Filling Cabinet, Steel Cabinet, Exequite Table, Exequite Chair

மேற்படி பொருள்களை வழங்க முன்வருவோர் தமது கேள்விப் பத்திரங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் **21.08.2013 முற்பகல் 10 மணியில் இருந்து 04.09.2013 முற்பகல் 10 மணிவரை** பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைகள் **05.09.2013 பிற்பகல் 2 மணிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலக நிதிக்கிளையில் சமர்ப்பிக்கவேண்டும். கூறுவிலைகள் 05.09.2013 பிற்பகல் 2 மணிக்குத்** திறக்கப்படும். மேலதிக விவரங்களை வலயக்கல்வி அலுவலக நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. உதயகுமார்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
(சி/11418) (45.3) **வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## பதவி வெற்றிடம்



**01. போட்டோ சொப் டிசைனர்**
(Photo Shop Disigner)
**(அல்பம் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)**
**(ஆண் பெண் இருபாலாரும்)**

**02. வரவேற்பாளர் (Receptionist)**
**(ஆண் பெண் இருபாலாரும்)**

**மேற்குறிப்பிட்ட துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**



***. தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

***. உரிய ஆவணங்களுடன் 20.08.2013 அன்று 9 AM - 12 PM நேரில் வரவும்.**

(C/11413)(10.16.14)

**சிறிநதியா டிஜிட்டல் கலர்லாப்**
108 A, லக்ஸன் பிளாசா கட்டடம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 8412

# ராணுவத்திடமிருந்து காணியை விடுவித்ததும் ஸ்கந்தபுரத்தில் உடனடியாக கரும்பு ஆலை

## அமைப்போம் என்கிறார் அமைச்சர் லக்ஸ்மன்



அக்கராயன்,ஓக.19

ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்தின ரிடமிருந்து விடுவித்து கரும்பு ஆலையை உருவாக்குவோம். இவ்வாறு சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ மன் செனவிரட்ண தெரிவித் தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் கரும்பு உற் பத்தியாளர்கள் மத்தியில் உரை யாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை யாற்றுகையில்:-

நாம் சீனியை பெருமளவில் இறக்குமதி செய்யும் நிலையில் உள்ளோம்.

சீனிக்காக அமைச்சு ஒன்று உருவாக்கப் பட்டபோது பகிடி யாக என்னை சீனி அமைச்சர் என்று கூறி னார்கள்.

முல்லைத்தீவு, வவுனியா, கிளி நொச்சி ஆகிய மாவட்டங் களில் சீனித் தொழிற்சாலை களை அமைப்பதற்கென நான் காணிகளைக் கோரியுள் ளேன். உற்பத்தியாளர்க ளுக்கு இந் தக் காணிகள் வழங்கப்பட்டு தொழிற்சாலைகளை அமைப் பதே எமதுநோக்கமாகும். பிரதேச செயலர்கள் மூலமாக காணிகள் கிடைக்கும் பட்சத் தில் விரைவில் தொழிற்சாலை களை அமைக்க முடியும்- இதற்கென பலகோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கரும்புச் செய்கை நல்ல இலா பம் தரக்கூடியது.

அக்கராயன்பிரதேசம் கரும்பு உற்பத்திக்குச் சிறந்த பகுதி யாகும். ஒரு தடவை கரும் பைப் பயிரிட்டால் ஆறு ஆண்டுகளுக்குப் பயன்பெற முடியும். ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியை ராணு வத்தினருடன் கலந்துரையா டிப் பெற்ற பின்னர் விரைவில் இங்கு கரும்பு ஆலை உரு வாக்கப்படுமெனத் தெரிவித் தார். (க-18)

> முல்லைத்தீவு, வவுனியா, கிளி நொச்சி ஆகிய மாவட்டங்களில் சீனித் தொழிற் சாலைகளை அமைப்ப தற்கென நான் காணிகளைக் கோரியுள்ளேன்.

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி 'கன்ரீன்' மூடப்பட்டுள்ளதால் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்.ஓக.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் உள்ள சிற்றுண்டி நிலையம் (கன்ரீன்) தொடர்ந்து மூடப்பட்டிருப்ப தால் நோயாளர்கள் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

விடுதியில் உள்ள நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வெளியே செல்ல பாதுகாப்பு ஊழியர்கள் அனுமதிக்காததால் சுடுநீர் எடுப்பதற்குக் கூட வெளியாரின் உதவிகோரி காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வைத் தியசாலை விடுதிகளில் சிறு குழந்தைகளை வைத்திருப் போரும், நடக்க முடி யாத நிலையில் உள்ளவர்களும் சுடுநீர் மற்றும் உணவு வகைகள் வாங்கு வதற்குப் பெரும் சிரமங் களை எதிர்நோக்கு கின்றனர்.



அத்துடன் வைத் திய சாலையில் பணிபுரிவோரும் வெளி நோயாளர் பிரிவுக்கு வருவோ ரும் வெளியில் சென்று உண வருந்தும் நிலையும் காணப் படுகின்றது.

இது தொடர்பாக கட மையிலிருந்த பாதுகாப்பு ஊழிய ரிடம் கேட்ட போது:

வைத்தியசாலை வளா கத்தை விட்டு நோயா ளர் களை வெளியே விடக்கூடாது என்ற கட்டுப்பாடு எமக்கு உள்ள தால் நோயா ளர்களை வெளியே விடுவதில்லை யென வும், வைத் தியசா லைக்கு முன்பாக ஏ-9 வீதி உள்ளதால் நோயா ளர்களை வெளியே செல்ல அனுமதிப்ப தில்லையெனவும் தெரிவித்தனர்.

இந்த சிற்றுண்டி நிலை யம் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தினால் நடத் தப்ப டுவது குறிப்பிடத் தக் கது. (ஓ-9)

# புகைப்படப் பிடிப்பு பதிவு செய்யாதோர் கவனத்துக்கு

கிளிநொச்சி, ஓக.19

முல்லைத்தீவு மாவட்ட புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கிராம அலுவலர் அலு வலகங்களில் கடந்தவாரம் நடத் தப்பட்ட மாற்றுவலுவுள் ளோருக் கான சமூக நலனோம்பு அடை யாள அட்டைகளின் பதி வின் போது புகைப்படப் பிடிப்பு பதிவு களை மேற்கொள்ள முடியாத வர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிர தேச செயலகத்துக்கு வருகை தரு மாறு பிரதேச செயலர் இ.பிர தாபன் அறிவித்துள்ளார்.

அவ்வாறு வரும்போது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தரு மாறும் அறிவித்துள்ளார்.(வ-9)

**வேலைவாய்ப்பு + உடை வடிவமைப்பு மகளிருக்கான கற்கைநெறி இலவசம்**

ஆடைதொழிற்சாலைக்கு தையல் தெரிந்த பெண்கள், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட, மாற்றுத்திறனாளிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நேரடியாகவும், புதன் காலை 8-10 மணி வரை அலுவலகத்திற்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக தகைமைகள் (வணிகக் கல்வியைக் கற்றோர்,கணினி அறிவுடையோர்)

தொடர்புகளுக்கு, **Evergreen Manufactory**

Pho: 773223084,217200217.Pakavan Path, Kopay South,Kopay,Jaffna,Sri lanka.

Email: evergreenmanufactor@gmail.com, Web : www.evergreenmanufactory.com

## இறுதிக் கருத்தரங்கு இன்று

- வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தால் நாடுமுழுவதும் நடத்தப்பட்ட கருத் தரங்குத் தொடரின் இறுதிக் கருத்தரங்கு இன்று நடை பெற வுள்ளது.
- வெற்றித்தேர்வின் சாதனை வளவாளர்களுடன் பிரபல ஆசிரியர் களும் கலந்துகொள்வர்.

இடம் : நல்லூர் சயன்ஸ் அக்கடமி (நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக)

காலம் : இன்று 19.08.2013 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை

**இதுவரை நடைபெற்ற வெற்றித்தேர்வு கருத்தரங்குகளில் கலந்துகொள்ளத் தவறிய மாணவர்களுக்காக**

வெற்றித்தேர்வின் விஷேட கையேட்டிற்கு மட்டும் ரூபா 100.00 செலுத்துக.

பங்குபற்றிப் பயனடையுங்கள்

தொடர்பு: 077 538 8471, 077 841 7079

(சி/11416) (45.3)

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் டிப்போவிற்கும் பெற்றோல் செற்றுக்கும் இடையில் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத் தக்கது)


தொடர்பு: 077 614 6253 (31415) (7.3)

**மணமகள் தேவை**

யாழ். றோமன் கத்தோலிக்க குடும்பத் தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தில் இருக்கும் 37 வயதுடைய மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை,

தொடர்பு: 077 203 2880 (31431) (7.3)

# கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய



# தேர் சிறப்பு மலர் - 19.08.2013

## ஆலய வரலாறு

மஞ்சவனப் பதியில் வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன்-செஞ்சொல்
குணபதியே ஞானக் குருபரனே! செல்லக்
கணபதியே காப்பாய் கனிந்து

முருகவழிபாடு ஈழத்தில் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியமுடைய தொன்றாகும். கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் யாழ். நகருக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது.மடாலயமாக விளங்கிய இந்த விநாயகர் ஆலயம் ஓலையால் வேயப்பட்ட தாகவும், தரையானது சாணத்தினால் மெழுகப்பட்டதாகவும் இருந்த இவ்வாலயம் 1817ஆம் ஆண்டு ஆகம விதிப்படி கற்கோயிலாகக் கட்டப்பட்டது. வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானது கருங்கல் சிவமூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் கோயில் திருப்பணி வேலைகளை இருபத்து நான்கு பேர் சேர்ந்து திருப்பணிச் சபையொன்றை அமைத்து நிதி சேகரித்து திருப்பணி வேலைகளை நிறைவேற்றி முத்துக்குமார சுவாமி அலங்கார மூர்த்தியாக ஐம்பொன்னால் வார்க்கப்பட்டு அலங்கார உற்சவம் நிகழ்த்தப்பட்டது. 1890 ஆம் ஆண்டு இவ்வாலயம் திருத்தியும், புதுக்கியும் திருப்பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. 1915ஆம் ஆண்டு ஆலயத்தில் கொடிஸ்தம்பம் அமைக்கப்பட்டது. துவாரோகணமாகி மகோற்சவம் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டது. கோபாலி கந்தையா அவர்கள் ஆறுதிருமுகங்களுடன் கூடிய சண்முகப் பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தை அமைத்துக் கொடுத்தார்.

1938ஆம் ஆண்டு வரை கட்டுத்தேரிலேயே சண்முகப் பெருமான் வலம் வந்தார். 1939ஆம் ஆண்டு பெரியார் அமரர் ச.வே. சண்முகம்பிள்ளை அவர்கள் ஈழவள நாட்டில் எங்குமில்லாத வகையில் இந்தியாவில் இருந்து அழைத்து வந்த ஸ்தபதிகள் மூலம் கலையம்சம் பொருந்திய அழகிய சித்திரத் தேரை அமைத்துக் கொடுத்தார்.

1975ஆம் ஆண்டு தம்பிமுத்து குடும்ப உபயமாக விநாயகப் பெருமானுக்கு தம்பிமுத்து நீதிராசா அவர்கள் ஒரு சித்திரத் தேரையும் 2004ஆம் ஆண்டு சண்டேஸ்வரப் பெருமானுக்கு ஒரு சித்திரத் தேரை சபாரட்ணம் சண்முகரட்ணம் அவர்களும் அமைத்து வழங்கியுள்ளனர். தேர்த்திருவிழாவன்று மூன்று தேர்களிலும் சுவாமி வலம் வரும் காட்சி பேருவகை தரும் காட்சியாகும்.

இவ்வாலயத்துக்கு வடக்குப் புறமாக காசிப்பிள்ளை பொன்னம்பலம் குடும்பத்தினால் வழங்கப்பட்ட காணியில் வல்லிபுரம் நவரத்தினம் குடும்பத்தினர் ஒரு தீர்த்த வாரியை அமைத்துக் கொடுத்துள்ளனர். தூலலிங்கமாகிய கோபுரத்தை தரிசித்தே சூக்கும லிங்கமாகிய இறைவனை தரிசிக்க வேண்டும் என்பதற்கிணங்க அமரர்.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இராச கோபுரம் அடியவர்களின் பெரும் பங்களிப்புடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மூர்த்தி, தலம், தீர்த்தம் அமைந்த சிறப்பைக் கொண்டதாக இவ்வாலயம் அமைந்துள்ளது.

பெரும் திருவிழாக்களின் எண்ணிக்கை சமய அறிஞர்கள் அந்தணப் பெருமக்களது ஆலோசனைக்கிணங்க பதினெட்டாக அதிகரிக்கப்பட்டது. வழமைபோல் ஆவணி மாத பூரணை தினத்தை தீர்த்த உபயதினமாக நிர்ணயித்தே பெரும் திருவிழாக்கள் நடைபெறும்.

இவ்வாலயம் திருமுக கிருபானந்தவாரியார் அவர்கள் ஈழவள நாட்டிலே அதிக நாள்கள் பேருரை வழங்கிய ஆலயமமாகும். வாரியார் சுவாமிகள் தனது சுயசரிதையில் இதைக் குறிப்பிட்டுள்ளதே இவ்வாலயத்திற்குள்ள தனிச் சிறப்பாகும். இவ்வாலயத்தில் கந்தசஷ்டி உற்சவ காலம் மிகவும் பக்திமயமாக அடியவர்களால் அனுசரிக்கப்படுவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் பூங்காவனத் திருவிழாவன்று அழகிய நந்தவனத்தில் வள்ளி அம்மன் கொலுவிருக்கும் காட்சியும் வள்ளி திருமணக்காட்சியும் அப்போது நடைபெறுகின்ற ஊடல் காட்சியும் சிறப்பானதாகும். அத்தோடு சூரசம்கார தினத்தன்று சூரன் போர் சூரபத்மன் வாகனத்தில் வலம் வந்து பெருமானுடன் போர் புரியும் காட்சியும் தத்ரூபமான காட்சியாகும். பெரும் திருவிழாக்காலங்களில் ஆலயம் வடக்குப்புற வீதியில் அமைந்துள்ள சின்னம்மா மடத்திலும் தெற்கு வீதியில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்திலும் மகேஸ்வர பூசை சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்பானதாகும். இவ்வாலயத்தில் சிவஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள், விக்கினேஸ்வரக்குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து சீரிய முறையில் பணியாற்றி வருகிறார். - இ.இராசலிங்கம், ***செயலாளர் தர்மகர்த்தா சபை.***

## தேர்த்திருவிழா

இன்று (19.08.2013) திங்கட்கிழமை

| | |
|---|---|
| அபிஷேகம் | - காலை 5.30 மணி |
| வசந்தமண்டப பூசை | - காலை 7.00 மணி |
| சுவாமி தேரில் எழுந்தருளல் | - காலை 9.00 மணி |

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் பொலியும் புண்ணிய பூமியாம் இலங்கை மணித் திருநாட்டில் மகுடம் எனத் திகழும் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் பகுதியின் மஞ்சவனப்பதி என்னும் திவ்விய நாமத்துடன்விளங்கும் முருகப்பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் இன்று ஆகும். மாறாப்பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியவர்களின் வருத்தம் எல்லாம் நீறாகப் போக நின்னருள் புரியும் மஞ்சவனப்பதி முருகனுக்கு உருகி உருகி உழைக்கும் உண்மை அடியார்களின் துன்பம் எல்லாம் உருகிப் போக கருணைக் கந்தன் இன்று அழகிய சித்திரத் தேரிலே வலம் வருகின்றான். எமது இந்துப் பண்பாட்டின் உறைவிடம் ஆலயம். சமுதாய வாழ்வில் ஆலயம் இன்றியமையாத ஒன்றாகும். ஆலயங்கள் வழிபடுவோரையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாக அமைந்ததோடு அவை இந்துக்களது வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் உள்ளன. அடியவர்களும் தம்மால் இயன்ற பணிகளையும் வளங்களையும் ஆலய சேவைக்கு வழங்கியுள்ளனர்.

அழகிய பழமைவாய்ந்த சிற்ப வேலைகளுடன் கூடிய சித்திரத் தேரில் ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேசநலன் காக்க மஞ்சவனப்பதியான் இன்று தேரேறி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக மனிதவாழ்வில் புண்ணியமே செய்யத்தக்கது. பாவம் விலக்கத் தக்கது. அந்த வகையில் இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் அடியார் எல்லோரையும் முருகப் பெருமான் சிறப்போடு வாழவைக்க வேண்டுமென்று மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

'ஈசான சிவாச்சாரியார் சிவாகம ஞான சாகரம்' சிவப்பிரம்ம ஸ்ரீ
சொ.இ.விக்கினேஸ்வர குருக்கள் மஹோற்சவ குருவும் ஆலய பிரதம குருவும்.

## ஆசிச் செய்தி



தொல்வினை தீர்த்தருளும் எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப் பெருமான் கொக்குவில் பதியில் வீற்றிருக்கின்ற அவர் தன்னை நாடி வந்து வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கி அருளாட்சி செய்து கொண்டிருக்கின்றார். அந்த அலங்காரக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா. இறைவனின் ஐந்தொழிலில் உன்னதமானது அழித்தல் தொழில். அதனை வெளிப்படுத்தும் இந்நாளில் சிவனின் திரண்ட சக்தி வடிவமான ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக சித்திரத் தேரிலே பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியே. அருள் வள்ளலான ஆறுமுகப் பெருமான் தன்னைநாடி நிற்கும் அடியவர்களுக்கு துயரங்களைப் போக்கி நல்வாழ்வு அருள்வாய் குருபரனே என்று பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

'இருப்பரங் குன்றத்திடுமெ ஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்'

வே.கருணாகரன்,
உபதலைவர், ஆலய தர்மகர்த்தா சபை

## விளம்பர அனுசரணையாளர்கள்

Sunjeys Multi Marketing Center Sunjeya Foodland and Guest House
Sunjeys Tourisum
Sunjeys Tours
1 km ரூபா 65/= வான் சேவையும் உண்டு.
713, Hospital Road, Jaffna.
0777 474111

செந்தூரன் எலெக்ரிக்கல்
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972,
Fax.No: 222 8869

சாரங்கன் நகையகம்
இல.1, புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
செல்வி நகை அகம்
நம்பிக்கையான நாணயமுள்ள நகைவர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212229441

றோல்ஸ், வடை, பூந்திலட்டு, சர்பத், ஐஸ்கிறீம், பீடா
என்பன ஓடர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்
பரணி கிறீம் கவுஸ்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே.0779186284

துர்க்கா றேட்ஸ்
Turkka Trades
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில். T.P.021 222 5008

வளர்மதி ரெக்ஸ்
கோயில் தேவைகளுக்கான சகல விதமான பொருள்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம். 176, 258,
கே.கே.எஸ். வீதி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அலுமினியம் பிற்றறிங்கில் அனுப வமுள்ளவர்கள். சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
சிறி அபிநயா அலுமியம் பிற்றிங்
கொக்குவில் சந்தி.
தொ.பே.: 021 320 1110,
0777119475

உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள் இன்ரநெற் வசதி
போட்டோக் கொப்பி போன்றவற்றைப் பெற்றிட
கணேசன் கொமினிகேசன்
கொக்குவில் சந்தி.
தொ.பே.021 222 2585

ஸ்ரீ குகன் பான்சி
SRIE KUKAN FANCY

P. Arooran
Manger
Operation & Logistic
Mobile: +94 777448133
TOSHIBA
North Link Engineering (Pvt) Ltd.
#360/3 Main Street, Jaffna, Sri Lanka
T: +94 21 222 4099, +94 24 492 5008
F: +94 21 222 1838
www.nle2u.com
E: aroorannie@yahoo.com
Authorised Dealers & service providers of Northern Province
John Keells Office Automation [Pvt] Ltd.

அழகிற்கு அழகு சேர்க்கும் 22 கரட் தங்க வைர நகைகள்
உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள
சிறி நதியா நகை மாளிகை
Shree Nathiya
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222700

# மரண அறிவித்தல்

## இராமநாதன் வீரவாகு ( நயினாதீவு)



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் வீரவாகு 17.08.2013 யாழில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னையா -செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், தேவிகா, தேவதாஸ், மோகன தாஸ் (வலயக்கல்வி அலுவலகம், வேலணை), காலஞ்சென்ற ரேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரராசன், சிவானந்தி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 9, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 373 5959

தகவல்:
வீ. மோகனதாஸ்
(மகன்)

(31476)(7.3)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24
.
09
.
1954

மறைவு
19
.
08
.
2011



அமரர் கணபதிப்பிள்ளை
மலரகீதன்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

(31266) (7.3)

# ஈராண்டில் ஈரவிழிகளுடன்



தோற்றம்
24
★
04
★
1937

மறைவு
11
★
09
★
2011

## அமரர் இராசதுரை பொன்மணி

திதி: 19.08.2013

ஈராண்டு ஆனால் என்ன–எம்
ஈர விழி காயவில்லை –அம்மா
விண்ணுலகு சென்ற செய்தி இன்னும் – எம்
மனவுலகு ஏற்குதில்லை அம்மா

வட்டுவினி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(31443)(6.11)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
*
10
*
1954

மறைவு
29
*
08
*
2012



அமரர்

## இளையதம்பி அருமைநாதன் (அருமை)

திதி : சதுர்த்தசி 19.08.2013

எம்மைப் பேணிக் காத்து இறுதி மூச்சுவரை
எம்மை வழிநடத்திய ஆருயிர்த் தந்தையே!
எம் இறுதி மூச்சுவரை நாம் உங்களை மறவோம் அப்பா
நீங்கள் இறைவனிடம் சென்ற பாதை தேடி நாம் வரும் வரை
எம்முடன் இருந்து எம்மை வழிநடத்துவீர்களாக.
இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடைய ஓராண்டு நிறைவு நினைவை
மலர்க்காணிக்கைகளால் பூசித்து எல்லாம் வல்ல
இறைவன் தாளை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு.
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(31462) (7.3)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தன் ஆலய எட்டாம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'உருவாய் அருவாய்' என்ற பொருளில் க.மனோச்குமாரின் சிறப்புச் சொற்பொழிவும், திருநெல்வேலி சிவயோகர் அற நெறிப் பாடசாலை, அனலைதீவு மனோன்மணி அம்பாள் அற நெறிப் பாடசாலை, வேலணை சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காம முருகன் அறநெறிப் பாடசாலை, புத்தூர் கன்னியர் ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

வயலின் கச்சேரியில் வயலின் இசையை ஏ.ஜெயராமன் வழங்க, அணிசேர் கலைஞர்களாக ஹார்மோனியம்-ந.செல்வச்சந்திரன், மிருதங்கம்- எஸ்.துரைராஜா, தபேலா-சதா வேல்மாறன் வழங்குவர்.

இசை அரங்கில் பாடல்களை திருமதி எஸ். ஜெயகௌரி, திருமதி எஸ்.ஜெயபாரதி வழங்க அணி சேர் கலைஞர்களாக வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்-கே.கஜன், கடம்- க.ரவிசங்கர் ஆகி யோர் கலந்து கொள்வர். (ந-86-7)

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் மாலை 6.30 மணிக்கு கலாவித்தகர் மதுரா பாலச்சந்திரக் குருக்களின் வயலின் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. (ந)

# சமய சந்நிதிகளில்...

பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகன் ஆலய தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெறும்.

யாழ். குடாநாட்டிலும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பறவைக் காவடி, தூக்குக் காவடி, செடில் காவடி, பிள்ளைக் காவடி என நூற்றுக்கணக்கான காவடிகள் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவேறும். (ந-50)

★ ★ ★

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று காலை 9 மணிக்கு முருகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவார். நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (ந)

★ ★ ★

கட்டுவன் மேற்கு நாச்சிமார் ஆலயத்தில் மணிக்கோபுர கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். தொடர்ந்து பூசைகள் அபிஷேகங்கள் நடைபெற்று சுவாமி வீதி உலா இடம்பெறும். (ந-86)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்னவிநாயகர் ஆலயம், நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலயம், ஆகிய வற்றின் தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். (ந-100)

★ ★ ★

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயப் பெரும் திருவிழா இன்று திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், அன்று மாலை உறியடித் திருவிழாவும் இடம் பெறும்.

மறுநாள் ஸ்ரீரங்கநாதர் பாதபூசை இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ந-36)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலய நடேசர் அபிஷேகம் இன்று காலை 9.30 மணிக்கு விசேட பூசைகள் அபிஷேகங்கள் நடைபெற்று சுவாமி வீதி உலா இடம் பெறும். (ந-36)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலய ஸ்ரீ சக்கரபூசை நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து புவனேஸ்வரி அம்பாளுக்கு விசேட பூசைகள் அபிஷேகங்கள் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வருவார். (ந-36)

# நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

## காத்திருக்கிறான் காலன்

*குடாநாட்டின் வீதிப் போக்குவரத்துச் செயற்பாடுகள் ஆரோக்கியமான நிலையில் இல்லை எனலாம். வீதிகளுக்கு "காப்பெற்" போட்டாலும் போட்டார்கள், சகல வாகனங்கள் எல்லாம் கண்மண் தெரியாமல் பறக்கின்றன. வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்ப வரும் சரி அல்லாதவரும் சரி விபத்தைச் சந்திக்கும்போது "உன்னை நம்பி நாங்கள், என்னை நம்பி நீங்கள்" என்று தங்கி வாழ்வோரின்- வாழ்வாதாரத்தின் அடிமடியில் அல்லவா கைவைக்கின்றனர்.*

*இந்த நிலை தொடருமானால் முறிவுநெரிவு வார்ட்டுக்களில் தங்குவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். செயற்கை அவயவங்களுடன் நடமாடுவோர் மற்றும் ஊனமுற்றோர் தொகை, விபத்தினால் சாவுகள் அதிகரிக்கும். காப்புறுதி செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து காப்புறுதி நிறுவனங்களின் காட்டில் கமைழை பொழியும்.*

*காப்பெற் வீதிகளில் வேகக் கட்டுப்பாடின்றிப் பயணிப் பதும், சாரதியப் பயிற்சிகளிலுள்ள குறைபாடுகளுமே வீதி விபத்துக்கள் அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக் கின்றன. குன்றும் குழியுமான வீதிகளில் விழுந்தெழும்பியும் புழுதி குடித்தும் வழி மேல் விழி வைத்துப் பயணித்ததை மறந்து விட்டவர்கள் காப்பெற் வீதிகளிலும், உருக்குத் தகடுகளாலான பாலங்களிலும் வாகனங்களைச் செலுத்தும் போது வேகத்தை விட விவேகத்துக்கு முன்னுரிமை கொடுப்பது நல்லது.*

*வீதி ஒழுங்குமுறைகளைக் கவனிக்க பொலிஸார் காப்பெற் வீதிகளில் நிற்கிறார்களோ இல்லையோ அந்த வீதிகளில் வருவோர் போவோரை காவு கொள்ளக் காத்திருக்கிறான் காலன் கயிற்றுடன் எருமைக்கடா மீதேறி...*

# சந்நிதியில் இன்று சப்பரம்

வடமராட்சி, ஓக. 19

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் பெருந்திருவிழாவின் 14 ஆம் திருவிழாவான சப்பரத் திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

15 ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா நாளை 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கும், 16 ஆம் திருவிழாவான தீர்த்தத் திருவிழா 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கும் கொடி இறக்கமான மௌனத்திருவிழா அன்று மாலை 6 மணிக்கும் நடைபெறவுள்ளன.

சப்பர, தேர், தீர்த்தத் திருவிழாக்களை ஒட்டி விசேட இ.போ.ச., தனியார் பஸ் சேவைகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 20 இக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொலிஸாரும் மற்றும் சிங்களப் பொலிஸாரும் சாதாரண மற்றும் சீருடைகளில் பாதுகாப்பு நட வடிக்கைகளில் ஈடுபடுவார்கள். செஞ்சிலுவைத் தொண்டர்கள் பக்தர்களுக்கான நடமாட்ட ஒழுங்குகளை மேற்கொள்வார்கள். (ந-8)

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

பூமியில் உதயம்
12*09*1988

புகழ்வழிப் பயணம்
14*09*2008



அமரர்

## துரைசிங்கம் பிரதீபன்

ஐந்து ஆண்டு ஆனதுவோ!
உன் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும், பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றோம்
உன்முகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

இல. 108, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்

(31410) (7.3)

உதயன்
19/08/2013

# வேட்பாளரை தெரிவு செய்யும்போது ஒழுக்கமும் கவனிக்கப்பட வேண்டும்

## அறிவுரை கூறுகிறார் பிரதமர்



கொழும்பு, ஓக19
மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் வேட்பாளர்களை தெரிவு செய்கின்றபோது மக்களுக்கு சேவையாற்றக் கூடிய நற்பண்புகளும் நல் லொழுக்கங்களும் உள்ள மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களை தெரிவு செய்ய வேண்டும் என பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்தார்.

புஸல்லாவ நகர சபையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் ஜயரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய மாகாண சபைத் தேர்தலானது தங்களது மாகாணத்திற்குள்ளான அபிவிருத்திப் பணிகளைமுன்னெடுப்பதற்கான தங்களுக்கான சிறந்த சேவையாற்றக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்வதற்கானதாகும்.

எனவே இத்தேர்தலின் போது உறவினர்கள் குடும்பத்தவர்கள், நண்பர்கள் என்ற உறவு நட்புகளை பார்த்து வாக்களிக்காமல் தமது மாகாணத்திற்கு சேவை யாற்றக்கூடிய நல்லொழுக்கம், நற்பண்புகளைக் கொண்டவர்களை தெரிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு சேவையாற்றக் கூடியவர்கள் தெரிவாகும் பட்சத்தில் தான் மக்களுக்கா னதும் மாகாணத்திற்கானதும் சிறந்த சேவைகள் கிட்டுவதுடன் அரசின் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க ஏது வாகும் என்றார். (எ)

## யானை மீது துப்பாக்கிச் சூடு



கொழும்பு, ஓக.19
யால சரணாலயத்தில் உள்ள கெமுனு எனப்படும் பெரிய தந்தத்தை கொண்ட யானை ஒன்றின் மீது நேற்றுமுன் தினம் இனந்தெரியாத சிலர் துப்பாக்கி தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை வனவளத்துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா உறுதிப்படுத்தியுள்ளார்.

கெமுனு எனப்படும் இந்த யானை, யால சரணாலயத்துக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் வாகனங்களுக்கு அருகில் வந்து உணவினை பெற்றுக் கொள்கின்றமை மற்றும் சுற்றுலாப் பயணிகளுடன் சுமுகமாக பழகுகின்றமை போன்றவற்றால், இது பிரபல்யம் அடைந்திருந்தது.

துப்பாக்கி சூட்டின் பின்னர் குறித்த யானைக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இன்னும் தகவல் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும் இது தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று வனவளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ)


## மரண அறிவித்தல்

### திருமதி லீலா சண்முகலிங்கம்

பிள்ளையார் கோயில் வீதி, கைதடி கிழக்கு கைதடியை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாசண்முகலிங்கம் நேற்றுமுன்தினம் (17.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன்-தையல்நாயகி தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சொர்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையா சண் முகலிங்கத்தின்(முன்னாள் செயளாலர், வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு) ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற செல்வஸ்கந்தநாதன் மற்றும் அமிர்தகணநாதன் அகியோரின் அருமைச் சகோதரியும், தேவகி, ஐங்கரன், கிரிசாந்தி, ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தாயும், சுதாபரன்,சாம்பவி, உதயசேகர், லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், சங்கவி, சகாணா, சந்தியா, சாதனா, மிகுணண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சோமசுந்தரம், இராசலட்சுமி, இந்திராதேவி, சுபத்திராதேவி ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று(19.08.2013) திங்கட்கிழமை காலை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.30மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம் பெற்று 5.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

931/3, பீற்றர்சன்லேன்,
கொழும்பு- 06.

தகவல்:
க. சண்முகலிங்கம் (கணவர்)
011 2508764


## இரத்தினக்கல் கடத்தியவர் கைது

இரத்தினக் கற்களை மலவாயிலில் மறைத்து சிங்கப்பூருக்கு கடத்திச் செல்ல முயன்ற நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான நபரொருவரே கடந்த வெள்ளிக்கிழமை இரவு 12.30 மணி யளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு பயணிக்கும் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் குகி 402 விமானத்தில் பயணித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்படவே சுங்கப்பிரிவினர் அவரை சோதனையில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கேனில் அவரது மலவாயிலில் வைரம் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவரிடமிருந்து 9 வகையான 32 இரத்தினக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் மொத்தப் பெறுமதி 80 லட்சம் ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது. (எ)

## பொருள்கள் அகற்றல்

கொழும்பு, ஓக.19
கடந்த 48 மணித்தியாலங்களுள், புரோட்டின் கலக்கப்பட்ட 99 ஆயிரத்து 641 உணவுப் பொருள்கள் சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

இலங்கை பொதுஜன சுகாதார பரிசோதகர்களின் சங்கம்இதனைத் தெரிவித்துள்ளது.

பால்மா, சொக்கலேட்டுக்கள், சீஸ் மற்றும் சீஸ் உள்ளடக்கப்பட்ட உணவுப் பொருள்கள் என்பன இவ்வாறு வெளி யேற்றப்பட்டுள் ளன. (எ)


## ஓராண்டு நினைவதனில்



அன்னை மடியில்
06.12.2000

ஆண்டவன் அடியில்
30.08.2012

### அமரர் செல்வி துஷாந்தி ஸ்ரீசோமாஸ்கந்தன்

(மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை-தரம் 7F)

ஆண்டு ஒன்று ஆனதுவோ
ஆசை மகளே,
அரும்பாகி மொட்டாகி - நீயும்
மலராக முன் மடிந்ததும் ஏன்
முற்றத்து மல்லிகையாய்
காலமெலாம் மணம் வீசி
மகிழ்விக்க வேண்டிய நீ
மறைந்ததும் ஏன்?
வார்த்தைகள் இல்லை உனை
வர்ணிப்பதற்கு
கல்விக் கரையேறி
காலமெல்ாம் ஒளி வீச
கனவு பல கண்டோம்
கானல் நீராச்சே...
நல்லாள் உனை இழந்து
நாதியற்று நிற்கின்றோம்
நாதன் தாழ் பணிகின்றோம்
நல் ஆத்ம சாந்திக்காய்



ஸ்ரீசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

ஸ்ரீசோமாஸ் அரைக்கும் ஆலை
இல. 300, நாவலர் றோட்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

உன் நினைவால் துயருறும்
பாசமுள்ள அப்பா, அம்மா,
தம்பி, தங்கை.



## கண்ணீர் பூக்கள்

ஹற்றன் நஷனல் வங்கி மல்லாவிக் கிளை உத்தியோகத்தர்
ந. உதயசேகர் அவர்களின் அன்பு மாமி

### திருமதி லீலா சண்முகலிங்கம்

அவர்கள் 17.08.2013 அன்று காலமானார். இவரது இறப்பால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர் மற்றும் ஊழியர்,
HNB -மல்லாவி.

(31489)
(10,16)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர்

### ஆசீர்வாதம் யோண் பிறிட்டோ

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு.

(31488) (10,16)



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், C.W.E)



காஞ்சிபுரம் மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (18.080.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தர்-சுந்தரம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (கனடா), புவேனேஸ்வரி, மகேந்திரன், கோணேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சுந்தரலிங்கம், காலஞ் சென்ற துரையப்பா, செல்வராசா, முத்துலிங்கம், துரைராசா, இந்திரன் சந்திரன் (பிரான்ஸ்), இராசலச்சுமி, பேபிசறோசா ஆகியோரின் மைத் துனரும், காலஞ்சென்றவர்களான பேரருள் செல்வி, தவேந்திரன் பாஸ் கரன் மற்றும் மதிவண்ணன் சங்கீதா, வனிதா (சித்த மருத்துவ மாணவி, குகேந்திரகிஸ்ணன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் போதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காஞ்சிபுரம், மாதகல். (31487) (10,16)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### வயித்தி சண்முகராசா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தி சண்முகராசா நேற்று (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08. 2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னங்கை, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (31485) (10,16)

தகவல்:
குடும்பத்தினர்.

# ரூபா 10,000 சம்பள உயர்வு

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, ஓக. 19
2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அரச சேவையாளர்களுக்கு 10ஆயிரம் ரூபாவும், தனியார் சேவையாளர்களுக்கு 5ஆயிரம் ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என அரசிடம் விசேட கோரிக்கையொன்றை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கவுள்ளது. நாட்டின் தனிநபர் கடன் 4 இலட்சமாக அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சம்பள அதிகரிப்பு போதாது. இருப்பினும், தற்போதைய நிலையில் இந்தக் கோரிக்கையைத் தான் முன்வைக்கிறார் என்று ஐ.தே.கவின் உப தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோஸப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு - இராஜகிரியவிலுள்ள ஐ.தே.கவின் தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் தற்போதைய பயணம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லதல்ல. அரசின் நடவடிக்கைகளால் மக்களுக்கு தொடர்ச்சியாக சுமையேற்றப்படுகிறது. தனிநபர்கடன் 4 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. அரச நிறுவனங்கள் அனைத்தும் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. தமது உரிமைகளைக் கோரும் மக்களை அரசு துப்பாக்கியால் சுட்டுப் பலியெடுக்கும் சம்பவங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

> 4பேர் கொண்ட குடும்பமொன் றுக்கு மாதாந்தம் ஆகக் குறைந்தது 25 ஆயிரம் ரூபா வருமானம் தேவை.

நாட்டின் வளங்கள் அனைத்தும் வெளிநாட்டவருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரசு பெருமெடுப்புடன் திறந்துள்ள கொழும்பு துறைமுகம் சீனாவின் பணத்தில்தான் முழுமையாகக் கட்டப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகத்தில் சீன நாட்டவரும் தொழில் புரிவர். அதனால் எமது நாட்டவருக்குத் தொழில்வாய்ப்பு இல்லாது போகும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்கு அமைய 4பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதாந்தம் ஆகக் குறைந்தது 25 ஆயிரம் ரூபா வருமானம் தேவை. இல்லாவிடில் ஒருவேளை கூட அவர்களால் உண்ணமுடியாது. இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் சம்பள உயர்வு கோரிக்கையை அரசிடம் முன்வைக்கவுள்ளோம் - என்றார்.

# பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிடின் தேர்தல் ஆணையாளருக்கு அறிவியுங்கள்

## சுசில் பிரேம ஜயந்த யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19
"நெடுந்தீவில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் போன்று ஏதாவது நடைபெற்றால் அது தொடர்பில் குறித்த பகுதிக்குப் பொறுப்பான பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுங்கள். அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோருக்கு அறிவியுங்கள்." என்று அமைச்சர் சுசில்பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில்

"நெடுந்தீவில் கூட்டமைப்பின் ஆதரவாளர் தாக்கப்பட்ட பின்னர் அதுகுறித்து முறையிட பொலிஸ் நிலையத்துக்கும் சென்றதாகவும் ஆனால் பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்யவில்லையென்றும் சம்பவ இடத்துக்கும் வருகை தரவில்லையென்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். அது பற்றி உங்களின் கருத்து என்ன?" என்று அவரிடம் கேள்வி எழுப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் "அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை. அந்தச் சம்பவம் போன்று ஏதாவது இடம்பெற்றால் அந்தந்தப் பகுதிக்குரிய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுங்கள். அவர்களும் நடவடிக்கை எடுக்காவிட்டால் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அறிவியுங்கள்" என்றார்.

"வலி. கிழக்குப் பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியை இம்முறை வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரச தரப்பு வேட்பாளர் தடுத்து இடையூறாகச் செயற்படுகின்றாரே. இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?" என்று இன்னொரு கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், " அதுகுறித்து முறையிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதைவிட அரச தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் காப்பெற் வீதிகளில் தேர்தல் சட்ட விதிகளுக்கு எதிராக தமது பெயர் வாக்கு இலக்கங்களை பொறித்து வருகின்றனர். எனினும் அவர்கள் தம்மை அறிமுகப்படுத்தக்கையாளும் இத்தகைய வழிமுறைகள் சிலவற்றை அனுசரித்துத்தான் ஆக வேண்டும். வலி. வடக்கில் 2009 ஆம் ஆண்டிலிருந்து கட்டம் கட்டமாக மீள் குடியேற்றம் செய்துவருகிறோம். ஒரேயடியாக, உடனடியாக எதுவும் செய்யமுடியாது.

மாகாண சபைத் தேர்தலின் பின்னர் காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் எந்தத் திட்டமும் இல்லை. மாகாண சபைகளுக்கு இந்த அதிகாரங்கள் தேவையில்லை. ' ஏனைய மாகாண சபைகள் அவற்றை கேட்கவில்லை. மாகாண சபைகள் தமக்குக் காணி ஏதாவது தேவையென்றால் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்"- என்றார். (ங-4)

## தேர்த்திருழா

யாழ்ப்பாணம், ஓக.19
கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி கோயில் வருடாந்தத் திருவிழாவின் தேர் உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளையதினம் தீர்த்தோற்சவம் இடம் பெறும். (400)

## பதவியேற்பு

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் பதில் நிர்வாக உத்தியோகத்தராக திருமதி சறோஜா குலசேகரம் வடக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளரால் நியமனம் செய்யப்பட்டு கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது பதவியைப் பொறுப்பேற்று கடமையாற்றி வருகின்றார். முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு I யைச் சேர்ந்த இவர் பல வருடங்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந-51)

## கண்காட்சி பிற்போடப்பட்டது

நூலக விழிப்புணர்வு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இன்றும் நாளையும் நடைபெறவிருந்த ஆரம்பப் பாடசாலை மாணவருக்கான "உருக்களின் உலகம் கல்விக் கண்காட்சி" தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதெனவும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் நூலக விழிப்புணர்வு நிறுவனத் தலைவர் அறிவித்துள்ளார். (400)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## விமானப்படையினர் இருவரை சுட்டுக்கொன்றார் கோப்ரல்

றுள்ளது.
காதல் விவகாரமே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. தலையில் சுட்டுக்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்த கோப்ரல் பிரியதர்ஷன (வயது - 27) திருகோணமலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார்.

கெலிஓயாவைச் சேர்ந்த பண்டார (வயது - 22), நாவலப்பிட்டியவைச் சேர்ந்த பிரேமதிலக்க (வயது - 21) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் கடமையிலிருந்த படை அதிகாரியே அங்கிருந்து துப்பாக்கியுடன் உல்லாச விடுதிக்கு வந்து அங்கிருந்த இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், தனக்குத்தானே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

சடலங்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 22ஆயிரம் விண்ணப்பம் நிராகரிப்பு

தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பத்திருந்தனர். இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகக்குறைந்தளவான அதாவது 831 விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றுள்ளன.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பெரும்பாலும் கண்டி மாவட்டத்துக்கு உரியன எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-400)

## கூட்டமைப்பு உறுப்பினர் தாக்கப்பட்டார்

வடமராட்சிப் பிரதேசத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

பிரசார நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த அவரை வதிரிச் சந்தியில் கடமையில் இருந்த பொலிஸார் மறித்துள்ளனர. பின்னர் அவரிடமிருந்த பிரசார அட்டைகளைப் பறித்த பொலிஸார் அவரைத் தாக்கியுள்ளனர்.

வதிரிச் சந்தியில் இரு பொலிஸார் என்னை மறித்தனர். என்னிடமிருந்த பிரசார அட்டைகளைப் பறித்த அவர்கள் காரணமின்றி என்னைத் தாக்கினர்.

அவர்களிலிருந்து மதுவின் வாடை வீசியது. தாக்கிய பின்னரே என்னை விடுவித்தனர்" என்று ஜோன் ஜெப்றிக்கோ உதயனு'க்குத் தெரிவித்தார். (ங-5)

## 2/3 பெரும்பான்மையைப் பெற்று தமிழரின் பலத்தை நிரூபிப்போம்

மைப்பை ஆதரிப்பதுடன், வேட்பாளர்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும் தேர்தல் பரப்புரைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்" - என்று கோரினர்.

பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பருத்தித்துறை நகரசபை, பிரதேசசபை, கரவெட்டி பிரதேசசபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பின் வடமராட்சி வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் வன்முறை 129 ஆக உயர்வு

சம்பவங்கள் - பதிவாகியுள்ளன.

இதேவேளை வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் இதுவரை தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு எவையும் பதிவாகவில்லை என கபே தெரிவித்துள்ளது. (ஐ-400)

## வடக்கு மாகாணத்துக்கு....

இலங்கை' என்ற திட்டத்தின் அடிப்படையில் வடமாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களைக் கையாள்வது தொடர்பான குழுவொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் பிரதம செயலர் தலைமையில் இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் 46 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இதேவேளை, எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக பிரதேசவாரியாக உபகுழுக்களையும் நியமிப்பதற்கு இந்தக் கூட் டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தக் குழுமூலம், வடக்கு மாகாணத்தின் நிர்வாக மையமாக மாங்குளத்தையும், கலாசார மையமாக யாழ்ப்பா ணத்தையும், வர்த்தக மையமாக கிளிநொச்சியையும், துறை முக நகராக மன்னாரையும் அபிவிருத்தி செய்யும் வகையில், திட்டங்கள் வகுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர கலந்துரையாடலில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் வீமல் வீரவன்ஸ, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வீடமைப்பு அமைச்சின் செயலர் விமலசிறி, தேசிய பௌதிக திட்டமிடல்திணைக்களப் பணிப்பாளர் ஜெயசேகர, வடக்கு மாகாணசபையின் செயலர் விஜயலக்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதமே இருக்கும் நிலையில், வடக்கு மாகாண அபிவிருத்திக் குழு நியமிக்கப்பட்டுள்ளமை பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு கிடைக்கக் கூடிய அதிகாரங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்களை தேசிய திட்டமிடலுடன் இணைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். (ஐ)

**மலிவு விலையில்**
நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அண்ணா விற்பனை நிலையத் தில் அண்ணா உற்பத்திப் பொருள்கள் யாவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா விற்பனை நிலையம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(C/11419)
(7.3)

## போர்குற்றவிசாரணையை கோரினால் இலங்கை நிராகரிக்கும்

களை சேர்ந்த 30 அதிகாரிகள் மனித உரிமை ஆணையாளரைச் சந்திக்க சந்தர்ப்பம் கேட்டுள்ளதாக தெரியவருகிறது. இவர்கள் இலங்கை அரசுக்கு எதிராக சுமத்தப்பட் டுள்ள போர் குற்றங்கள் தொடர் பாக சர்வதேச விசாரணை ஒன்றை நடத்த இணங்க வேண்டும் என நவிப்பிள்ளையிடம் நேரடியாகக் கோரவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே இலங்கை அரசு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைவரும் நவநீதம்பிள்ளையை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சந்திக்க உள்ளதாகவும் இதன் போதே, போர் குற்றச்சாட்டுகள் பொய்யானது என்று அவருக்கு தெளிவுப்படுத்தப்பட உள்ளதாகவும் அரச உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து நாள் பயணமாக இலங்கை வரும் மனித உரிமை ஆணையாளர், இலங்கையில் பல்வேறு தரப்பினரை சந்தித்து பேச்சு நடத்த உள்ளதாக அவரது பேச்சாளர் ரூபட் கோல்வில் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கரவெட்டி ஐங்கராவை வீழ்த்தியது வல்வை நெற்கெழு கழுகுகள்

பருத்தித்துறை, ஓக.19
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடையே நடத்தி வரும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வல்வெட்டித்துறை நெற்கெழு கழுகுகள் சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை நெற்கெழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தினர் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர்.

அதற்கமைய களமிறங்கிய அவ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் நிதானமாக ஓட்டங்களை சேர்த்து இலக்குகளை கைவசம் வைத்து விளையாடினார்கள்.

10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தினர் 7 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.



கரவெட்டி ஐங்கரா சார்பாக ரவீந்திரன் 20 ஓட்டங்களையும், ரகுவர்மன் 19 ஓட்டங்களையும், தீபன் 10 ஓட்டங்களையும், பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்ட கழுகுகள் விளையாட்டுக் கழகத்தினரின் செந்தூரன் 3 இலக்குகளையும் நந்தபாலன், டிலக்சன் மற்றும் ரமேஷ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு 77 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பாட ஆரம்பித்த நெற்கெழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தினர் மிகவும் சிறப்பான ஆட்ட திறமையை வெளிப்படுத்தினர்.

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தினர் தமது களத்தடுப்பு வியூகங்களை மாற்றி அமைத்து வேகப் பந்துவீச்சாளர்களை பயன்படுத்திய போதும் அவர்களால் ஓட்ட வேகத்தை மட்டுமே கடுப்படுத்த முடியவில்லை. அதிரடியாக ஆடிய நெற்கெழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தினர் 8.1 பந்து பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் கோகுலன் ஆட்டமிழக்காது அதிரடியாக 39 ஓட்டங்களையும், ரமேஷ் 18 ஓட்டங்களையும், திவாகர் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 2 இலக்குகளை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது நெற்கெழு கழுகுகள்.

பந்துவீச்சில் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தின் திருமாறன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக நெற்கெழு கழுகுகள் அணியின் கோகுலனும், தொடர் நாயகனாக கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகத்தின் ஜீவனும் தெரிவு செய்யப்பட்டனர். தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஜெயதர்சனும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக் ஜீவனும் தெரிவாகினர். (ற-34)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.19
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
இரவு 7.30 மணி
கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் எதிர் மீசாலை சீமா விளையாட்டுக்கழகம். (ற-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக.19
நவாலி சென்.பீற்றர் விளையாட்டுக் கழகம் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங் கள்:
பி.ப. 3.30 மணி
இளவாலை யங்கென்றில் எதிர் அராலி சென்.ஜேம்ஸ்.
பி.ப. 4.30
சென்.அன்ரனிஸ் எதிர் றெட்றெஞ்சர்ஸ் (ற-23)

## யங் ஒலிம்பிக்ஸ் இறுதிக்குத் தகுதி

திருகோணமலை, ஓக.19
திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு யங் ஒலிம்பிக்கஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதலாவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் சோடியாக் கழகத்ததை எதிர்த்து யங் ஒலிம்பிக்ஸ் கழகம் மோதியது.

50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற சோடியாக் கழகத்தினர் முதலில் களத் தடுப்பை மேற்கொண்டனர்.

யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 37.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. 185 என்ற இலகுவான இலக்கினை பெற்றுக் கொள்ள களம் இறங்கிய சோடியாக் கழகம் 36.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

யங் ஒலிம்பிக்ஸ் கழகம் 29 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற)

# அரையிறுதியில் யூனிபைட்

யாழ்ப்பாணம், ஓக.19
வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிறண்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனிபைட் விளையாட்டுக்கழக அணி 45 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் உஷாந்தன் மூன்று சிக்சர்கள் 12 பவுண்டரிகள் அடங்கலாக 107 ஓட்டங்களையும், கஜன் 48 ஓட்டங்களையும், சத்தியராஜ் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பிறண்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக சஞ்சீ 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் சுதேஸ் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் ராம் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் ஜனகன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

25 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிறண்ஸ் விளையாட்டுக்கழக அணி 28.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 151 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

அதில் ஜனகன் 39 ஓட்டங்களையும், அஞ்சனா 26 ஓட்டங்டகளையும், டினேஸ் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசாந்தன் 7.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், சத்தியராஜ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், உஷாந் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், மகியூஸ்ண் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், அனு 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.19
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், கச்சாய் சிறி முருகன் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துமட்டுவில்கண்ணகை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கச்சாய் சிறி முருகன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்துமட்டுவில்மோகனதாஸ்பி அணி மோதியது. இதில் கச்சாய் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, ஓக.19
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உள்ளுராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட சனசமூக நிலையங்களூடாகப் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான 6 பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என்றும் கரைச்சிப் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட, பங்கு பற்ற ஆர்வமுள்ள விளையாட்டுக் கழகங்கள் கரைச்சிப் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-426)

### கரவெட்டி ஞானம்ஸ் கிரிக்கெட் தொடர்

# கிண்ணத்தை சுவீகரித்தது மாலுசந்தி மைக்கல்

பருத்தித்துறை, ஓக.19
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய 5 பந்துப் பரிமாற்றங்கள் 6 பேர் பங்கு பற்றும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீர[illegible]க களமிறங்கிய வீரர்கள் ஆட்டத்தின் முதல் பந்து பரிமாற்றத்தில் இருந்தே அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர்.



துடுப்பாட்ட வீரர்கள் தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை குவித்தனர் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணியினர்.

அதில் தினோஜன் அதிரடியாக ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும், அச்சுதன 13 ஓட்டங்களையும் ரகுவரன் 9 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் கரவெட்டி ஞான வைரவர் அணி சார்பாக பவன் 2 இலக்குகளையும், வினோ மற்றும் சிந்துஜன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு அதிரடியாக ஆடினால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கினர் கரவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தினர். அந்த அணியின் ஆரம்ப வீரர்கள் ஏமாற்றமளிக்க, அணியின் ஓட்டவேகம் மந்தமாகியது. 4.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர் கரவெட்டி ஞானவைரவர் அணியினர்.

அதில் சுலோஜன் 11 ஓட்டங்களையும், நிதர்சன் 6 ஓட்டங்களையும், அருண் 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் சார்பாக அச்சுதன், வினோத், தினோஜன் மற்றும் ரபேந்திரன் தலா ஓர் இலக்கையும் சாய்த்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கிண்ணத்தை சுவீகித்தனர்.

ஆட்ட நாயகனாக மாலிசந்தி மைக்கல் கழகத்தின் தினோசன் தெரிவு செய்யப்பட்டார். தொடரில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய அணியாக வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவுசெய்யப்பட்டது. (ற-34)

## உபாதை காரணமாக பிரெஸ்னன் நீக்கம்

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ரிம் பிரெஸ்னன் உபாதைக்குள்ளாகியுள்ளதை அடுத்து இங்கிலாந்து அணியில் இந்தப் பருவகாலம் முழுவதும் ஆட்டங்களில் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெற்றுவரும் ஆஷஷ் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பங்கேற்காத ரிம் பிரெஸ்னன், 2ஆவது ஆட்டத்தில் ஸ்டீவன் பின்னிற்குப் பதிலாக அணியில் சேர்க்கப்பட்டார். இதுவரை சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ள ரிம் பிரெஸ்னன், 4ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு முக்கியமான பங்களிப்புகளை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் 4ஆவது ஆட்டத்தில் பின்னர் ரிம் பிரெஸ்னனின் கீழ் முதுகுப் பகுதியில் உபாதை ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக 5ஆவது ஆஷஷ் டெஸ்ட் மற்றும் அதன் பின்னரான ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள், '20/20' சர்வதேச ஆட்டங்களிலும் ரிம் பிரெஸ்னன் பங்குபற்ற முடியாது போயுள்ளது.

அண்மைக் காலத்தில் உபாதைகளால் தடுமாறி வரும் ரிம் பிரெஸ்னன், இதற்கு முன்னர் முழங்கை உபாதைக்காக சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்தார்.

தற்போது ரிம் பிரெஸ்னன் உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில் 5ஆவது ஆட்டத்தில் அவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர்களான கிரஹம் ஒனியன்ஸ், கிறிஸ் ட்ரெம்லெட் அல்லது ஸ்டீவன் பின் ஆகியோரில் ஒருவர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

## கபில்தேவின் பயிற்சியாளர் சாவு

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவின் பயிற்சியாளர் தேஷ் பிரேம் ஆசாத் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவுக்கு முதலாவது உலகக் கிண்ணம் (1983) வென்று தந்தவர் கபில்தேவ். இவருக்கு 1970ஆம் ஆண்டுகளில் பயிற்சியாளராக இருந்தவர் தேஷ் பிரேம் ஆசாத். 1986ஆம் ஆண்டு சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சாரியா விருது கிடைத்தது.

உடல்நலக்குறைவு காரணமாக சண்டிகரில் உள்ள தனியார். ஆஸ்பத்திரியில் 15 நாள்களுக்கு முன் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று ஆசாத் உயிரிழந்தார். (ற)




## போல்ட் கைகளில் இன்னுமோர் தங்கம்

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உலக தடகள போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிச்சுற்றில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 19.66 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கத்தை வென்றார். இரண்டாவதாக உசைன்போல்ட்டின் அணித்தோழரான வாரென் வெர் 19.79 பந்தய தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

உசைன் போல்ட் 2009ஆம் ஆண்டு பெர்லினிலும், 2011 ஆம் ஆண்டு தேகுவில் நடைபெற்ற 200 மீற்றர் போட்டியில் அவர் தங்கம் வென்று இருந்தார்.

இந்நிலையில் இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து அவர் மூன்றாவது முறையாக தங்கம் வெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மொத்தம் இதுவரை அவர் 7 தங்கம் பெற்றுள்ளார். (ற)

## விலகினார் உமர் அக்மல்


சிம்பாப்வே கிரிக்கெட் தொடரிலிருந்து காயம் காரணமாக பாகிஸ்தான் வீரர் உமர் அக்மல் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் அணி, சிம்பாப்வே சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட், ஒருநாள் மற்றும் '20/20' ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இத்தொடர் அடுத்த வாரம் தொடங்க உள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் உமர் அக்மல் காயம் காரணமாக விலகியுள்ளார். அக்மலுக்குப் பதிலாக விக்கெட் காப்பாளர் பணியை சர்பராஸ் அகமது மேற்கொள்வார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் விளையாடிய அக்மலுக்கு காயம் ஏற்பட்டது. மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து வந்த மருத்துவ அறிக்கையில் முழு உடற்தகுதியுடன் உமர் அக்மல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது' என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## உறவை முறித்தார் ஷரபோவா



புதிய பயிற்சியாளரின் கீழ் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டும் கலந்து கொண்ட பின்னர் தனது பயிற்சியாளரை நீக்கியுள்ளார் மரியா ஷரபோவா.

நான்கு முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம்வென்ற மரியாஷரபோவா, உலகின் முதல் நிலை வீராங்கனையாக திகழ்கின்றார்.

இவர் கடந்த மாதம் 8 முறை பட்டங்களை வென்ற ஜிம்மி கோனர்ஸ் என்பவரை பயிற்சியாளராக நியமித்தார்.

இந்நிலையில் சின்சினாட்டி தொடரில் கலந்து கொண்ட பின்பு, தனது பயிற்சியாளரிடமிருந்து விலகுவதாக ஷரபோவா அறிவித்துள்ளார். இத்தொடரில் அமெரிக்க வீராங்கனையான ஸ்லோவன் ஸ்டீபன்சிடம் தோற்றுப் போன பின்பே இந்த முடிவு எடுத்துள்ளதாக தெரிகிறது.

அதனையடுத்து கலிபோர்னியாவில் உள்ள தனது மையத்துக்கு திரும்பி விட்டார் ஜிம்மி கோனர்ஸ். (ற)

## 200ஆவது ஆட்டத்துடன் ஓய்வு பெறுவார் சச்சின்

கர்சான் காவ்ரி



200ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறுவார் என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கர்சான் காவ்ரி தெரிவித்துள்ளார்.

சாதனை நாயகன் சச்சினின் சத சாதனைக்கு பின்பு அவரது ஓய்வு குறித்து முன்னாள் வீரர்கள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கர்சன் காவ்ரி கூறியதாவது.

"இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் எல்லா சாதனைகளையும் படைத்து விட்டார்.

அடுத்ததாக அவர் 200ஆவது டெஸ்ட் மைல்கல்லை எட்டும் ஆவலில் இருப்பார் என்று உறுதியாக கூற முடியும்.

இந்த ஆண்டின் இறுதியில் இந்திய அணி தென்னாபிரிக்காவில் விளையாடும் போது அவர் 200ஆவது டெஸ்டில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை பெறுவார்.

அதன் பின்பு அவர் டெஸ்டில் இருந்தும் ஓய்வு பெற்று விடுவார் என்று நினைக்கிறேன். ஓய்வு பெற்றாலும் டெண்டுல்கர் கிரிக்கெட்டை விட்டு முழுமையாக ஒதுங்கக்கூடாது.

எப்போதும், கிரிக்கெட்டுடன் தொடர்பு வைத்து கொண்டு ஏதாவது ஒரு வகையில் பங்களிப்பு அளிக்க வேண்டும். அவரது சாதனைகளை ஏறக்குறைய யாராலும் முறியடிக்க முடியாது என்றும் 200 டெஸ்ட் போட்டி என்பதை நம்ப முடியவில்லை" என்று தெரிவித்தார். 40 வயதான சச்சின் இதுவரை 198 டெஸ்டில் ஆடி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# சம்பியனாகத் தெரிவாகியது கந்துரட்ட

இலங்கையின் '20/20' சம்பியனாக கந்துரட்ட அணி தெரிவாகியுள்ளது. பஸ்னாகிர அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் கந்துரட்ட அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஸ்னாகிர அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்து தடுமாறிய பஸ்னாகிர அணி 2 இலக்குகளை இழந்து 17 ஓட்டங்களையும், 5 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறியது.

இறுதி நேரத்தில் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சிறப்பாகஷ ஆடிய போதிலும் அவ்வணியால் 109 ஓட்டங்களையே பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் பஸ்னாகிர அணி சார்பாக அஞ்சலோ மத்தியூஸ் 49 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 11 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் இரட்டைப்படை ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் கந்துரட்ட அணி சார்பாக நுவான் குலசேகர 4 பந்துப்பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். தவிர டில்ஹார லொக்குஹெட்டிகே, தம்மிக்க பிரசாத் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

110 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கந்துரட்ட அணி 17 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறப்பான ஆரம்பமாக கந்துரட்ட அணி 5.5 பந்துப்பரிமாற்றங்களில் முதலாவது இலக்குக்காக 40 ஓட்டங்களைப் பகிர்ந்ததுடன், தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அவ்வணிக்கு இலகுவான வெற்றி கிடைக்கப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் கந்துரட்ட அணி சார்பாக உபுல் தரங்க 30 பந்துகளில் 32 ஓட்டங்களையும், கௌஷால் லொக்குவாராய்ச்சி 25 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 19 பந்துகளில் 21 ஓட்டங்களையும், திலின கண்டம்பி 18 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பஸ்னாகிர அணி சார்பாக இசுரு உதான, அஞ்சலோ மத்தியூஸ், கோசல குலசேகர மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக நுவான் குலசேகர தெரிவானதோடு, இத்தொடரின் நாயகனாக கோசல குலசேகர தெரிவானார்.

இத்தொடரின் சிறந்த பந்துவீச்சாளருக்கான விருது தம்மிக்க பிரசாத்திற்கும், சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது டினேஷ் சந்திமாலுக்கும் வழங்கப்பட்டது. (ற)




# கம்பீருக்கு விட்டுக் கொடுத்த சேவாக்

கௌதம் கம்பீருக்காக தன்னை தேடி வந்த வாய்ப்பை விட்டுக் கொடுத்துள்ளார் விரேந்திர சேவாக்.
தற்போது கம்பீரும், சேவாக்கும் இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இருவருக்கும் மீண்டும் இடம் கிடைக்குமா என்ற சந்தேகமும் உள்ளது.
இந்த நிலையில் தனக்கு கிடைத்த வாய்ப்பை சக வீரரான கம்பீருக்கு விட்டுக் கொடுத்துள்ளார் சேவாக்.
இங்கிலாந்தின் எஸ்ஸக்ஸ் கவுண்டி அணிக்காக அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்டார் கௌதம் கம்பீர்.

இந்த வாய்ப்பு முதலில் சேவாக்கிற்கே வந்தது. எனினும் அவர் தான் கம்பீரின் பெயரை பரிந்துரை செய்துள்ளார்.
இதுதொடர்பாக பிரபல நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், "எஸ்ஸக்ஸ் அணிக்கு விளையாட கிடைத்த வாய்ப்பை சேவாக், கம்பீருக்கு திருப்பி விட்டுள்ளார். சேவாக் கிடைக்காததால்தான் கம்பீரை நாடியதாக எஸ்ஸக்ஸ் பயிற்சியாளர் பால் கிரேசன் கூறியிருப்பது கவனத்துக்குரியது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் சேவாக் ஏன் மறுத்தார் என்பதற்கான காரணம் வெளியாகவில்லை. (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

திருமதி
**அமிர்தலிங்கம் மகேஸ்வரி** (அம்மாக்கா)



கரம்பொன் தெற்கைப்பிறப் பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் மகேஸ்வரி நேற்றுமுன்தினம் (17.08. 2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், சுந்தரம்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், பத்மாவதி (பிரான்ஸ்), தயாவதனி (கொழும்பு), போசன்(பிரான்ஸ்), ஈசன்(பிரான்ஸ்) சுரேந்திரன் (பிரான்ஸ்), சுபோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், இராசம்மா, சுப்பையா, சிவகாமசுந்தரி, சபாரத்தினம், செல்லத்துரை, தளையசிங்கம், லோகராசா, குலசிங்கம் ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், சிவநாயகம், சிறிநந்தினி, கேமலதா, பேரின் பவதி, ராஜ்மோகன் ஆகியோரின் மாமியும், மயூரி, வினோத், அஜித், சதுசன், கோகுலன், லக்ஷயா, லக்ஸ்மன், அபிநயா, செந்தூஸ், சிவதீஸ், யதுசன், மதுஷா, நிதுசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகானா, ரோஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு க.குலசிங்கம், இல. 355, பலாலி வீதி, ஊரெழுவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈசன்- இலங்கை- +94752087960
தீபன்- இலங்கை- +94776076320
சுரேஸ்- இலங்கை- 0772251704
(31474)(10,3)

தகவல்:
குடும்பத்தினர்.

30 வருட கால அச்சுத்துறை அனுபவம்
அதிகூடிய அளவிலான அச்சுப்பதிப்பு நேரச்சு இயந்திரம் (Offset) எம்மிடம் மட்டுமே!
இன்று முதல் அறிமுகம்
4 வர்ண அச்சுப் பதிப்பு (4 Colour Offset Printing)
• போஸ்டர்கள் (19½ x 28¾) • கல்வெட்டுப் புத்தகங்கள் • துண்டுப் பிரசுரங்கள்
• பருவகால வெளியீடுகள் • கலண்டர்கள் • விண்ணப்பப் படிவங்கள்
• மாணவர் கையேடுகள் • திருமண அழைப்பிதழ்கள் • Screen Printing
போன்ற அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ள
பாரம்பரிய அச்சுத்துறையின் வழிகாட்டி
பாரதி பதிப்பகம்
இல.430, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 3081 E-mail: bhaarathiiprint@gmail.com

என்றும் 1 தரம்! 1 விலை!!
போலி வாக்குறுதிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
6 Colour
அதி உயர் தரத்துடன்
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் மற்றும்
திருமண அழைப்பிதழ்கள்



நல்லூர் உற்சவகால விசேட காட்சியறை
23-08-2013 வெள்ளிக்கிழமை முதல்
(பருத்தித்துறை வீதி, நல்லூர் சிவன் கோவில் முன்பாக)
அதிகூடிய வாடிக்கையாளர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
விவாஹாஸ்
CALL : +94 21 221 9999
244, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
www.vivahas.com vivahas@live.com
vivahascards vivahas

3 தரம்! 3 விலை!!
இப்பொழுது அதி உயர் தரத்திலான டிஜிற்றல் பிறிண்ட் பனர்களை மூன்று விலைகளில் உங்களின் தேவைகளிற்கேற்ப பெற்றுக்கொள்ளுங்கள்.
★ தொகையான வேலைகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன... ★
மற்றும் உயர்தர ஓவ்செற் பிறிண்டிங்
புத்தகங்கள்
லேபிள்கள்
துண்டுப் பிரசுரங்கள்
போஸ்டர்கள்
அழைப்பிதழ்கள்



ANDRA DIGITAL PRINTING
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000 Mob : 0776622981, 0777481696.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.